Spencer-made book-rack. Portraits, Landscape-paintings, and Cine-art pictures are on the walls. Chandran sits reading a text-book near his elegantly furnished writing table. The door is kept closed. There is tapping outside and Chandran opens the door.

Sankar—(*entering*) Good morning! Sorry to disturb you.

Chandran—No! No! what disturbance? I am not dipping into my books like you in these early hours of the morning.

Sankar—Has the postman come? I am sure of a money-order to-day.

Chandran—That means a good lunch for me! (*Referring to his parents at the village*) These country-brutes do not realise the responsibility and send money in proper time to keep their......

Sankar—Hush! they really know much, and feel much. What can they do in their present state of affairs? It is you who should economise and as far as possible refrain from this kind of high living which means only outward show. I don't believe in this. "So may the outward shows be least themselves. The world is still deceived with ornament."

(*tapping at the door*)

Chandran—(*opening the door*) Sankar, here is the Postman!

Sankar—Any money-order or letter for me?

Postman—No Sir; a letter (*reading the address*) Mr Chandran......

Chandran—For me! Give it. Let me see.

(*Postman goes away*)

[*Begins to read by himself and laughs out*]

Sankar—Ah! Why do you laugh, man! What news! your jolly countenance shows something......

Chandran—Really! Shall I give you the gist? Marriage! Whose Marriage?

Sankar—Perhaps yours!

Chandran—True, true. My approval required!

Sankar—Is that all? What about the girl? Modern or what you call 'country-brute'?

Chandran—(*reads again but disappointed*) Ah! that I can't find here. Anyhow let me see 'it.' I shall start by the next train. There, "the truth will out."

ACT II

SCENE 1

One fine evening in the Women's Social Club. Just by the side of the main entrance is the secretary's room fashionably decorated and elegantly furnished. The furniture includes a writing table and a chair with inkstand, blotting pad, pin-cushion and cabinet of stationery, a luxurious couch, and a tall screen of fine Chinese workmanship. Just behind the screen, the fruniture includes a very handsome dressing table with silver-backed hair brushes, and toilet articles. It is an oblong room and we see that towards the corner on the right, the long wall has a door leading to the hall. The hall is fully furnished with all the requirements of a club—chairs, tables, playing toys, sets of articles for indoor games etc. The other side of the hall leads to the Reading Room and a small library fully equipped to suit the requirements and conveniences of the readers. Our interest is located here where three women-students are in a half-reading and half-conversing indolent mood.

Miss Lalita—(*throwing up the papers in impatience*) Where is Leela ?

Miss Vimala—Yes. She is always late. She will take hours for dressing alone. I don't like to disappoint my friends by unnecessary delay.

Miss Kamala—Why hasn't Sarasu turned up yet ?

Miss Leela—(*entering*) She won't be coming to-day. I saw her poring over her books. She is suffering from, I think, 'the examination fever'. Is she going to fare well in it, *minus* general knowledge ? I don't like book-worms ; well, I don't.

Lalita—By the by, may I know whom you are inviting to the coming celebrations ?

Leela—I think I am bound by duty to invite Mr Chandran.

Lalita—Mr Chandran ! No congratulations on your choice.... that fool who failed twice in the Intermediate.

Vimala—That fellow who is the laughing stock in our class and is making himself clownish by his ill-suiting gaudy dress.

Kamala—That fellow who is always at the very bottom even in such a silly thing as sports—whose father is a country-brute and who will one day wed him to a 'gutter-snipe'. We will rather tolerate a clown as a guest than this silly dandy.

Leela—(*much struck by these words*) Enough ! I really repent such a silly proposal. What an astonishing effect do outward shows have upon the mind ! *No*, I wont......... All right, let us go out and play tennis. (*All go away*).

SCENE II

Chandran in his house in the village. The house is a small one, yet kept as neat as neat can be. His father is the village munsiff there and owns some decent landed property. Chandran is sitting on a rickety chair while his father is sitting in a swing.

Father—For how many days..

Chandran—(*impatiently*) For two days only. It is very difficult to obtain leave now-a-days. The Principal is so strict.

Father—So we must mind our business straight.

Chandran—May I know the particulars of your letter? I couldn't find anything...........

Father—Yes, that is what I am now coming to, I have settled your marriage with the daughter of a mirasdar here. I wish to know of your approval. Shall we go to their house this evening?

Chandran—Is she educated?

Father—I don't think she is...........

Chandran—Oh! what a fall! What a disappointment! (*Slightly angered*) I was all the time thinking that I was to marry a well-educated modern girl. Shall I not be looked upon with contempt by my friends, if my wife cannot speak or write English and if she is not in a position to go to lectures and be a respectable member of society? I can't tolerate such nonsense.

Father—Calm yourself, Chandru! Because you are breathing the air of modern times you cannot therefore look into human hearts. You blindly believe in modern fashion.

Know that you are a youth without any experience in this world. Your educated modern girl does not fare well as a wife. She is fully preoccupied with dressing and all other nuisance of the kind. She is always interested in novels and newspapers and cares more for her friends and guests than you. In the evenings she is much irritated to see you, if you don't possess a car to have a ride or if you don't take her to places of recreation. You can realise in a moment that you can't afford to bear all this. Our mirasdar owns property amounting to Rs 40,000 and he is ready to give Rs 5,000 as dowry. Moreover that girl............

Chandran—Please stop your theoretical vedanta, father. I have practical experience of modern life. We are daily seeing 'modern beauties' in our own college. Practice makes man perfect. I am sure, and I know how, a modern girl can bestow upon me all happiness; and that is, 'earthly bliss'. You speak of property and dowry in preference to a modern educated girl. What is the use of wealth? Wealth may come, wealth may go, but happiness cannot be brought. Dowry! Damn that archaic custom! Haven't you heard of social reformers vehemently attacking the dowry system? Haven't you seen such social films as 'Vara Vikrayam' and 'Mallipelli' which bring to light the evils of your dowry system? Well, I can't approve of this proposal. I won't even see that common country-girl lest my eyes should do a sin!

Father—All right. Do as you please! Experience will teach you better. No marriage for you this year.

(*goes out angrily*).

Chandran—(*within himself*) Before next year experience will teach my father better and my proposal to marry lovely Leela will meet with success.

(*goes out for a walk on the country side*).

ACT III

SCENE I

Day of farewell celebrations. Chandran in his study room. Till now he has not received the promised invitation card. He is sitting on his cot musing, expecting it every moment. His anxiety increases as the time approaches. It is 2 p.m. The function is to begin at 4. Hearing the tapping at the door he runs towards it and opens.

Sankar—(*entering*) Hullo, Chandran! Good evening.

Chandran—(*concealing his disappointment*) Good evening (*offers a seat*).

Sankar—Have you received your expected invitation? Let me see it.

Chandran—Invi...........

Sankar—(*learning from his face*) Hasn't she sent it?

Chandran—She has not. She might have forgotten all about it in her excitement. Yet I am sure that if I go there, she will greet me in all readiness. Yes, I will go.

Sankar—Yes. Dress up. It is already time. Try to be in time there, if you want to be there at all. (*goes away*).

SCENE II

At the Women's Social Club. The central hall presents a grand and majestic appearance to the visitors. At the entrance to the hall stands a scout to let in only invited guests and members of the Club. There comes

our Chandran, smartly dressed in a velvet jacket and Cashmere trousers. His collar, dyed Woton blue, is part of his shirt and turns over a garnet-coloured scarf of Indian silk, secured by a turquoise ring. The arrangement of his tawny hair doesn't, comparatively present a handsome appearance like his costly attire. He is at the entrance now.

Scout—Card, please.

Chandran—Eh! Why do you want it? Forgotten to bring!

Scout—Can't allow, Sir.

Chandran—(*somewhat mortified*) Why, when I say, I have lost it.........

Scout—Once forgotten, then lost, then..............

Chandran—(*feeling thoroughly snubbed*) Can you call Miss......

Scout—Sorry, Sir. I've to attend to my duty.

Chandran feels disappointed. He stands at the entrance expecting at every instant the arrival of Leela. Yes, she appears—she really appears—before his very eyes. Not with that smiling, blooming, charming face but in unruffled indifference; moreover in his very presence he sees her greeting another friend of hers. Chandran stands amazed, bewildered, and like a statue. The world seems to whirl before him. Becoming conscious of his state, he retires in confusion.

SCENE III

Chandran at the door of his room. He shuts the door and walking briskly to and fro about the room begins to soliloquise.

"Ah! Disappointment! Defeat! Is that a dream? No ...perfectly real...Can I refuse to trust my own eyes?...What a fool I am? How I denied the golden truths that came out of Sankar's pure heart! How I incurred the displeasure of my father by my angry words acting under the pernicious influence of these forward modern girls! Sankar—San-

kar is the only person who judges character and can judge it. What a fool I was to be carried away by external appearance! Who can doubt those women of the 18th and 19th century type? They have been, and will ever prove, I doubt not,—at least I have come to realise it now—modest maidens and agreeable companions. They are the prop and pillar of happy life. They are honest creatures who are noted for their sensibility and modesty. 'Modesty is the richest ornament of a woman.' Beauty is not in clothes which these silly fashionable girls swear by. 'Beauty without virtue is like a flower without perfume.' These fashionable ladies with glasses, powder and perfumed dress and high-healed slippers—with their modesty torn to shreds by western civilisation—want to see woman's predominance established in the world. Will I allow it? No...... I am now taught by experience which, as Sankar has said, is the best teacher. I will write a letter......now......this very moment......to my father repenting of my impertinence. *(sits down in his chair).*

The rest of the story, need not be shown in action. Luckily, Chandran is pardoned by his father and greeted by all when he goes to the village again. As he has already informed his father of his readiness to marry the mirasdar's daughter, he finds there all matters arranged, and learns that the date has been fixed. What a happy turn! His father himself now proposes that no dowry should be received! Thus the marriage takes place not with a modern girl, as he long wished but in a modern fashion (without dowry) which every genuine social reformer holds dear to his heart.

D. GOVINDARAGHAVAN,
IV Class.

CITY BEAUTIFUL

CITY Beautiful! Many a meeting the ex-mayor of Madras had addressed to make Madras a beautiful city which has now become historic by the celebration of its tercentenary, perpetuating its glorious past. True, make the city beautiful! But, pray, what are those elements that go to make a city or a town beautiful? Those elements belong to two classes of creation, one the Individuals called "Pedestrians," and the other, "Natives of the pavements."

But, pray, who is that so called "pedestrian"? The pedestrian is that prosaic person, a relic of the dark ages, whom your civilisation has not yet succeeded in eliminating from the face of the earth. A person of peculiar quality, he or she finds a great delight in interfering with the rights of the minority, the helpless creatures, who ride mostly in cars—and at times in other vehicles too, as a sort of concession to the prejudice of medieval times that is still lurking in the minds of a section of the human species. The safeguards with which this "minority" is provided in the form of horns and vociferous pneumatic engines have been rendered ineffective by that eminent category of persons. And to those who question the minority status bestowed upon this upper class, it is enough to point out that they possess the two essential characteristics of a 'minority', as that word is understood by the "friends of India." The motorists are less in number, and what is more, they are aggressive, a qualification which is enough to give them the indisputable status of a minority.

So, when the pedestrian is bent upon leaving the pavement and intrudes upon the path of the motorists and takes a delight in being run over, what can the poor motorists do? There seems to be no "day of Deliverance" to them.

I am a pedestrian myself, pure and simple, except when lounging in my arm chair. I then leave this sordid *terra infirma*, if I may coin that, and soar to the dizzy heights of noble imagination, there to ride on Rolls-Royce and Terralanes! What a delight there is in such imaginative flights, though they are not flights of love! You enjoy all the pleasures of a ride except, unfortunately, the petrol smell. It is a pity that people have not yet cultivated a taste for this petrol smell! They have to be raised to that standard of appreciation. Here as in other and more weighty matters, the motorists cannot come down to the level of the mob, ("great unwashed crowd" as Shakespeare puts it) and produce a different smell by making use of any other liquid. The callous indifference of those who are at the helm of affairs, towards the question of the patriation of the repedestrians to the pavements can only be paralleled by the unparalleled indulgence of the "Natives of the pavement."

This leads us on to the other class of creation, the "Natives of the pavement," who in no small measure, contribute towards the "City Beautiful." Some may be surprised and even shocked to hear of the existence of this tribe. But I honestly confess that I do not spring a surprise by revealing their existence. These "natives" are a species of human beings who are born on the pavement, who starve on the pavement and who die on the pavement. Or to put it differently, they are produced and reduced on the pavements! So it is their 'birth right' (here I differ from the Rt. Hon'ble Sastri in its meaning which was given to it at Kumbakonam), not only to sit and sleep on the pavement but also to spit on it and prick the bubble of the pedestrians' pride who parade upon it, when they do not dare to intrude upon the realm of the motorists.

Then who is to blame? Certainly not the 'natives.' They are part and parcel of Nature and as weeds grow on the unpaved ground after a rain, they grow on the paved ground

before a rain. It does not stop here. They die on the pavement as well and then in cities like Madras, you have the delightful spectacle of the corpses stretched on the pavement. You are given the splendid opportunity of decreasing the overwhelming weight of your purse by subscribing to the fund collected by the philanthropists there (may their tribe increase as that of Abo Ben Adam!). But let me warn you against a calamity that may befall you late in the day or the following. You should not swoon, if you see the same corpse exhibited on a different pavement! Surely, these "natives" are business-like! It is but proper that their birthright (here also I differ from Sastri) of begging should not be interfered with. What a callous injustice has been done to the beggars of Bangalore by an order of the District Magistrate of the place which prevents them from extending their profession to the Civil and Military Station! Perhaps this is another instance of a majority oppressing a minority as the beggars in Cantonments *are* a minority community. Hands off the beggars!

These are all the privileges of the pedestrians to witness and enjoy. To tread upon the mucus of the "Natives" and measure the length of your body on the ground or to take a light jump in the air, or to wade through the gorgeous apparels relinquished by lepers; to stamp upon the hundred other products manufactured by them, in spite of the war and the scarcity of raw materials; to be followed like the grand Moghul or the Mikado by a train of women with countless children around them, all conferring upon you titles which you can never even dream of earning otherwise and a hundred other things besides, are some of the peculiar privileges of the pedestrian class!

How ignominious should a person be to think of housing-schemes for the poor and thus deprive the pedestrian of his private rights and public privileges!

Hands off these "Natives," and also the Pedestrians! No interference with their rights, please. Down with those who deprive the pedestrian of the right to witness and enjoy the holy sights of the 'natives of the pavement'! Let the city fathers beautify the city as they like but let them not contemplate the dangerous housing scheme for the poor or the equally dangerous scheme of making the pedestrians stick to the end of the road. Let them not, (the worshipful Mayor and the Hon'ble members of the Corporation of Madras,) under the pretext of beautifying the city, deprive the citizens and visitors of Madras of the rare opportunity of enjoyment and recreation by looking at the corpses exhibited with such fine taste and artistry!

K. SRINIVASAN,
IV B.Sc. Hons. (Maths.)

VESPERS

THEN AND NOW



விஞ்ஞான மனப்பாங்கு (2)

(சென்ற இதழின் தொடர்ச்சி)

14773

விஞ்ஞான மனப்பாங்கின் தன்மைகள்

1899-ம் ஆண்டின் பிரிட்டிஷ் அசோஷியேஷன் (British Association) கூட்டத்தில் தலைமை வகித்த சர் மைக்கேல் பாஸ்டர் (Sir Michael Foster) தம் தலைமைப் பேருரையில், விஞ்ஞானத் துறையிலீடுபட்டுள்ளவரின் தகுதிகளைப்பற்றிப் பேசும்போது, அவற்றில் பின்வருபவை முக்கியமான மூன்று அமிசங்கள் என்று கூறினர்.

"தலையாவதாக, அவன் (விஞ்ஞானி) பெற்றி, தானீடுபட்டிருக்கும் ஆராய்ச்சியுடன் ஒன்றுபட்டதாய் இருக்கவேண்டும். மெய்யைக் காண ஆராய்பவன் உண்மையைக் கடைப்பிடிக்கிறவனுயிருத்தல் வேண்டும். இவ்வாறிருத்தல் "உண்மை பேசுதல்" மட்டும் என்பதைவிட உயர்ந்தது.

"இடையாவதாக, சுறுசுறுப்பான மனத்தையுடையவனுயிருத்தல் வேண்டும். இயற்கை, நமக்குப் பலவகையான சைகைகள் காட்டித் தன் இரகசியங்களை மெல்ல மெல்லக் கூறிக்கொண்டே யுள்ளது. இவற்றை யறிந்து அர்த்தத்தைக் காண ஆயத்தமாய் இருத்தல்வேண்டும்.

"கடையாவதாக, விஞ்ஞான ஆராய்ச்சி மனப்பயிற்சியேயாயினும், அதற்குத் தைரியமும் அவசியம். இதுவே, அவ்வப்போது தோன்றும் பலவகை இடையூறுகளால் மனந்தளராமல் உறுதியுடன் தன் ஆராய்ச்சிகளிலீடுபடச் செய்யும்."

உண்மையைக் கடைப்பிடித்தல், சுறுசுறுப்பாயிருத்தல், தைரியமாயிருத்தல் எனும் இம்முக்குணங்களும், விஞ்ஞானத் துறையில் மட்டுமல்ல, எத்துறையிலும் வெற்றிபெற இன்றியமை

யாதலை எனச் சிலர் கூறலாம். ஆம். இது ஒப்புக்கொள்ள வேண்டியதே. விஞ்ஞானத் துறையில் வெற்றிபெற அபூர்வமான திறமை அவசியமில்லை யென்பதை எடுத்துக்காட்டவே தாம் இவ்வாறு மொழிந்ததாக ஸர் மைக்கேல் பாஸ்டர் கூறுகின்ருர். விஞ்ஞானிகள் சாதாரண மானிடரே. அவர்கள் குணங்கள் யாவர்க்கும் பொதுவானவையே. ஹக்ஸ்லி (Huxley) விஞ்ஞானம் என்பது ஒழுங்காய் வரையறை செய்யப்பட்ட சாதாரண அறிவே யென்றும், விஞ்ஞானிகள் என்பார் இவ்வறிவைத் திரட்டும் வழிகளிற் பயிற்சிபெற்ற சாதாரண மக்களே யென்றும் கூறியுள்ளார்.

இவ்வாறு உரைப்பதால், விஞ்ஞானிகளுக்கும் மற்றத் துறைகளிலுள்ளவர்க்கும் எவ்வகை வேற்றுமையுமில்லை என்பதை அதிகமாய் வற்புறுத்துவதாய்த் தோன்றலாம். அது உண்மையே. ஏனெனில் விஞ்ஞான மனப்பாங்கென்பது, ஒருவகையான விஞ்ஞான சாத்திரத்தைக் கற்பதால் ஏற்படுவதன்று. எவ்வகையான விஞ்ஞான சாஸ்திரமும் பயிலாத பலர் விஞ்ஞான மனப்பாங்குடனிருக்கின்றனர். அவர்களிடம், சில மூல சித்தாந்தங்களையும், தெளிவானதொரு பிரச்சினையையும் கூறினுல், சரியான விடையளிப்பார்கள். "விஞ்ஞானம்" என்ற ஒரு தனிப்பொருள் உண்டென்று எண்ணுதல் பேதைமையேயாகும். விஞ்ஞானம் கற்றல் வேண்டும் எனக் கூறுதல் 'மூச்சுவிடவும், ஜீரணம் செய்யவும் கற்றல் வேண்டும்' எனக் கூறுதல் போன்றதேயாம்.

ஆயினும், விஞ்ஞான மனப்பாங்கு என்பதற்கு ஒரு தனிக் குணம் உண்டு. இதைப்பற்றி இன்னும் ஆராயவேண்டும். ஸர் மைக்கேல் பாஸ்டரின் அபிப்பிராயத்திற்கும், இம்முடிபுகளுக்கும் முரண்பாடு ஒன்றும் இல்லை.

உண்மையை அறிவதில் ஆர்வம்

உண்மையைக் கடைப்பிடித்தல் என ஸர் மைக்கேல் பாஸ்டர் கூறிய, மெய்ப் பொருளை ஆய்ந்தறிவதில் ஆர்வமுள்ள விஞ்ஞான

மனப்பாங்கு, அதன் சிறந்த தன்மையாகும். செம்மையாகக் கவனித்தலும், ஐயந்திரிபுஅற எடுத்துரைத்தலும், விஞ்ஞானியின் குணங்களாம். 'நீ கண்ட பொருளின் உண்மையை நன்கு அறிந்துகொள்' என்பதே விஞ்ஞானத்தின் முக்கிய நியதியாகும். ஆனால் இவ்வாறிருத்தல் எளிதன்று. எளிதான பிரச்சனைகளின் மெய்ப்பொருளை யறிதல் கூடக் கடினம். இதற்குக் காரணம், மனித சுபாவத்திலுள்ள ஒரு வகையான நுண்கலை உணர்ச்சியாம். இன்னும் ஒரு சிறிது, சரியான வகையில் பயிற்சியின்மையும் எனலாம். பயிற்சியில்லாததால், தான் நினைத்த வண்ணமே வெளிக் காட்சிகள் தோன்றுகின்றன. விஞ்ஞான முறையில் ஒழுங்கான பயிற்சி பெறுதிருத்தலும் மற்றொரு காரணம். தாம் கண்டவற்றுடன், தாம் காண நினைந்தவற்றையும் கலந்து, இவற்றால் விளைந்ததையே தாம் கண்ட காட்சியின் கோலமெனக் கூறுகின்றனர் பலர்.

சாதாரண மனிதர் 'சுமாராக' அல்லது 'கிட்டத்தட்ட' என்ற விபரங்களுடன் திருப்தியடைகின்றனர். ஆனால், இயற்கை அவ்வாறிருப்பதில்லை. இயற்கையில் மயிரிழை போன்ற சிறு வேற்றுமையும் வேற்றுமையே. ஆதலின், சாதாரணமாக உலகியலில் உபயோகிக்கும் அளவுக் கருவிகளைக் கொண்டு இயற்கையிலுள்ள வேற்றுமைகளை அளக்கமுடியாது. ஆதலின், நுண்ணிய அறிகுறிகளைக் கவனிக்காததால்—வெளியில் நீட்டிக்கொண்டிருக்கும் மிகச் சிறியப் பகுதியைக் கவனிக்காததால், பெரும் புதையலை யிழந்தாற் போன்று, பல அரிய பெரும் பொருள்களை இழக்க நேரிடும். இவ்வாறு, வழி தவறித்தான் ஆராய்ச்சி செய்ய முற்பட்ட விஷயத்தினின்று வெகுதூரஞ் சென்று, நெடு வழி நடக்க நேரிடும்.

பல சிறுவர்கள் தாம் கனவில் கண்டவற்றிற்கும் நேரில் கண்ட சம்பவங்களுக்குமுள்ள வேற்றுமையை யறியார். இதைப் போலவே தூரதேசங்களுக்குச் சென்று வந்த சில யாத்திரீகர்

கள் தாங்கள் நேரில் கண்டவற்றையும், நாட்டுமக்கள் மொழிவாயிலாயறிந்தவற்றையும் கலந்து, விவரங்களைத் தம் குறிப்புப் புத்தகங்களில் எழுதியுள்ளனர். இவ்வாறு செய்பவரைப் பழங்காலங்களில் மட்டுமன்று, இக்காலத்திலும் காணலாம்.

விஞ்ஞானத்துறையில் வேலை செய்பவர், தங்கள் அளவுக் கருவிகளும், குறிப்புகளும் திட்டமானவையென்றும், அவற்றின் திட்டம் வேலை செய்பவரின் திறமையையும் பொறுத்ததெனவும் அறிவார்கள். வானசாஸ்திரக் கணிதங்களில் இவ்வாறான அளவைகளில் பிசகு உண்டு என அறியப்பட்டு ஏற்ற திருத்தங்கள் செய்யப்பட்டுள்ளன. இயைபு (Chemistry), பூத (Physics) சாஸ்திரங்களிலும் இவ்வாறானவை உள்ளன. ஆனால் இம்முறையைச் சகல சாஸ்திரங்களும் ஏற்றுக்கொள்ளவேண்டும். விஞ்ஞானக் கல்வியின் அடிப்படையாக விருப்பவை அளவைகள். சிலருக்கு உற்ற முறையில் அளக்கும் திறமை கிடையாது. எவ்வாறு யாவரும் தச்சுத் தொழிலில் திறமையடைய முடியாதோ, அவ்வாறே பலருக்குப் பிசகின்றி அளக்கும் சக்தியில்லை.

ஆகையால், சற்றேனும் பிசகின்றி மிகவும் சரியாய் அளப்பதற்குப் பயிற்சியும் பழக்கமும் அவசியம். துலாக்கோல், இரணக்கத்தி, கோணமளக்கும் கருவி இன்னும் இவைபோன்ற நுண்மையான கருவிகளை யுபயோகிக்கப் பயிற்சியும் பழக்கமும் அவசியம். இன்னும் தான் கண்டதைக் கண்டவாறே படம் வரைவதில் திறமையும் அவசியம். இதனாலேயே அகாஸிஸ் (Agassiz), விஞ்ஞான முறையில் பயின்ற ஒருவன், சற்றேனும் உண்மையினின்றும் பிறழாமலிருத்தல் அவசியமான எத்தொழிலிற்கும் தகுதியைப் பெறும் சாதனத்தைப் பெறுகிறான், எனக் கூறுகிறார். பல நூற்றாண்டுகளுக்கு முன்பே, பேகன் (Bacon) பின்வருமாறு கூறியுள்ளார்.

"நாம் பொருள்களின் மெய்யுருவைக் காணும் பழக்கத்தைப் பெறவேண்டும்." அதாவது : தோற்றத்திற்கும் உண்மைக்

குமுள்ள வேற்றுமையை யறியவேண்டும். இதுவே விஞ்ஞான மனப்போக்கின் தத்துவமுமாகும். இதற்கு உதாரணமாகச் சாதாரண வஸ்துக்களை ஊடுருவிச் செல்லும் எக்ஸ் ரேஸ் (X-rays) என்னும் கதிர்களைக் கூறலாம். ஆதலின் **கண்டித**மாயிருத்தலே விஞ்ஞானத்தின் அடிப்படையான கருத்தாம். க்ளார்க் மாக்ஸ்வெல் (Clerk Maxwell) என்ற பிரபல **விஞ்ஞானி**யைப்பற்றிப் பின்வருமாறு கூறப்படுகிறது. "அவர் இளம் பிராயத்தில் அடிக்கடி கேட்ட கேள்வியாதெனின் 'அது எவ்வாறு இயங்குகின்றது? எங்குச் செல்லுகின்றது?' என்பதேயாம். நிச்சயமற்ற பதில்களால் அவர் திருப்தி யடைவதில்லை. திரும்பவும் 'அது செல்லும் இடத்தை நன்கு குறிப்பிட்டுச் சொல்' எனக் கேட்பாராம்."

ஆதலின் திருத்தமானதும் திட்டமானதுமான அறிவு எவ்வகையில் ஏற்பட்டாலும், அதன் போக்கும் நோக்கமும் ஒன்றே. சில சமயங்களில் இவ்வாறு கண்டிப்பாய் அளத்தல் என்பது மிகைபடுத்தப்படுகின்றது எனக் கூறலாம். சாதாரண வாழ்க்கையில் இவ்வளவு கண்டிப்பு அவசியமில்லையென்றும் வீணே காலதாமதமே அதனாலுண்டாகும் எனவும் எண்ணலாம். இவ்வாறான பொறுமையற்றவர் இக்கண்டிப்பு உண்மையின் மீதுள்ள பற்றுலும், மெய்ப்பொருள்களை அறிய வேண்டுமெனும் ஆர்வத்தாலும் விளைவது எனக் கருதவேண்டும். இவையே பேரறிவைவிட மேலானவையெனவும் தெளியவேண்டும். அறிவு விருத்தியை விட இவைகளே முக்கியமானவை.

முற்கூறியவை ஹக்ஸிலியின் கருத்துகள். அவர் சொல்லிலும் செயலிலும் உண்மை துலங்கியது. தன் சுயசரிதையில் அவர் கூறியுள்ளதை, அவை நமக்கு நினைவூட்டுகின்றன. அவர் கூறுவதாவது :

"நான் இவ்வாழ்க்கையெனும் குன்றின்மீது ஏறத்தொடங்கிய காலத்தில் என் இலட்சியங்கள் எவையெனின் 'இயற்கை

யைப்பற்றிய அறிவைப் பரவச் செய்தலும், என்னாலியன்றவரை விஞ்ஞான முறைகளையும் ஆராய்ச்சி முறைகளையும் வாழ்க்கையிலெழும் எல்லாப் பிரச்சினைகளுக்கும் பிரயோகிக்கச் செய்தலுமே; ஏனெனின் வயது முதிர முதிர, பலம் அதிகரிக்க அதிகரிக்க, பின் வரும் கருத்துகளும் என் மனதில் ஆழமாய் ஊன்றின. இவ்வுலகில் மனிதர் படும் துயரத்தைப் போக்கும் மருந்து யாதெனில், உண்மையான ஆர்வத்துடன் கூடிய எண்ணங்களும் செயல்களுமேயாம்; இவ்வுலகில் விகாரமான அமிசங்களை மறைக்கும் கபட மக்களின் பாசாங்கு எனும் போர்வையை நீக்கலுமேயாம்.''

'''உண்மையான ஆர்வத்துடன் கூடிய எண்ணங்கள்' எனும் ஆணித்தரமான சொற்களை என் பிரயோகித்தோம் எனின், விஞ்ஞான நிபுணர் பலர் தமக்கு உண்மையின் மீதுள்ள ஆழ்ந்த பக்தியையும் போலிக் கருத்துகள் மீதுள்ள இகழ்ச்சியையும் நன்கு வெளிப்படுத்தியுள்ளனர். பொருளில்லாக் கருத்துகள் குழந்தைகள் விளையாடும் கிலுகிலுப்பையின் ஒலிபோன்றவை. ஆனால் ஞானமோ மனிதப் பருவத்திற்கேற்றது என க்ளேன்வில் (Glanville) கூறியுள்ளார்.''

ஹக்ஸ்லி பின்வருமாறு கூறியுள்ளார். "என் வயது அதிகமாக அதிகமாக எனக்கு ஒரே ஒரு விஷயம் தெளிவாகின்றது. அது யாதெனின், ஒரு மனிதனின் பவித்ரமான செயல், 'இதையே நான் உறுதியாய் நம்புகிறேன்' என உணர்ச்சியுடன் கூறுதலேயாம். வாழ்க்கையில் நாம் அடையும் நலங்களும் உட்படும் பெருந் தண்டனைகளும் இது ஒன்றையே பற்றி நிற்பவை.''

பேசுவதில் சாவதானம்

உண்மையின் மீதுள்ள ஆர்வத்திற்கடுத்தபடியான விஞ்ஞானப் போக்கின் குணம் யாதெனின், சாவதானமாயிருத்தல் என்பதே. மூல சித்தாந்தங்கள் நிச்சயமாய் நிர்ணயமானாலன்றித் தீர்மானமாய் எதையும் கூறுவதற்கில்லை. அவசரமாய்க் கிடைத்த முடிவுகளைப்பற்றி ஐயுறவேண்டும். எளிதாயும் மனத்தைக் கவ

ரும்படியாயும் இருக்கின்றவற்றை ஒப்புக்கொள்ளத் தயங்கவேண்டும். விஞ்ஞானத் துறையிலுள்ளவர் எப்பொழுதும் தாமஸ் மகான் (St. Thomas) போன்று, சந்தேகத்துடன் இருக்கவேண்டும். ஆனல் திருப்திகரமாக விளக்கப்பட்ட உண்மைகளை மனப்பூர்வமாயும் உறுதியுடனும் நம்பவேண்டும். ஆதலின் எதையும் திட்டமான முறையில் அறியவேண்டும் எனும் குணத்தைப் பெறுதல், எதையும் சந்தேகிக்கும் குணத்தைப் பெறுதல் போலவே, எளிதானதன்று. பேராசிரியர் ப்ரூக்ஸ் (Prof. Brooks) தாமெழுதிய 'பிராணி நூலின் அடிப்படையான பொருள்கள் (Foundations of Zoology) என்ற நூலில் கூறுவதாவது: "புத்தியைப் பெருக்கும் குணங்களில் இச்சந்தேகப்படும் குணத்தைப் பெறுவது கடினம். சரியான சான்றுகளில்லாத கருத்துக்களை விட்டுவிட்டு வேறு கருத்துகளுக்குத் தாவுதல் சாதாரண குணம். ஆனல் கட்டுப்பாட்டுக்குட்பட்ட புத்தியின் வெற்றி சாவதானமான தீர்மானமேயாகும்." இவ்வாறு எதைப்பற்றியும் சந்தேகத்துடனிருப்பதும், யாவற்றையும் பரிசைக்ஷ செய்து பார்க்க வேண்டுமென்ற போக்கும் பேராசிரியரின் இலட்சணங்கள் எனப் பின்வருமாறு பிளிஜெண்டி ப்ளாட்டர் (Fliegende Bläter) என்ற நூலில் காணப்படுகின்றது. "பேராசிரியர் என்பவர் வேறொரு அபிப்பிராயமுள்ளவர்."

ஆதலின் இவ்விஞ்ஞானப் போக்கையுடையவர், உண்மையையறிய எப்பொழுதும் யூகங்களையும் கருது கோள்களையும் கொண்டவர்களாயிருப்பார்கள். இவ்வாறு கற்பனு சக்தியை விஞ்ஞானத்தில் உபயோகித்தல் யாவருமறிந்த முறையே. இதை ஒருவாறு புத்தியிலேயே செய்யும் சோதனைமுறையென்று கூறலாம். இதனல் வெளிப்பொருள்களைக்கொண்டு செய்யவேண்டிய சோதனைகள் தோன்றுகின்றன. ஆனல், இம்முறை நிபுணருக்கே ஏற்றது. அரைகுறைப் பயிற்சி பெற்றவர்க்கு இதனல் அபாயம் உண்டு. ஏனெனில், நன்கு பரிசைக்ஷ செய்யப்படாத சோதனைகளைச் சோதித்தறிந்த விதிகளாக எடுத்துக்காட்டும் போக்கு

அவர்களிடம் தோன்றும். பேடிஸன் (Bateson) கூறியவாறு, நன்கு கட்டுக்கடங்கிய விஞ்ஞான மனப்பாங்கு, விஞ்ஞானத்தின் பெயரால், இன்று தோன்றி நாளை மறைவதும் நன்கு துலக்கப் படாததுமான விஷயங்களைப் பாமரர்க்கு எடுத்துக்காட்டும் போக்கைத் தடுக்கும். ஹக்ஸ்லி பின்வருமாறு உறுதியாய்க் கூறியுள்ளார். "சான்றுகளால் முற்றும் ருசுப்படுத்த முடியாதவற்றை உறுதிமொழிகளாகக் கூறுதல் தவறுமட்டுமன்று; அது ஒரு பெருங் குற்றமாகும்."

டார்வின் (Darwin), 'உயிர் இனங்களின் உற்பத்தி (Origin of Species) என்ற நூலை வெளியிடுமுன், பரிணமக் கொள்கையைப்பற்றி ஹக்ஸ்லி கொண்டிருந்த சமுசயவாதமே, விஞ்ஞான அடக்கத்திற்கு ஒரு சிறந்த எடுத்துக்காட்டாகும். அவர் லேமார்க்கின் (Lamarck) சித்தாந்தங்களைக் கவனத்துடன் கற்றிருந்தார். அவற்றைப்பற்றி ஹெர்பர்ட் ஸ்பென்ஸருடன் (Herbert Spencer) பல வாதங்கள் நடத்தியுள்ளார். "என் நண்பர் விவாதித்த திறமையும் அவர் எடுத்துக்காட்டிய பல பொருத்தமான திருஷ்டாந்தங்களும் என் சமுசயத்தை அகற்றவில்லை. என்னுடைய வாதம் இரு அடிப்படையின் பொருள்களைப்பற்றி நின்றது. முதலாவது, அன்று வரை ஒரு வகை வர்க்கம் மற்றொன்றாய் மாறலாம் என்பதை நிரூபிக்கத்தக்க சான்றுகளில்லை. இரண்டாவது: அவ்வாறு மாறலாம் என்பதற்கு அவர் காட்டிய காரணங்கள் தெளிவாய் விளக்குபவையாக இல்லை. அக்காலத்திருந்த அறிவு வளர்ச்சியின் நிலையினின்று நான் கொண்ட முடிவைத் தவிர வேறு எதற்கும் ஹேது இல்லை."........."நாங்கள் ஆராய்ச்சி செய்தும் கண்டுபிடிக்க முடியாமலிருந்த பொருள் யாதெனில், ஒருவகை வர்க்கத்தை மற்றொன்றாய் மாற்றும் ஜீவப் பொருள் உண்டா இல்லையா எனும் பிரச்னையின் விடையே. எங்களுக்குப் பலவகையான அனுமானங்களில் நம்பிக்கையில்லை. உண்மையாவென நேரில் பரிசை செய்து பார்த்து, அதில் வெற்றிபெறும் விதிகளையே நாங்கள் கண்டுபிடிக்க எண்ணினோம்.

'உற்பத்தி' நூல், நாங்கள் எவ்வகையில் எங்களாராய்ச்சியை நடத்தவேண்டும் என்பதற்கு வழிகாட்டியாய் இருந்தது. ஆதலின் உண்மையையே விரும்புபவர்க்கு, நியாயமான ஒரே வழி, டார்வின் கூறியவற்றை ஒப்புக்கொண்டு அதனின்று வெளிப்படும் விஷயங்களை நேரில் நிரூபிக்கமுடியுமா முடியாதாவென்று ஆராய்வதேயாகும்." இச்சொற்கள் விஞ்ஞானங் கமழுபவையாய் உள்ளன. விஞ்ஞானப் போக்கை நன்கு விளக்க இவையே உற்றவையாம்.

ஆதலின் 'ஜாக்கிரதையாயிருத்தலே' விஞ்ஞானத்தின் முக்கிய தன்மையாகும். எவ்வாறு சூடுபட்ட குழந்தை நெருப்பைக் கண்டு அஞ்சுமோ, அவ்வாறே விஞ்ஞானப் போக்கும், ஊன்றிக் கவனியாமலும் நன்கு ஆராயப்படாமலும் விளைந்த தீர்ப்புகளாலும் வதந்திகளாலும் வெளித் தோற்றத்தாலேய்க்கும் சித்தாந்தங்களாலும் ஏமாற்றமடைந்து, இப்பொழுது மிகவும் எச்சரிக்கையும் அவநம்பிக்கையுடனும் இருக்கின்றது. இவ்வெச்சரிக்கையில் மிகவும் கடினமானதும், இன்றியமையாததுமான பகுதி யாதெனின், முடிவுக்கு வருங்கால் நம் விருப்பு வெறுப்புகளைப் புகுத்தாமலிருத்தலேயாம். நாம் கொள்ளும் முடிவுகள் நமது அனுபவத்தையும் சமூக வாழ்க்கையையும் பற்றி நிற்பவை. நமது அனுமானங்கள் நம்மைச் சூழ்ந்துள்ளவற்றைப் பொறுத்தவையாகவே யிருப்பவை. ஆனால் அவற்றை விஞ்ஞான உண்மைகள் என வெளியிடுமுன் இவ்வகையான ஆளைப்பொறுத்த தொடர்பை அவற்றினின்று நீக்கவேண்டும். விஞ்ஞான முடிபுக்கும், சாதாரண அபிப்பிராயத்திற்குமுள்ள வேற்றுமை இதுவே யாகும். பேராசிரியர் கார்ல் பியர்ஸன் (Prof. Karl Pearson) கூறுவதாவது: "விஞ்ஞானி தன் தீர்மானங்களினின்று தன் மயத்தை அகற்ற முயலவேண்டும். தன்னைப் போன்றே பிறர் மனத்திலும் உண்மையெனப்படும் வாதங்களையே வெளியிடவேண்டும். உண்மைப் பொருள்களைத் தகுந்த முறையில் வகுத்தலும், அவற்றின் தொடர்பையும் சம்பந்த அசம்பந்தங்

களைப் பற்றிக் கூறுவதுமே விஞ்ஞானத்தின் நோக்கம். இவற்றி னின்று மட்டும், தன் சொந்தக் கருத்துக்களைக் கலக்காமல், ஒரு வகையான முடிவுக்கு வருதலே விஞ்ஞானப் போக்கின் இலக்கண மாகும்.

[விஞ்ஞானத்தின் இலக்கணம் (Grammar of Science 1900 p. 6).]

பாரடே (Faraday) கூறுவதாவது: "பல விஞ்ஞான ஆராய்ச்சியாளரின் மனத்தில் தோன்றும் பல எண்ணங்களும் கருத்துக்களும் அவர்களின் தீர்க்காலோசனையாலும் தற்சோதனை யாலும் கருதப்பட்டு உண்டானவை. இவற்றைப் பற்றி உல கம் யாதும் அறியாது. வெளியிடப்பட்டவை, கருதப்பட் டவைகளில் பத்திலொரு பங்குக்கும் குறைந்தவையே. பூத சாஸ்திரிகள் பலர் கூறும் யோசனைகளையும் கேட்கவேண்டும். ஆனால் தன்னுடைய அறிவால் மட்டுமே முடிவுக்கு வரவேண்டும். வெளித் தோற்றங்களால் நடுநிலையினின்று வழுவக்கூடாது. தனக்குப் பிரீதியான கருத்துகளைப் புகுத்தக்கூடாது. ஒரே வகையான இனத்தவனாகவாவது கொள்கையையுடையவனாகவா வது இருத்தல்கூடாது. ஆளைக்கண்டு மயங்காமல் கூறும் விஷ யத்திற்கு மதிப்பளிக்கவேண்டும். உண்மையே அவன் முக்கிய இலட்சியமாயிருத்தல்வேண்டும். இவற்றுடன் விடாமுயற்சியும் விரவியபோது உண்மை குடிகொண்டுள்ள கோயிலின் திரைக்குப் பின்செல்ல எண்ணலாம்."

வீஸ்மன் (Weismann) போன்ற விஞ்ஞானிகள், புது விஷ யங்கள் கண்டுபிடிக்கப்பட்டு, அவற்றைத் தாம் அறிந்தபோது, தம் அபிப்பிராயங்களை மாற்றிக்கொள்கின்றனர் எனச் சிலர் குறைகூறுகின்றனர். இவ்வாறு கூறுதல் மதிமயக்கமே. ஏனெ னில் வீஸ்மன் போன்றவர் செய்வதே சரியான விஞ்ஞானமுறை. பேராசிரியர் பாயிண்டிங் (Prof. Poynting) இக்கருத்தைச் சிறந்த முறையில் கூறியுள்ளார். "விஞ்ஞானக் கலையின் அனு

மானங்கள் ஒவ்வொரு நாளும் மாறிக்கொண்டேயிருக்கின்றன. பழைய அனுமானங்கள் சரியானவையல்லவெனத் தள்ளப்படுகின்றன. புதியவை தோன்றுகின்றன. ஆனால், நன்கு ஆராயப்பட்ட பொருள்களின் பலவகையான பாகுபாடுகளும், அவற்றினால் அனுமானிக்கப்பட்டும் பரீக்ஷிக்கப்பட்டும், பின் விஞ்ஞான சாஸ்திரத்திற் சேர்த்துக்கொள்ளப்படுகின்றன."

(தொடரும்)

நவநீதகிருஷ்ணன்.

ஸர் ஸி. வி. ராமன் ஒளி

ஒளி என்னும் சொல்லை இரண்டு விதமான பொருள்களில் வழங்குவதுண்டு. ஒன்று கண்ணிலே உண்டாகும் புலன் உணர்ச்சி. மற்றொன்று புலனுக்கு விஷயமாகிய பொருள். பௌதிகவியலில் பெரும்பாலும் இந்த இரண்டாவது அர்த்தமே கையாளப்பட்டு வருகின்றது. ஒரு பொருளிலிருந்து புறப்பட்டு வரும் ஒளி நமது கண்ணிலே படும்போது அப் பொருள் நமது கண்ணுக்குப் புலனாகிறது என்று சொல்லுகிறோம். சூரியனிடமிருந்து வெப்பம், வெளிச்சம் ஆகிய இரண்டையும் நாம் பெறுகிறோம். இவையிரண்டும் கிரணங்களாகவே நம்மை வந்தடைகின்றன. இந்தக் கிரணங்களெல்லாம் பிரபஞ்சமெங்கும் வியாபித்திருக்கும் (Ether) விசும்பிலேற்படும் அலைகள் என்று சொல்லுவார்கள்.

குளத்திலே ஒரு கல்லை விட்டெறிந்தால் அது விழுந்த இடத்திலிருந்து அலைகள் தோன்றி நீர்ப்பரப்பு முழுவதும் பரவுகின்றதை எல்லோரும் பார்த்திருக்கலாம். சிறிது நேரத்திலே இவை அடங்கிவிடுகின்றன. ஆனால், ஒரு குச்சியைத் தண்ணீரில் முழுக்கி அதை ஆட்டிக்கொண்டே இருந்தால் அலைகள் விடாமல் உண்டாகிப் பரவிக்கொண்டிருப்பதைக் காணலாம். தண்ணீர்ப் பரப்பின்மீது ஒரு சிறு நெட்டித் துண்டை மிதக்கவிட்டால் அதனடியில் அலைகள் செல்லும்போது அத்துண்டு மேலுங்கீழுமாக ஆடுவதைக் காணலாம். ஆனால் அது தன்னிடத்தைவிட்டுச் சிறிதும் நகர்ந்து செல்லுவதில்லையென்பதையும் பார்க்கலாம். இதனால் ஒரு உண்மை வெளிப்படுகிறது. அதாவது அலைகள் நாற்புறமும் பரவிச் சென்றாலும் தண்ணீர் அவ்வாறு பரவி ஓடுகிறதில்லை. தவிர ஒவ்வொரு நீர்த்துளியும் தானிருக்கும் இடத்திலேயே நின்றுகொண்டு மேலுங்கீழுமாக மட்டுமே ஆடுகிறது.


Yours sincerely
C. V. Raman
14.2.1941

ஒவ்வொரு துளியும் ஒரு செகண்டிலே இயற்றும் துடிப்புக் களின் எண்ணிக்கை அந்த அலையின் அடுக்கம் (Frequency) என்று சொல்லுவார்கள். நீர்ப்பரப்பில் ஒரே மாதிரியாகத் துடிக்கும் இரண்டு அடுத்தடுத்துள்ள துளிகளிடைப்பட்ட தூரத்தை அலையின் நீளம் என்று கொள்வார்கள்.

மேற்கூறிய நீர் அலைகளைப்போல ஒளிக் கிரணங்களெல்லாம் விசும்பில் ஏற்பட்ட அலைகள் என்றும், இவ்வலைகள் மின்காந்த இயல்பு வாய்ந்தனவென்றும் காட்டப்பட்டன. தவிர வெப்ப அலைகள், (Radio waves) வானக அலைகள், X—கிரணங்கள் எல்லாம் ஒளி அலைகளைப் போல மின்காந்த அலைகளே என்றும் அவைகளுக்குள்ள வேற்றுமை அலைநீளத்திலேற்பட்ட வேற்றுமையே ஒழிய வேறில்லை என்றும் அறியப்பட்டது. இம் மின்காந்த அலைகள் மாருத ஒரே வேகத்தோடு செல்லுகின்றன. இந்த வேகம் ஒரு செகண்டிற்கு 1,86,000 மைல் ஆகும்.

சூரிய வெளிச்சத்திலே இருக்கும் ஒரு பொருளை முப்பட்டைக் கண்ணுடி வழியாகப் பார்த்தால் அப்பொருளின் விளிம்புகளிலே பலவர்ணங்கள் தோன்றுவதைப் பார்க்கலாம். இதிலே தோன்றும் நிறங்களின் வரிசை வானவில்லில் உள்ளதைப்போலிருக்கும். ஒரு இருண்ட அறையினுள்ளே, ஒரு சிறு துவாரத்தின் வழியாகச் சூரியனது ஒளியைப் புகச் செய்து, அந்த ஒளிக்கற்றையின் வழியிலே ஒரு முப்பட்டையையும், அதன் பின் ஒரு திரையையும் வைத்து நியூட்டன் என்னும் பேரறிஞர் திரையின் மீது பல வேறு நிறங்களைக் கொண்டதொரு நீண்ட (Spectrum) ஒளிப்பட்டையை முதன்முதலில் அடைந்து காட்டினர். இப்பட்டையின் ஒரு முனை செந்நிறமும் மற்றொரு முனை ஊதா நிறமும், இவற்றினிடையே ஆரஞ்சு, மஞ்சள், பச்சை, நீலம், அவுரி முதலிய பலவேறு நிறங்களும் தோன்றுவதைக் கண்டுணர்ந்தார். அதாவது வெண்ணிறமான சாமானிய ஒளி பலவேறு நிறங்களைக் கொண்ட ஒளிகளின் சேர்க்கை என்று காட்டினர். இதிலிருந்து

ஊதா முதல் சிகப்புவரையில் உள்ள ஒளிமட்டுமே நம்முடைய கண்ணுக்குப் புலனாகிறது என்று அறிகின்றோம். இந்த இரண்டிற்குமுள்ள ஒவ்வொரு ஒளிக்கும் அதற்குத் தகுந்த "அலை நீளம்" ஒன்றுண்டு என்று அறியலாம்.

சூரியன் உதயமாகும்போதும், அஸ்தமனமாகும்போதும் செந்நிறமாகத் தோன்றுவதை எல்லோரும் பார்த்திருப்பார்கள். இதன் காரணம் என்னவெனில் சூரியன் அவ்வாறு தாழ்ந்திருக்கும்பொழுது அதனுடைய கிரணங்கள் பூமிக்குச் சற்று உயரம் வரையில் வியாபித்திருக்கும் (Atmosphere) பவனத்தில் வெகு தூரம் வந்து நம்மை அடையவேண்டியிருக்கிறது. அதன் பொருட்டு அதிலிருந்து வரும் வெண்ணிறமான ஒளி பவனத்திலிருக்கும் துகள்களில் மோதுண்டு சிதறப்படுகின்றது. வெண்ணிறமான ஒளியில் அடங்கியுள்ள எல்லா வர்ண ஒளிகளும் ஒரே அளவாகச் சிதறப்படுவதில்லை. அவைகளில் செந்நிற ஒளியைத் தவிர மற்ற ஒளிகளனைத்தும் நாம் பார்க்கும் திசைக்கு அப்புறமாகச் சிதறப்படுவதால் நமக்குச் சூரியனுடைய பிம்பம் செந்நிறமாகத் தோன்றுகிறது என்று அறியப்பட்டது. கடல் நீரும், ஆகாயமும் நீல நிறமாகத் தோன்றுவதும் இதே காரணம் பற்றித்தான். இது சம்பந்தமாக ஸர் ஸி. வி. ராமன் கல்கத்தாவிலிருக்கும்போது அவருடைய (Laboratory) ஆய்வு சாலையில் சில வருஷங்கள் ஆராய்ச்சிகள் நடத்திவந்தார். அவ்வாறு செய்து கொண்டு வருகையில் 1928 ஆம் வருஷத்தில் ஒரு அதிசயத்தைக் கண்டுபிடித்தார். அது பற்றி அவருடைய புகழ் உலக முழுவதும் பரவினதன்றி நம் நாட்டின் மதிப்பும் அயல் நாடுகளில் வெகுவாக உயர்ந்தது. அவர் அறிவு வளர்ச்சிக்குச் செய்த பேருதவி ஒரு புறமிருக்க அடிமையாக விருக்கும் நம் நாட்டின் செல்வாக்கை உயர்த்தினதைத்தான் நாம் அதிகம் பாராட்டவேண்டும்.

ஒளி சில பொருள்களின் வழியாகத்தான் ஊடுருவிச் செல்லக்கூடும். இவை (Transparent) தெளிப் பொருள்கள் எனப்

படும். ஒரு தெளிப் பொருளில் மிகப் பிரகாசமுள்ளதும் ஒரே "அலை நீளம்" கொண்டதுமான ஒளிக்கற்றை ஒன்றைப் புகவிட்டார். அவ்வாறு ஒளி புகுத்தப்பட்ட அப்பொருளிலிருந்து வரும் ஒளியைப் பரிசோதித்துப் பார்க்கையில் அது வேறு "அலை நீளம்" கொண்டிருப்பதைக் கண்டார். அப்பொருளின் (Molecules) மூலகங்கள்தான் இந்த மாறுதலைச் செய்திருக்க வேண்டுமென்று அறிந்தார். பன்முறை சோதனைகள் நடத்தித் தான் கண்டதை உறுதிப்படுத்திக்கொண்டார். அவர் 1928-ம் வருஷம் மார்ச் மாதம் 16-ம் தேதியன்று பங்களூரில் "தென்னிந்திய ஸயன்ஸ் அஸோஸியேஷன்" மேடையில் பேசும்போது இதை வெளியிட்டார். உடனே இச் செய்தி எங்கும் பரவிற்று. அமெரிக்கா நாட்டிலுள்ள பிரபல விஞ்ஞானியான "ஆர். டபிளியூ. வுட்" என்பவர் முதன்முதலில் ராமன் கண்டுபிடித்ததைப் பரிசோதித்து அது சரியென்று உலகத்துக்கு நிரூபித்துக் காட்டினர்.

இவ்வாறு தெளிப் பொருளினால் உண்டுபண்ணப்பட்ட ஒளி அப்பொருளைச் சார்ந்திருக்கிறதென்றும், எல்லாப் பொருள்களும் தத்தமக்குரிய ஒளியை உண்டுபண்ணுவதாகவும் அறியப்பட்டது. அதாவது இந்தப் புதிய ஒளி பொருள்களின் அறிகுறியாக இருப்பது தெரியலாயிற்று. அத்தகைய ஒளியை இவர் கண்டுபிடித்ததின் பொருட்டு அதற்கு "ராமன் ஒளி" என்று பெயரிடப்பட்டிருக்கிறது. அதற்காக அவருக்கு நோபல் பரிசும் தரப்பட்டது. பதார்த்தங்களின் மூலகங்களைப்பற்றிய விஷயங்களை அறிவதற்கு இவர் கண்டுபிடித்த ஒளி பெரிதும் பயன்பட்டுவருகின்றது.

ஆர். கே. விசுவநாதன், எம். ஏ.

அகப்பொருளும், தமிழ்க்கலையும்

பொருட்டுறை புணர்த்திய தமிழ்க் கலையாளர் அகப்பொருள், புறப்பொருள் எனப் பொருளை இரு பெரும் பிரிவிலமைத்து வரம்பிடுவர். அகனுணர்தற்குரிய பொருளை அகப்பொருள் என்றும் புறப் புலன்களான கண் காது முதலியன கொண்டு உணர்தற்குரிய கல்வி வீரம் செல்வம் புகழ் முதலியனவற்றைப் புறப்பொருள் என்றும் தமிழ் மக்கள் பிரித்தாண்டபெற்றி எக்கலையுடையார்க்கும் அமையாத மிக்குயர்ந்த ஓர் சிறப்பிற்றாகும்.

ஒத்த கிழவனுங் கிழத்தியும் தம்முட்டாம் இயைந்து கூடியக்கால் அவர்தம்முள் மகிழ்ந்தின்புற்ற நுகர்வு இவ்வாறிருந்ததென்று பிறர்க்கெடுத்துக் கூறுதற்கமையாவியல் பிற்றாய்க் களிபேரின்பம் பயப்ப தொன்றாயிருத்தலை ஓர்ந்துணர்ந்த தமிழ்மக்கள் அவ்வகப்பொருட்டுறையிலேயே பற்பல இனிய நூல்களை யாத்துச்சென்றனர் புணர்தல் பிரிதல் இருத்தல் ஊடல் இரங்கல் என ஐவகைப்பட்ட ஒழுக்கங்களை ஐந்திணை யுரிப்பொருள் எனப் பிரித்து அவ்வத் திணைகளின் இயற்கை நலனும் இன்பநலனும் இனிது புலப்படுமாறும் கற்போருள்ளம் களிகொள்ளுமாறும் கவிகள் யாத்த நல்லிசைப் புலமையாளர் வன்மை பெரிதும் போற்றற்குரியதாகும்.

இயற்கைப் புணர்ச்சிக்கண் இடம்பெற்றுப் புணர்ந்த தலைவன் தலைவியை நோக்கி,

யாயும் யாயும் யாரா கியரோ
எந்தையும் நுந்தையும் எம்முறைக் கேளிர்

யானும் நீயும் எவ்வழி அறிதும்
செம்புலப் பெய்ந்நீர் போல
அன்புடை நெஞ்சந் தாங்கலந் தனவே

என்று தம்து கூட்டத்தின் தூய்மையும் உயர்வும் தோன்றப் பாராட்டுகின்றான். எழுமையுந் தொடர்ந்த கெழுதகைக் கேண்மையே தம்மிருவரையும் இவ்வாறு கூட்டிவைத்ததென்றெண்ணி, வடகடலிட்டதோர் வான்கழி தென்கடலிட்டதோர் நுகத்துளை புக்காங்கு, முன்னொரு ஞான்றுங் கண்டு கேட்டறியார்க் காதலர் இருவர் ஊழ்வழி நிற்பக் கூடப்பெற்றமையை நினைந்து வியந்து தெய்வத்தைப் பணிகின்றான். நற்பால் வினைத்தெய்வம் தந்ததின்று நான் இவளாம் பகுதிப் பொற்பு ஆர் அறிவார் என்று உன்னியுன்னி உவகை பூக்கின்றான். தன் வாழ்நாளில் முன்னொரு ஞான்றுங் கண்டிராத புதியவோர் இன்பப்பெருக்கைக் கண்டதலைவி தன்னையே மறந்து கரைகாணாக்காதல் வெள்ளத்தில் திளைக்கின்றாள். தன்உளங் கலந்துருக்கிய தனியன்பிற்குத் தன்னையே அர்ப்பணித்துவிடுகின்றாள். எழுநிலைமாடமும் இனிய தோழியரும் தன்னைக் கண்ணினுங் காதலித்து வளர்த்த செவிலியும் நற்றாயாதியோரும் அவட்கு வேம்பாகிவிடுகின்றனர். மண்மகளறியாவண்ணச் சீறடிகள் கற்கள் நிறைந்த கானத்தையும் கடக்க முந்துகின்றன. வெப்பம் நிறைந்த வேய்பயில் கானமும் அவட்குத் தட்பந்தருந் தண்பொழிலாகிவிடுகின்றது. தன்னுயிரனைய காதலனைப் பிரியமாட்டாளாய் உடன்போக்கை மேற்கொண்டுவிடுகிறாள். காட்டது கடுமையுந் தலைவியது மென்மையுங்கண்ட தலைவன் அவட்கு மெய்வருத்தந் தோன்றாவாறு பல தலையளிகளைச் செய்தவனாய்க் காட்டைக் கடக்கின்றான்.

தலைவியின் பிரிவாற்றாது கலங்கிய தோழியர் செவிலித்தாய் நற்றாயாதியோர் கையற்று அவள் சென்ற ஊரும்

ஆறும் தேடி அலைவர் உடன்போதலைச் செய்யும் இவ்விரு வரையும் கண்டோர்,

“ வில்லோன் காலன கழலே தொடியோள்
மெல்லடி மேலவுஞ் சிலம்பே நல்லோர்
யார்கொ லளியர் தாமே ”

என்று இவர்களின் குலப் பெருமையும் உயர்வும் கண்டு இரங்கிக்கூறுகின்றார். ஆயின் அவர்களிருவர்க்கும் பாலை நிலத்திற் கலங்கற் சின்னீர் பாலினும் இனிதாகக் காண்கின்றது அன்பு வலைப்பட்டார் நிலை இதுபோலும்.

பல்லூரும் பல்லாறும் அலைந்துலைந்து வருந்தித் தலைவி சென்ற ஊரும் ஆறும் அறியாளாய்க் கலங்கிய ஒரு செவிலித் தாய்,

காலே பரிதப் பினவே கண்ணே
நோக்கி நோக்கி வாளிழந் தனவே
அகலிரு விசும்பின் மீனினும்
பலரே மன்றவிவ் வுலகத்துப் பிறரே

என்று வழியிடத்துப் பலர் தன் மகளைப்போல் உடன் போதலைக் கண்ணுற்று உலகியலை யறிந்துகொள்கின்றாள். பின்னர் வழியிடத்து எதிர்பட்ட சான்றோர் சிலரைக் கண்ணுற்றுப் பெரியீர்!! என்மகளொருத்தியும் பிறன்மகனொருவனும் தம்முளே புணர்ந்ததாமறி புணர்ச்சியர் அன்னாரிருவரைக் காணிரோ என உசாவுகின்றாள். அவர் அவளை நோக்கி அன்னாய் யாம் கண்டனம் அங்ஙனம் செல்வாரிருவர் நெடுந்தூரம் போயிருப்பார் நீ அவரைக் காண்பாயல்லை. ஆயின் யாம் நுமக்கொன்றுசொல்ல விழைந்தனம். அஃதென்னெனின்,

பலவுறு நறுஞ்சாந்தம் படுப்பவர்க் கல்லதை
மலையுளே பிறப்பினும் மலைக்கவைதாமென்செய்யும்

சீர்கெழு வெண்முத்தம் அணிபவர்க் கல்லதை
நீருளே பிறப்பினும் நீர்க்கவைதா மென்செய்யும்
ஏழ்புண ரின்னிசை முரல்பவர்க் கல்லதை
யாழுளே பிறப்பினும் யாழ்க்கவைதா மென்செய்யும்
சூழுங்கால் நும்மகள் நுமக்குமாங் கனையளே

ஆகலின் இறந்த கற்பினளைத் தவறாய்க் கருதாதீர். தனக்குச் சிறந்தானான தலைவனை வழிபட்டுச் சென்றாள் அறத்திரியா நெறியும் அதுவேயாகும் என்று கூறி அவளைத் தேற்றுவர். அங்ஙனமன்றி இயற்கைப் புணர்ச்சியெய்தப்பெற்ற தலைவன் நின்னையான் பிரியேன் பிரியின் ஆற்றேன் என்று கூறிச் சூளுறுதலும், தெய்வத்தின்மேல் ஆணையிடுதலும், செய்கின்றான். ஆணையேயன்றி வஞ்சினங்கூறுதலுமுண்டு,

மெல்லிய லரிவைநின் னல்லகம் புலம்ப
நிற்றுறந் தமைகு, வெனாயி னெற்றுறந்
திரவலர் வாரா வைகல்
பலவா குகயான் செலவுறு தகவே

இங்ஙனம் வஞ்சினங்கூறிச் சென்ற தலைவன் மீண்டு தான் கூறியவாறே வாராதிருந்தானாக அதற்கு ஆற்றாளாகித் தலைவி புலம்பி நைந்து வருந்தலும் மேனிவாடிச் சோர்ந்து வேறுபாடுறுதலும், அதுகண்ட செவிலித் தாயாதியோர் இவள் வேறுபாட்டின் காரணத்தை யுணராராய் முருகனை வழிபடுதலும் குறிபார்த்தலும் செய்வர். அந்நிலையில் உண்மை வெளியாகிவிட்டால் ஆபத்தாய் முடியுமென்பதைத் தோழியுணர்ந்து அறத்தொடு நிற்பள். இங்ஙனம் அறத்தொடு நிற்கும் ஓர் தோழி செவிலித் தாயை நோக்கி அன்னாய், யானும் நின் மகளும் நம் ஆயத்தவர்களுமாய் அன்றொருநாள் தினைப்புனத்திற் றங்கியிருந்தகாலை, வேங்கைமலர் கொய்யும் விருப்புடையேமாய்ப் புலிபுலி என்ற பூசலைப் பயிற்றி வேங்கைமரக்கொம்பரை வளைத்தேம் அவ்

வமயம், மாலைகள் தாழவிட்டவனாய் நெஞ்சிடத்து நறிய சாந்தையணிந்தவனாய் ஓர் இளைஞன் உருவிய அம்புடன் எம்முன் தோன்றி எங்கே அப்புலி என வினாவிநின்றான். யாம் விளையாட்டாகப் புலியென்ற பூசலை விளைத்தோமென்பதைச் சிறுபொழுதுள் குறிப்பாயுணர்ந்தவனாய் மடவீர் நும் வாய்ப் பொய்யுமுளவோவென்று கூறித் திரும்பினான். திரும்பியவன் நினது மகளின் மையுண்ட மலர்க்கண்களைக் கூர்ந்து நோக்கியவாறு தனது தேரை மெதுவாய்ச் செலுத்திச் சென்றான். நின்மகளும் அவன் சென்ற திசையையே நெடுநேரம் நோக்கிநின்றாள். பின்னர் என்னை அணுகி, எடி, இவன் மகனே கொல் என்று வினவினாள். இதுவே, அவளுற்ற நோய்க்குக் காரணம்மென்பதை மதிவல்லோர் எளிதாய் உணர்ந்துகொள்வர் எனக் குறிப்பால் தலைவிக்குற்ற நோயையும் அங்ஙனம் அந்நோய் தோன்றற்குரிய காரணத்தையும் வெளிப்படக் கூறாது உய்த்துணர்ந்துகொள்ளுமாறு கூறும் முறையும் பிறவும் படித்துப்படித்து இன்புறுதற்குரியனவாகும்.

இனி, தலைவன் இயற்கைப்புணர்ச்சிப்பின் வாராதொழிந்த காலை அதற்கு வருந்திய தலைவியைத் தோழி தேற்றலும் அங்ஙனம் தேற்றுங்கால் தலைவனை இழித்துரைத்துத் தலைவியை வாளாவிருக்கச் செய்தலும் நிகழும். தலைவன் சிறைப்புறத்தில் நிற்றலைத் தோழி காண்கின்றாள். கண்டதும் தலைவியிடத்தில் தலைவனைப் பழித்துக் கூறுகிறாள். அப்பழிச் சொல்லுக் காற்றாளாய தலைவி !! தோழியை நோக்கி,

நிலத்தினும் பெரிதே வானினுமுயர்ந்தன்று
நீரினு மாரள வின்றே சாரற்
கருங்கோற் குறிஞ்சிப் பூக்கொண்டு
பெருந்தே னிழைக்கு நாடனொடு நட்பே

என்று தன் தலைவனுக்கும் தனக்குமுள்ள நட்பின் மிகுதியையும் உயர்வையும் தலைவி எடுத்துக் கூறித் தோழியோடுரையாடுகின்றாள். தலைவன் மாட்டு வெறுப்புக்கொண்டு தோழி அங்ஙனம்பழித்துமொழிந்தாளல்லள். தலைவனுக்குத் தலைவியின் அன்பின் உயர்வைக் காட்டுதல் ஒன்று, மற்று விரைந்து வரைந்துகொள்ளவேண்டுமென்பதைத் தலைவனுக் குணர்த்தல், ஆகிய இரு கருத்துக்களையும் கொண்டே அங்ஙனம் கூறினளாகும்.

பாலை யென்பது பிரிவுப் பொருளுணர்த்தும் திணையாயாகும் பொருள் காரணமாகவோ வேறு காரணமாகவோ தலைவன் தலைவியைப் பிரிய நினைக்கின்றான். அவளைப் பிரிதல் இவனுக்கு மிகத் துயர் தருவதொன்றாயினும் தன் உரனால் ஒருவாறு அவளைப் பிரியத் துணிந்துவிடுகிறான். இவன் அங்ஙனம் பிரியப்போதலைத் தலைவி உணர்ந்துவிடுகின்றாள். இதை,

காழ்விரி, வகையார மீவரு மிளமுலை
போழ்திடைப் படாமல் முயங்கியு மமையாரேன்
தாழ்கதுப் பணிகுவர் காதலர் மாற்றவர்
சூழ்வதை யேவன்கோ லறியே னென்னும்
முள்ளுறழ் முளையெயிற் றமிழ்தூறுந் தீநீரைச்
கள்ளினு மகிழ்செயு மெனவுரைத்து மமையாரேன்
ஒள்ளிழை திருத்துவர் காதலர் மற்றவ
ருள்ளுவ தேவன்கோ லறியே னென்னும்.
நுண்ணேழில் மாமைச் சுணங்கணி யாகந்தங்
கண்ணொடு தொடுத்தென நோக்கியு மமையாரேன்
ஒண்ணுதல் நீவுவர் காதலர் மற்றவ
ரெண்ணுவ தேவன்கோ லறியே னென்னும்

எனவாங்கு.

கழிபெரு நல்கலோன் றுடைத்தென வென்றேழி
யழிவோடு கலங்கிய வெவ்வத்தளோருணிர்

பொழுதிடைப்பட நீப்பின் வாழ்வளோ
ஒழிகினிப் பெருமநின் பொருட் பிணிச் செலவே

'என்று தோழி தலைவற்குக் கூறித் தலைவனைப் போகவொட்டாது தடுக்கின்றாள். இதுவன்றித் தலைவி நேரே தலைவனைத் தடுத்தலும், தானும் உடன் வருகின்றேனென்று புறப்படலும் தலைவன் அவள் மென்மைத் தன்மை நோக்கி அவளுக்குத் தேற்ற மொழிகள் கூறிச் செல்லுதலும் முதலிய இன்னோரன்னன. இயற்கை அன்பையும் அன்புப் பிணிப்பின் அரிய நிலையையும் கண்ணுற்று மகிழக் கலித்தொகை முதலிய நூல்கள் இருத்தல் பழந்தமிழின் வளந்தனையாவரும் உணரவும் உணர்ந்தின்புறவும் காரணமாகின்றது.

இங்ஙனம் பிரிந்த தலைவன் இடைச் சுரத்திடைத் தலைவியை நினைந்து வருந்தலும் தலைவி இல்லின்கண் வருந்தலும் துன்ப நிலையினை விளக்குவனவாகும் இருட்டிலிருந்து ஒளியைக் காண்பதும், துன்பத்திலிருந்து இன்பத்தையடைதலும், இயற்கையிலமைந்த ஓர் வேறுபாடே யெனினும், பாலைத்திணையில் ஒரு சிறப்பு பிரிதலாகிய பெருந் துன்பம். மீட்டுப் பிரிந்தால் கூடுங்கால் பேரின்பமாய் மாறுகின்றது. பிரிந்தவர் கூடினாற் பேசவும் வேண்டுமோ என்ற கருத்தும் இதுபற்றியெழுந்த தொன்றேயாகும். தலைவியைப் பிரிந்து பன்னாள் வருந்திய தலைவன் மீட்டு அவளைக் கூடுங்கால் புதியவோர் இன்பத்தை அடைபவன்போல் அவளுடன் அளவளாவிக்கொள்ளலும், அங்ஙனம் தான் பிரிந்திருந்தமைக்கு வருந்திவதிந்த தலைவியை பலவாறு தேறுதல் கூறித் தலையளிசெய்தலும் மீட்டும் மீட்டும் தான் பிரிந்தமைநோக்கி வருந்திய தலைவிக்குத் தன் தவற்றெடுகூடிய மன்னிப்புப்போன்ற மொழிகளைக் கூறி அவளுடன், இன்புற்றுறைதலும் உணருந்தோறும் உணருந்தோறும் இயல்பிற்பிறழா வளத்தவாய் இன்பந்தருவனவாகும்.

இங்ஙனம், தலைவியைப் பிரிந்து பொருளீட்டிப் பின் தன்னூருக்கு மீளும் ஒரு தலைவன் பாகனை நோக்கி,

செல்கதேரே நல்வலம் பெறுந
செந்தார்ப் பைங்கிளி முன்கையேந்தி
இன்று வரலுரைமோ சென்றிசினோர் திறத்தென
இல்ல வறிதலஞ்சி மெல்லென
மழலையின் சோற்பயிற்றும்
நாணுடைய ரிவை மாணலம் பெறவே

என்று கூறுகின்றான். பொருளில்லாப் புன்மையர் வருத்திய தாக அதற்காற்றாது பொருள்நோக்கிப் பிரிந்த தலைவன், பிரிந்து நெட்டாறுசென்றவிடத்தும், தன் தலைவிமாட்டு வைத்திருந்த அன்பில் ஒரு சிறிதாயினும் குறைந்தானல்லன். அன்றியும் வீடுநோக்கி வந்துகொண்டிருக்குந் தேர் உண்மையில் விரைவாகவே பாகனாற்செலுத்தப்படுகிறது. அங்ஙனமாகவும் அவனுக்குத் தன் தலைவியை விரைந்து கூடவேண்டுமென்ற பெருவிருப்புப் பிடர்பிடித்துந்தப் பாணனை நோக்கிப் பாண தேரை விரைவாகக் கடவுவாயாக என்கின்றான்.

இவை அன்பு வாழ்க்கையின் அம்சங்களாகும் பழந் தமிழ்மக்கள் பண்புடன் வாழ்ந்தின்ப நுகர்ந்தனர் என்பதற்கு இவைபோன்ற பல எடுத்துக்காட்டுகளுண்டு.

இனித் தமிழ்க் கலைவளனைப் பிறிதாய் நம் தலையங்கத் திற்கியையக் கூறவேண்டியதாவசியமாயினும் ஆங்காங்கெல்லாம் இனிய எடுத்துக்காட்டுச் செய்யுள்களும் பழமொழிகளும் கையாளப்பட்டேயிருக்கிறது. அதுவே தமிழின் சிறப்பைப் புலப்படுத்துமென்பதென் துணிபு. அகப்பொருளிலக்கணமே தமிழ்மொழிக்கொரு அங்கமாய் மிளிர்கின்றது. இத்துணைவளனும் இயல்பும் அமைய வேறு எம்மொழியிலும் அகப்பொருள் கூறப்பட்டிலதென்பதைத் திண்ணமாய்க் கூறமுடியும்.

தா. தங்கராசன், *அண்ணாமலைநகர்.*

தன்னுணர்ச்சி

பிரமன் படைத்த பல்லுயிர்களுக்கும் பகுத்தறிவுள்ள மானிடனே இறைவன். மானிட மிருவுயரிய தன்மையாலாக்கப்பட்டது. இம்மைநுகரும் மனிதத் தன்மையும் அம்மை நுகரும் தெய்வத்தன்மையுமாகும். இவ்விரண்டு தன்மைகளும் நெய்யுந் திரியும் போலமைந்து மானிடவுணர்ச்சி விளக்கத்தைத் தூண்டி யோங்கச்செய்கின்றன. ஒன்றின்றேல் மற்றது பயனின்றாகுமாதலின் இவ்விரண்டுஞ் சேர்ந்தே திகழவேண்டும். உணர்ச்சி விளக்கத்திற்குக் கொழுவொளி மிளிரச்செய்வது தான் தன்னுணர்ச்சி யல்லது சுதந்திரதாக மெனப்படும். புறப்பொருட்கள் ஐம்புலச் சாளரங்கள் வழியாக அகத்தை யணுகி யிவ்வுயரிய வுணர்வையருத்தி யுளத்தையுவகையாற் பெருக்குகின்றன. அகவளர்ச்சியே யறிவு வளர்ச்சியெனப்படும். ஆனால், அகனும் புறனும் பொருளும் பொலிவும் போலத் தளையப்பட்டுத் திகழ்கின்றன. அறிவு தெய்வத் தன்மையின் பாற்படும். ஆயினும் உணர்ச்சி, யறிவினின் றெழும் பெற்றியதாகி யிருதன்மையாலுந் தழுவப்படும். பொறி வழிப் புகுந்த புலன்களை மனிதத் தன்மை தாவிப்பிடிக்க முயல்கின்றது. அறிவுக்கேற்ப உணர்ச்சியும் மாற்றமெய்தும். ஆன்றோர் வகுத்த வறனுக்கியைவது நல்லுணர்ச்சியாம். அறிவினாட்சிக் கடங்காது மறவழி புகுத்துவது இழுக்கந் தருமிழி வுணர்ச்சிகளாகும். ஆகையால் ஆன்ம வரசி யாமறிவெனுங் கதிராற் கடிவன கடிந்து கொள்வன கொள்ளுமாற்றலுற்றானே யறிவுடையனவன். ஏனையவன் எற்றஞ் சிதைந்தெல்லாராலும் எள்ளப்படுவான். ஆகையால் அறிவைப் பொறிவழியிழுக்குந் தீய வுணர்ச்சிகள் தள்ளத்தக்கன. இத்தகைய மாண்புடனமைந்ததே மானிடமென்னும் அரிய பொறியெனப்படும்.

மானிடர்க் குணர்ச்சி மல்கிய ஆக்கையே பயன்படுமாக்கமாகும். ஆதலால் இவ்வுணர்ச்சியை வளர்க்கவேண்டியதே மானிடர் கடமை. மனச் செம்மையே உணர்ச்சியின் வளர்ச்சிக்குக் கருவாகும். கருத்தை நிரப்புங் கல்வியே மனச்செம்மை வளர்வதற்கேற்ற வுரமாய்ச் சமைந்

தது. எனவே உணர்ச்சியை யுயர்த்தி நடாத்து முண்மைகள் தேங்கிக் கிடக்கும். மேலோர் நூற்பயிற்சி வேண்டும். இதுபற்றியே அவர்கள், "மனமது செம்மையானல் மந்திர மோதவேண்டாம்" என்று புகன்று பொன்றினர் இதனை யெள்ளாப் புகழுடை வள்ளுவனருந்தனது தன்னுப்பில்லாத் தமிழ்மறையில்,

"கற்க கசடறக் கற்பவை கற்றபின்
நிற்க வதற்குத் தக"

என்றருளிக் கல்விக்கும் மனப்பண்பிற்குமுள்ள தொடர்பை அங்கை நெல்லியங் கனியே போல் நிறுவியிருக்கிறார்.

மானம், வீரம், அன்பு முதலியன உயர் வுணர்ச்சியின் பயன்களாம். அழுக்காறு, அவா, அடிமைவிருப்பு முதலியன இழிவுணர்ச்சியின்பாற் படும். உயருணர்ச்சியே தன்னுணர்ச்சியல்லது சுதந்திரமெனப்படும். இதுவே மனித வாழ்க்கைக் கின்றியமையாதது. மனப்பிணிக்கிதையே ஆரமுதன்ன வருமருந்தாய்க் கொள்ளவேண்டும். தன்னுணர்ச்சி யென்பது, ஒருவன் தன்னை மனிதனென்று சொல்லிக் கொள்வதற்குச் சேர்க்கவேண்டிய பெரும் பேறெனினும் பொருந்தும். இவ்விழுமிய சுதந்திர வுணர்வை வேர்கல்லுவது அடிமைத் தன்மை யொன்றேயாம். அடிமைத்தன்மைக் கடிகோலுவது முயற்சியின்மையும் மூடத்தன்மையுமாம். இவ்விரண்டு குணங்களையுங் கோறலே வாழ்வாகும்.

ஆதலின் சோம்பித் திரிந்து வயிறு வளர்க்கின்றவன் மக்கள் மாண்பையும் மானிடப் பிறவியின் மேன்மையையும் மல்கிருள் புகுத்தி மாய்க்க வந்த வொரு பேயாவான். இத்தகைய மாக்களுக்கெம்மக்கட் குழாமிடமளிக்குமோ அம்மக்கட் குழாம் உயர்வுற்றதுமில்லை யுயர்வுறப்போவதுமில்லை. உணர்ச்சி குன்றிய விவ்வூன்றடிகள் இழிவுகருதாதிரப்பை மேற்கொள்கின்றன. இவைகளுக்கு இவ்வீனவுணர்வைப் போக்க வேண்டிய வறிவாறுபுகட்டவேண்டியதிருக்கப், பல பனுவல்கள் அதனை யூக்குந்தயை, கொடை, வண்மை முதலிய தாராளப் பண்புகளைப் பாராட்டிப் பிறரை யீயுமாறு வற்புறுத்துகின்றன. இதன் காரணம் இப்பனுவலாளர்கள் தன்னுணர்ச்சியின்றித் தரணியிகழப் பிறர் கைதழுவி வாழ்ந்ததேயாம். இரக்கப் பாசாங்காலீய முன்வருவார் சிலர்; இச்செயல் தங்கள் வண்மையைப் பிறருக்கு விளக்கித் தாங்கள் புகழப்படும் தன்னலங்

கருதியோ? அல்லது நாட்டைக் குட்டிச் சுவராக்கவோ? யாமறியோம். உண்மை வள்ளலாயின் இரப்பானுக்குத் தன்னுணர்ச்சி தோன்றச் செய்யும் பல்லாற்றானும் பணத்தை யளிக்கலாமன்றோ! இஃதன்றி,

"பல் லெல்லாந் தெரியக் காட்டிப் பருவரன் முகத்திற்கூட்டி
மல் லெல்லா மகல வோட்டி மானமென்பதனை வீட்டிச்
சொல் லெல்லாஞ் சொல்லி நாட்டித் துணைக்கரம் விரித்து நீட்டி
யில் லெல்லா மிரத்தலந்தோ! விழி விழி வெந்த ஞான்றும்"

என்ற வறிவுரையை மறந்து மிடியாலிடியுண்டேன் 'தா' என்று கேட்பது பொருந்துமென்று புகழ்வார்க்குப் பகற்கொள்ளையும் நீதியுடைத்தாம். மானிடருக்கு இறைவனறிவும் பொறியும் உணர்வும் நல்கியதில், நடுமையே நோக்கியிருக்கிறான். மனிதர் யாவருக்கு மவைகளிற் பேதமில்லை. அவனருளிய மானிடமாண்பை மாளச்செய்யாது வாழ்விக்கின்றவனே வாழ்க்கையில் வாகை சூடுகின்றான். மற்றவன் மாயாவின்மை வாய்ப்பட்டு வாடிவதங்குகின்றான். ஒருவன் மிடிக்கடல் மூழ்கினால் அது பொருளின்மையாலன்று. தன்னுணர்ச்சியின்மையாலேயே யக்கதி யவனுக்கமைந்தது. வறுமைக்கும் அவநம்பிக்கைக்கும் மூலமாய் நிற்பது புன்மை மிகுந்த போலியுணர்ச்சியேயாம். பொருளைக் கேட்டிரப்பார்க்கு மனவிருளைப் போக்குந் தன்னுணர்ச்சியையீந்தனுப்புவதே யேற்பார்கையற வழங்கும் வள்ளியோன் கடமையாம். இதுவே நுண்ணறிவுடைத் திண்ணறிவாளர் நுணித்துக் கணித்தவறமாயது. பொருளைக்கொடென்று வற்புறுத்தும் பிற, தன்னலவீரர்களாற் புகுத்தப்பட்ட மறமென்றே சாற்றல் சாலும்.

மேற்கூறியவாறு கொடைக்குடை பிடித்தவள்ளலே தன்னலம் பிறர்நலங்கருதித் தான் வாழுங்குழுவிற்கும் நன்மை செய்தவனாவான். எங்ஙனமெனின் தன்னுணர்ச்சியில்லாக் கடையன் பொருளவாப்பெருக்காற் கரைகடந்து புகழத்துணிகின்றான். அங்ஙனம் தூய வுள்ளம் படைத்த அவ்வள்ளல் தன்னையும் தன்னாற்றலையும் மறந்து தோமுறு ஆணவத்திற்காளாகின்றான். ஆணவம் ஆன்மாவைக்கொல்லு மாற்றலுடையதாதலால் ஆன்மாவிற்குச் சொந்தமாய தெய்வத்தன்மையையழித்து மனிதத்தன்மையை வளர்த்து மறுமைப்பயன்களை யடையவொட்டாது பாழ்க்கிடங்கிற் பிடர்பிடித்துத் தள்ளுகின்றது. இது

பற்றியே வீண்முகமன் கூறும் மூடர்களை விலக்கி மாண்புறும் மற்றவர்களை யவ்வள்ளல் ஏற்கவேண்டியவனுகிருன். பொருளின்மையாலிரப்போமென்று தன்னுணர்ச்சி தவிர்த்து இரத்தற்றுறையிலிறங்குமொருவனுடைய மானங்கொஞ்சங்கொஞ்சமாய்க்குறுகி யழிந்துபோகின்றது. அவன் பிறரிடம் பெறுமொவ்வொரு சிற்றுதவியும் அவனைப் பெரிதளவு தன்னிலையிலிருந்து கீழே தள்ளுகிறது. இப்பெருங்குறையைக் கூட அறியுமாற்றலு மவனுக்கில்லாது போகின்றது. ஏனெனில் பிறனைத்தழுவி வாழ்வானுக்கு எங்ஙனம் அறிவு வளரும்? ஒருவன் எவ்வளவுக்கெவ்வளவு அயலானையண்டி வயிறு வளர்க்கின்றுனே அவ்வளவுக்கவ்வளவு சுதந்திரஞ்சிதைந்து அடிமைத்தன்மைமிகுந்து அயன் வகுத்த விவ்வாக்கையின்பத்தை யவனியிலடைய வியலாதவனுகின்றுன். நன்றியென்னும் நாணுற் பிணிக்கப்பட்ட நாயாகி ஞாலத்தில் நசுங்கியுழலுகின்றுன். ஒரு கொலையாளியுங்கூட நீதிமன்றிற் றனக்காக நின்று வழக்காடும் வன்மை பெற்றிருக்கின்றுன்; தானடைபட்டிருக்குஞ் சிறையறைக்குள்ளிருந்து மனதில் வந்தவாறு சிந்திக்கவும் வஞ்சினங் கருதவுமவன் உரிமை பெற்றிருக்கின்றுன். அவன் கரங்கள் இருப்புச் சங்கிலியாற் றளையப்பட்டிருப்பினுமவன் கருத்திற் றன்னுணர்ச்சி ததும்பித் தாண்டவமாடுகின்றது. ஆனுல் தன்னுணர்வின்றிப் பிறனைத் தழுவி வாழுமொருவனுளம் பல்வகையாலுங் கட்டப்பட்டுக் கரைந்து நைகின்றது. பிறனிடம் பெற்ற நன்மைக்காக அவன் நன்றி கூறவேண்டும். அப்பொழுதவன் தன்னிலையினின்றுந்தாழ்ந்து சுதந்திரத்தை யிழந்து தன் நன்கொடையாளிக்கு வணக்கஞ் செலுத்த வேண்டும். இது தவறின் "என்னன்றி கொன்றுர்க்கு முய்வுண்டா முய்வில்லைச் செய்ந்நன்றி கொன்ற மகற்கு" என முப்பால் தந்த முனிவன் முதுமொழிப்படி பாழ்நரகில் வீழ்வனுவன். இவ்வாறு அவன் மனம் தளையப்பட்டுத் தயங்குகின்றது. தன்வள்ளலுக்குக் கூறிய நன்றி மொழிகளும் இனியவனிடந்தான் பெறப்போகும் நன்மைகளுக்கு விண்ணப்பஞ் செய்வதுபோன்று தோன்றுகின்றன. தானுன்னும் பொருளை யவனிடஞ் சொல்ல நினைக்கின் நாவெழுவதில்லை. ஏன்? தான் நினைப்பவை அன்னவன் கருத்திற்கொவ்வாதிருப்பின் தன்னை வெறுத்தகற்றிவிடுவானென்ற வெண்ணத்தாலேயே யிங்ஙனம் நிகழ்கின்றது. மேலும் காதல் மனைவியையுங் கண்ணுக்கினிய குழவியையும்

விடத் தன் கொடையாளியை மகிழுவிப்பதேதன் குறிக்கோளாகத் தன்னுணர்ச்சியில்லாவொருவன் கொள்ளவேண்டியிருக்கின்றது. ஆகையால் அவன் வாழ்க்கை பாழாகின்றது. இறைவனுக்கும் பிறர்க்கும் தனக்கும் தன்னாட்டிற்கும் தானாற்றவேண்டிய தொண்டையவனடியோடு மறக்கின்றான். அவன் மனமும் இருளுண்டு மரக்கின்றது. அறனுக்கு மறனையும் மெய்க்குப் பொய்யையுந் தழீஇ யிறுதியின்ப மற்றுக் கெடுகின்றான்.

எனினும், ஒரு தனையன் தன்னிளமைப் பருவத்திற் றன்றந்தையையே தழுவி வாழவேண்டியிருக்கிறது. தந்தையுந்தன் முதுமைக் காலத்திற் றனையனைத்தழுவி வாழவேண்டியவனாகின்றான். இவ்வாறு கடமையாற் கட்டப்பட்டிருக்கு மிவர்கள் தன்னுணர்ச்சி அல்லது சுதந்திரமில்லாதவர்களாகக் கருதப்படார். முதலாளி வேலையாட்குக் கூலியளிப்பது அவ்வேலையாட் செய்த தொண்டிற்கே யாதலா லித்தகையதும் தன்னுணர்ச்சியின்மையின் பாற்படாது. காதலர்களிடையேயுங் கரையிலாவன்புக் கடல் பெருகி யின்பத்திரைகள் வளருவதால் மனமொன்றுகின்றது. ஆகையால் காதலனுங்காதலியும் வேறுபட்டவிரு காயத்தாராயினுங் கருத்தொருமித்ததுபற்றி யிவர்களிருவரையுமொருவராகவே கொள்ளவேண்டும். எனவே வாழ்க்கையிலேற்படும் மேடுபள்ளங்களிலவர்கள் ஒருவர்க்கொருவருதவியாய் நிற்பதும், ஒருவன் வயிறு வளர்க்கத் தன்னுணர்ச்சி குன்றிப் பிறனைத் தழுவி வாழ்வது மொன்றாகா.

ஆகவே தலையாய தன்னுணர்ச்சி மக்களிடையே தழைக்கவேண்டும். இவ்வுணர்வு பெற்றாரே தன்னாட்சியாற்றற்காற்றல் வாய்ந்தவர். இது பிறப்புங் குலமும் பற்றிப் பிறிதாகாது. மானிடம் பெற்ற மனுக்களெல்லா மிவ்வகையி லொன்றுபடும். மக்கட் குழுவில் மனிதனெவ்வொருவனுந் தன் கடமையைக் கருதிச் செம்மையாகச் செய்யின் சோம்பலழியும்; முயற்சி வளரும். ஒருவன் மற்றவனைத் தழுவி வாழவேண்டியிராது. ஒவ்வொருவனுந் தன் சொந்த முயற்சியாலேயே வாழவேண்டும். இஃதொன்று தானின்பந்தரத்தக்கது. இதுவே மண்ணில் யாம் பண்ணும் புண்ணியங்களிலெல்லாந் தலையாயது. மனப்பண்பிற்குந் தேயப் பற்றிற்குங் கண்ணாவது மிஃதே. உண்பார் கலத்தையும்

ஊண்புகு வாயையுமுற்று நோக்கி யுட்கார்ந்திருக்கும் நாய்போற் பிற னில்லிற் புறங்கடைபற்றி யவன் றயைக்காகத் தவித்து வாடுவது நன்றோமோ? அன்றியது இன்பந் தருவதோ? சொன்மின்! பற்களைக் காட்டி 'ஈ' என்பதைவிடப் பார்புகழ விடுக்கண்பட்டு வாழ்தல் மேலது; இடும்பை மிகுந்தால் உயிர்விடல் சாலிது. பிறனைத் தொங்கி யுடலிலுயிரை யொன்றவைப்பதைவிடத் தூக்கிட்டுக் கொள்வதை யுலகம் போற்றும். இப்பண்பை நம் பண்டைப் பெரியோரும் "மான மழிந்தபின் வாழாமை முன்னினிதே" யென்று வெள்ளிடை விலங்க லென விளக்குகின்றனர். இதனையே இன்றமிழ்ச்சுவையின் பயனைப் பருகிய பாவலர் பாரதியாரும் தன் சுதந்திரப் பாசுரங்களில்

"புகழு நல்லறமுமே யன்றியெல்லாம் வெறும்
பொய்யென்று கண்டாரேல்—அவர்
இகழுறு மீனத்தொண்டியற்றியும் வாழ்வதற்
கிச்சையுற் றிருப்பாரோ.
பிறந்தவர் யாவருமிறப்ப துறுதியெனும்
பெற்றியை யறிந்தாரேல்—மானம்
துறந்தற மறந்தும்பின் னுயிர் கொண்டு வாழ்வது
சுகமென்று மதிப்பாரோ?
மண்ணிலின்பங்களை விரும்பிச் சுதந்திரத்தின்
மாண்பினை யிழப்பாரோ?
கண்ணிரண்டும் விற்றுச்சித்திரம் வாங்கினால்
கைகொட்டிச் சிரியாரோ?" யெனப்

பசுமரத்தாணிபோல் நம்முள்ளத்திற் பதியச் செய்திருக்கிறார். நம் பண்டைய நிலைமையை யுணர்ந்து நாம் புத்துயிர் பெறவேண்டும். எஞ்சாப் புகழுடை யஞ்சாமனத்தினராய்த் தன்னுணர்ச்சியிற்றளராது "நாமார்க்கும் அடிமையல்லோம் நமனை யஞ்சோம்" என்னும் வீரமுழக் கோடு தன்னுணர்ச்சி பெற்று வாழ்வோமாக.

M. L. பாண்டியன்,
3-வது தமிழானர்ஸ் வகுப்பு மாணவன்.

பழந்தமிழ் நாட்டின் சிறப்பு

மலர் கலையுலகிற் றோன்றிய பல்லுயிரினும் மக்கள் பகுத்தறிவுடையவராவர். இறைவனாற் படைக்கப்பட்டவிவர்கள் அக்காலத்திலேயே நாகரிகமுற்றுத் திகழ்ந்தாரல்லர். நாளடைவில் நாகரிகமும், பழக்க வழக்கங்களுமிடையே தோன்றுவனவாயின. இவைகள் தோன்றுவதற்குக் காரணமாயுள்ளவை அவரவர் வசித்து வந்த நாடுகளேயாகும். எடுத்துக்காட்டாக:—சைபீரிய சமவெளியிலுள்ள எஸ்கிமோஸ் என்னும் பகுப்பினரின்றும் நாகரீகமடைந்திலர் அவர்கள் திமிங்கலத்தின் ஊனையுண்டும் தோலைப் போர்த்துக்கொண்டுஞ் சிறு குடிசைகளில் வசித்து வருகிறார்கள். நீர்வளனும் நிலவளப்பமும் இயற்கையின் காட்சியுமின்றியெங்கும் பனிக்கட்டியான் மூடப்பட்ட ஒரே பரப்பமைந்த நாட்டில் வாழ்வதால் அவர்கள் வாழ்க்கை யென்றுமொரு தன்மைத்தே. காங்கோ நதிச் சமவெளியில் வாழ்ந்துவரும் கருநிறமரபினரும், தென்னமரிக்காவில் அமேசான் பிரதேசத்தில் வதியும் பிக்மிஸ்களும், வடவமரிக்காவில் வாழுஞ் செந்நிறச் சாதியினருமித்திறத்த வாழ்க்கையினராவர். ஆதலின் ஒரு நாட்டிலுள்ள மக்கள் ஒழுக்கம் நிரம்பப்பெற்றவர்களாய்த் திகழவேண்டுமாயின் அவர்கள் வதியும் நாடுதான் அதற்குக் காரணமென்பது மிகையாகாது. இவ்வாறு முதன்முதலாக நாகரிகம் படைத்த நாடு மலைகளையுங் கடலையுமெல்லையாக வமையப்பெற்ற பழந்தமிழ் நாடேயாகும். மேற்கூறியவற்றால் நந்தமிழ் நாட்டின் சிறப்பையறியவேண்டுமாயின் பண்டைக்காலத் தமிழ் நாட்டின் நிலைமையையும் தற்கால நிலைமையையு மாய்தல் வேண்டும்.

பழங்காலத்தே தமிழ் நாட்டில் நிகழ்ந்த அரசியல், கைத்தொழில், வாணிபம் முதலியவற்றைத் தமிழ்ப் புலவர்கள் தாங்களகக்கண்ணாற்கண்ட வியற்கையன்னையினெழிலுருவைப் புறத்தே

தோன்றும் மக்கள் கண்டுகளிப்பெய்துமாறு சித்திரித்த யாப் போடே தந்துள்ளார்கள். இவ்வாறு புலவர்களாற் றெருகுத்துக் கொடுக்கப்பட்ட சங்ககால நூல்களே பண்டைத் தமிழ் நாட்டின் சிறப்பும், அந்நாட்டினொழுக்கமுமறிவதற்குச் சிறந்த துணைக் கருவிகளாயிருக்கின்றன. பலவாறு பல புலவர்களாலும் புகழ்ந்து பாடப்பட்ட தமிழுலகம் இப்போதுள்ள சிறிய நாடாகாது. கடல் கொண்டொழித்த குமரித்துறைக்குத் தெற்கேயுள்ள இந்து மாக்கடலின் பெரும்பகுதியும், அப்பகுதியிலுள்ள நாற்பத்தொன்பது நாடுகளும், குமரியாறும், பஃறுளியாறும், மலைபும், நாவலந் தீவுகளுஞ் சிறந்தொருங்கு தோன்றிய பெரிய நாடாகும். இந் தப் பெரும் பரப்பமைந்த நாட்டிற்கே குமரிக்கண்டமெனப் பெய ரிட்டு வழங்கினர். அக்காலத்தியற்றிய நூல்கள் கிடைக்காது போகவே யந்த நாட்டிலிருந்த பழக்க வழக்கங்களும் நாமறிதற் கியலாவாயின. தென்னாடு கடல் கொண்டொழித்துப் போகவே யதிலிருந்தும் மீண்டு வந்த புலவரும் அரசரும் மதுரையென வழங்கும் நான்மாடக் கூடலிற் சங்கம் நிறுவியாய்ந்த தமிழ்ப்பாக் களே யிப்போது நமக்குக் கிடைத்துள. இவ்வரலாறு "பஃறுளியாற்றுடன் பன்மலையடுக்கத்துக், குமரிக் கோடுங் கொடுங் கடல்கொள்ள" வென்று கூறுஞ் சிலப்பதிகாரவடிகளாற் காண லாம். இப்பொழுது கடல் கொண்டொழித்ததுபோக வெஞ்சிய தமிழ் நாடு "குணகடல் குமரி குடகம் வேங்கடமெனு நான் கெல்லை" யென்ற வாற்றால், இந்நான்கெல்லைகளையுந் தனக்குப் புறத்தே கொண்டு விளங்குவதாகும்.

இந்நாடானது பண்டைக்காலத்தில் வாணிகத்திற்றிகழ்ந்து விளங்கியதால் அளவற்ற மணிகளும், முத்துக்களும், பொன்னும், விளைபொருட்கள் முதலியவையும் மலிந்துகிடந்தனவென்பது தெற்றென விளங்கும். அக்காலத்திற் கிரேக்கரும் எகிப்தியரும் கலங்கொண்டு கடல் கடந்து வியாபாரத்தின் பொருட்டுத் தென் னூடாகிய தமிழ் நாட்டில் வந்திறங்கினர். அவ்வாறு வந்தவர்கள் தங்கள் நாட்டிலுள்ள சாம்பிராணி, பேழை முதலிய பல்வகைப்

பொருள்களைக் கொடுத்து முத்துக்களையும் மணிகளையும் ஆடைகள் முதலாயினவற்றையும் பெற்றுச் சென்றனர். வியாபாரத்திற்காக வந்த கலங்கள் தங்கிச் செல்வதற்காகத் தென்னாட்டின் மேலைக்கரையில் முசிரியும், தெற்கே குமரித்துறையும், கிழக்கே பொற்கையுந் துறைமுகங்களாக வமையப்பெற்றிருந்தன. கிழக்குக் கரையிலிருந்த கொற்கையன்றி கமரா, படுகாவென்ற துறைமுகங்களுமிருந்தன. அவைகளே இப்பொழுது விளங்கும் காவிரிப்பூம்பட்டினமும் பாண்டிச்சேரியுமாகும். இன்னும் குதிரை, மிளகு, தும்பிக்கொம்பு, அகில் முதலிய பொருள்களும் வியாபாரஞ் செய்யப்பட்டன. இவ்விதம் வாணிகம் நிகழ்ந்ததை;

" நீரின்வந்த நிமிர்பரிப் புரவியுங்
காலின்வந்த கருங்கறி மூடையும்
வடமலைப்பிறந்த மணியும் பொன்னுடுங்
குடமலைப்பிறந்த வாரமு மகிலுந்
தென்கடல் முத்துங் குணகடற்றுகிருங்
கங்கை வாரியுங் காவிரிப் பயனு
மீழத் துணவுங் காழகத் தாக்கமு
மரியவும் பெரியவும்........."

என்று பட்டினப் பாலையிற் கூறியவாற்றால் விளங்கா நிற்கும். " எரிமணிச் செம் பொனார்ந்தவிராயிரம் யவனப் பேழை "யென்று சிந்தாமணியாசிரியர் கூறிப் போந்தவாற்றான் கலத்தின் மூலம் யவனருங் கிரேக்கரும் வாணிபம் நிகழ்த்தினார்களென்பது துணிவு. இன்னும் அவர்களெழுதிவைத்த குறிப்புக்களானு மறியலாம்.

இத்தகைய வளப்பம் பொருந்திய தமிழ் நாடானது மக்கள் மகிழ்தற்குரிய வியற்கையழகும், நீர்வளனும், நிலவளனும், பொருள் வளப்பமும் பெற்றிருந்ததால் அவர்கள் செய்கை வளமுமியல்பே யமையப்பெற்றினிது வாழ்ந்தனர். வறுமையறியாது மகிழ்ந்திருந்த அக்காலத்திற் பொய், களவு, சூது முதலாயின—

வெளிக்காட்டாவாயின. பற்பல தொழில்களும் மேன்மேலு முயர்ந்து விளங்கின. புலவர்களும் அரசர்களுஞ் சேர்ந்து முத் தமிழ் வளர்க்கத் தொடங்கினர். அவ்வாறு வளர்ப்பதற்கு அர சர்களுங் கல்வியிற்றிகழ்ந்து புலவராய் விளங்கியதோடு புலவர் களையுமாதரித்து வந்தார்கள். இவர்களால் யாக்கப்பட்டுத் தந்த நூல்களே ஐம்பெருங்காப்பியங்களுந் தொகை நூல்களுமாகும். அவற்றுள் நமக்குக் கிடைக்கப்பெற்றவை சிலப்பதிகாரம், சிந்தா மணி, மணிமேகலை யென்ற மூன்று நூல்களே, எஞ்சிய வளையா பதி, குண்டலகேசியென்ற விரண்டு நூல்களுமிதுவரையிலுங் கிடைத்தில. இவை யைம்பெருங்காப்பியங்களாகும். மற்றத் தொகை நூல்களும் கீழ்க்கணக்கு நூல்களுமின்றுமழியாது போற்றப்படுகின்றன. மேற்கூறிய சங்ககால நூல்களிலிருந்து அக் காலத்து மக்களின் உயரிய குணம், வீரம், செய்கை, தொழில் முதலாயின விரிவாகக் காணலாம்.

இனி யொவ்வொரு மனிதனுமடையக்கூடிய பொருள் (உல கில்) அறம், பொருள், இன்பம், வீடென நான்காகும். இந்நாற் பொருளையும் வள்ளுவர் முப்பாலுளடக்கித் தந்த தமிழ்மறை யானது உலகம் போற்ற மிளிர்கின்றது. ஒரு நாட்டின் சிறப்பை யந்நாட்டின் மொழியாலன்றோ வறியலாகும்.

“ நற்றவஞ் செய்வார்க்கிடந்த வஞ்செய்வார்கு மஃதிட
நற்பொருள் செய்வார்க்கிடம் பொருள் செய்வார்க்கு மஃதிடம் ”

என்ற சிந்தாமணிச் செய்யுளான் வீடு பெறத் தவஞ்செய்வதற் கும், மறுமை கருதி யில்லறம் நடத்துவதற்கும், நற்பொருளைப் பயக்குங் கல்வியைக் கற்பதற்கும், நிலையாத பொருளைத் தேடு தற்கு மிடமாயுள்ளது நந்தமிழ் நாடென்று கூறியிருத்தலையு முணர்க. இத்தகைய வளப்பம் பொருந்திய நாட்டையும், அதில் வழங்கிவருந் வாய்மொழியாகிய தமிழையு மிகழ்வோர் வீணரும் பொறி யினருமாவர். தனக்கு நிகரில்லாது வழங்கிவருந் தமி ழென்னுஞ் சொல் ‘ இனிமை ’ ‘ இயற்கை ’ யெனப் பலவாறு

புகழப்படுகிறது. "தமிழியற்கையின்பம் நிலைபெற" வென்றும் "தமிழ்தழீய சாயலவர்" என்றும் வழங்கியிருத்தலுங் காண்க. நமது மணிவாசகப் பெருமானுந் தாமருளிச் செய்த திருக்கோவையாரில் பாங்கற் கூட்டத்தில் பாங்கன் தலைவனை வினாதலென்ற துறையில் அகப்பொருளிலக்கணத்திற் சிறந்த செந்தமிழின் பெருமையைக் கூறுவான் றொடங்கிச் ;

"சிறைவான் புனற்றில்லைச் சிற்றம்பலத்துமென் சிந்தையுள்ளு
முறைவானுயர் மதிற் கூடலினாய்ந்தவொண் டீந்தமிழின்
றுறைவாய் நுழைந்தனையோ வன்றியே ழிசைச் சூழல்புக்கோ
விறைவா தடவரைத் தோட்கென் கொலாம் புகுந்தெய்தியதே"

என்று சிறப்பித்துப் பாராட்டி யிருக்கிறார்.

உயரிய கருத்துக்களைத் தம்மகத்தே கொண்டதாக விளங்குந் தமிழ்ப் பாக்கள் பலப்பல. நற்றிணையில் நெய்தற்றிணையிலுள்ள பாவொன்றைத் தமிழ்ச் செல்வம் படைத்த கவி சித்திரித்துள்ளார். அஃதாவது தலைவியைப் பிரிந்துசென்ற தலைவன் வருகிறான். அவன் ஊர்ந்து வருந்தேரிற் கட்டிய மணியோசையைக் கேட்ட தலைவி தன்னில்லின் வாயிலில் வந்து ஓசை வருந்திக்கை நோக்குகின்றாள். தேரோ தன்னூர்க்கண் வராது வேறு பக்கம் பாகனாற் செலுத்தப்படுவதைக் காண்கிறாள். பாகன் சாட்டையைக் கொண்டு குதிரையை யடித்துத் திருப்பும்போதெல்லாம் அவ்வடிகள் தன்னெஞ்சத்திற் பட்டதாகத் தலைவி துடிக்கின்றாள். இத்தகைய நிகழ்ச்சிக் குவமை கூறுவதெளிதன்று. ஆனால் நந்தமிழ்ப் புலவனழகிய வுவமை யொன்றைக் கூறியிருப்பது மிகவும் வியக்கத்தக்கது. அஃதாவது, செல்வனின் மகனொருவன் கழுத்திற் பறையைத் தொங்கவிட்டுக் கொண்டு, அதைக் குச்சியான் முழக்குகின்றான். அந்தப் பறையின் கண்மேல் குருவியொன்றின் ஓவியந் தீட்டப்பட்டிருக்கிறது. அக்குருவியை அவனடிக்கவேண்டுமென்ற வெண்ணமில்லாவிடினும், அவன் அடிக்கும்போதெல்லாம் அக்குருவியுமடிபடுகிறது.

அது போலத் தலைவியும் நொந்தனளென்று வெகு அழகாகக் கூறியுள்ளார். இவ்வாறுவமைகளும், உள்ளுறையுவமங்களும் உன்னுந்தோறு முன்னுந்தோறும் புதுப்புதுக் கருத்துக்களை வெளிப்படுத்துவனவாய் நந்தமிழ்க் கவிதைகள் விளங்குகின்றன. பெண்மணிகள் புலவர்களாயும், வீரம் படைத்தவர்களாயுந் தமிழ் நாட்டிற் றோன்றி நாட்டைச் சிறப்பித்தனர். நாட்டின் வளப்ப மிகுதியாலரசர்களே யன்றி வள்ளல்களும் பொற்றேர், மணி படாம், பொன், பொருள் முதலாயினவற்றை இரவலர்க்கு வெறுக்குமாறீந்தனர். உலகில் வழங்குமெம்மொழி யினுந் தனித் தியங்குந் தன்மை வாய்ந்தது, நமது நாட்டில் வழங்குந் தாய் மொழியான தமிழ் மொழியாகும்.

இருபதாம் நூற்றுண்டில் நந்தமிழகம் சீர்குலைந்து நிலைகலங்கி யிருப்பதற்குக் காரணமென்னை யெனில் ஒவ்வொருவருக்குந் தாய்நாட்டுப் பற்றுந் தாய்மொழிப் பற்றுமில்லாமையேயாம். முற்கூறியவாறு ஒரு நாடு முன்னேற்றமடைய வேண்டுமானல் நாட்டுப் பற்றுந் தாய் மொழிப்பற்றும் ஒவ்வொருவனுள்ளத்தி லும் மெய்யுணர்ச்சியோடுற்றெழ வேண்டும். சான்ருக :-இற்றைக் கேறத்தாழ 30 ஆண்டுகளுக்கு முன்னிருந்த தாழ்ந்த நிலையி னின்றும் ஜப்பான் இன்று உலகத்தில் முதன்மையான நாடுகளு லொன்ருய்த் திகழ்கிறது. காரணந்தானென்ன? அவனை நீ யாரென்று வினவினல் நான் 'ஜப்பானியன்' என்று தன்னுட்டை யுந் தாய்மொழியையுங் குறிப்பிடுகின்ருன். அதே போன்று சீன தேசத்தவர் சீனரென்றும், ஜெர்மானி தேசத்தவர் ஜெர்மானிய ரென்றும், பிரான்ஸ் தேசத்தவர் பிரான்ஸ் என்றும் அயல் நாட்ட வர்கள் தத்தம் நாடுகளையும் அந்நாட்டில் வழங்கும் மொழிகளையுங் குறிப்பிடுகின்றனர். நமதிந்திய நாட்டிலும் வங்கநாட்டினர் வங் காளியென்றும், துளுவநாட்டினர் துளுவரென்றும், தெலுங்க நாட்டினர் தெலுங்கரென்றும், கன்னட நாட்டினர் கன்னடரென் றுந் தங்கள் தங்கள் நாடுகளையும், அந்நாடுகளில் வழங்குந் தாய் மொழிகளையுங் குறிப்பிடுகின்றனர். இவ்வாறு நமதிந்தியநாட்டி

லும் வேறு நாடுகளிலும் ஒவ்வொருவருக்கும் நாட்டுப்பற்றும் மொழிப்பற்றுமிருப்பதை நாம்கண்கூடாகப் பார்க்கிறோம். ஆனாற் றமிழ்நாட்டிற் பிறந்த வொரு வீரனை நீ யாரென்றால் நான் செட்டியாரென்பான் அல்லது முதலியார், பிள்ளை, நாயக்கன், ஆச்சாரியா ரென்பன போன்ற சாதிப் பிரிவினையைக் கூறிமகிழுகின்றான். பக்கலில் வழங்குவதையாகிலுங் கேட்டுச் சொல்லவு மாற்றலில்லாதவனாயிருக்கிறான். தற்கால வாங்கில வாட்சியில் நடைபெறும் மொழி வழக்கும் ஆங்கிலத்திலேயே நடைபெறுகின்றது. தமிழ் நாட்டிற் பிறந்த வீரர்கள் ஆங்கிலங் கற்று வயிற்றுப் பிழைப்பிற் காகப் பதவி மோகங்கொண்டு நன்னிலை யடைந்தவுடன் தாய் மொழியை யிகழ்கின்றனர். அவர்கள் மன்றங்களில் ஆங்கிலம் பேசுவதோடு நில்லாமற் றத்தமில்லங்களிலுஞ் சிறு குழந்தைகள் தாய் மொழியைச் செவ்வையாகப் பயிலுவதைத் தடுத்து ஆங்கிலச் சொற்களைக் கலக்கின்றனர். இவர்களிற் பெரும்பான்மையோர் தமிழ் நன்றாயெழுதப் படிக்கத் தெரியாதவர்களே. ஒருவன் எத்துணை மொழிகள் வேண்டுமாயினுங் கற்கலாம். ஆனாற் றாய் மொழி கற்றபின்னரும் பற்றுதல் நீங்கிவிடலாகாது. ஆங்கில நாட்டினரான கால்டுவெல் ஐயர் தமிழ் நாட்டிற் போந்து தமிழுக்காக வியற்றிய தொண்டுகள் அளவற்றவை. அவரா லியற்றப்பட்ட "ஒப்பிலக்கணம்" என்ற தமிழ் நூல் பண்டைக் காலத் தமிழ்நாட்டின் சிறப்பினை யின்று நமக்குக் காட்டி நிலவுகிறது. ஐரோப்பியப் பெரியாரான வீரமாமுனிவரும் தமிழ் மொழியில், பன்னீராயிரம் பாக்களால் யாத்த தேனினுமினிய 'தேம்பாவணி' யென்ற நூலை யியற்றித் தந்துள்ளார். திருவாசகம், திருக்குறள், நாலடியார் முதலிய நூல்கள் பிறமொழியில் மொழிபெயர்க்கப்பட்டு அயல் நாடுகளிலுலாவுகின்றன. இவ்விதமாக அயல் நாட்டினரும் நமது தமிழ் மொழியின் சுவையையும், அம்மொழியாலாக்கப்பட்ட கவிதையும், அக்கவியிற் றொகுக்கப் பட்ட நாட்டின் எழிலையுங் கண்டு மகிழ்ந்து தமிழைக்கற்றுக் கவி பாடினரென்றால் நமது நாட்டிற் பிறந்த நாம் கல்லாதிருத்தல் இழி

வினுமிழிவன்றே. வங்காள நாட்டிற் பிறந்த ரவீந்திரநாத்தாக் கூரவர்கள் ஆங்கிலங் கற்றறிவிற் றிகழ்ந்த உலக கவிகளிலொருவ ராவர். அவர்தமது தாய் மொழியாகிய வங்கமொழியிலன்றோ "கீதாஞ்சலி" யென்ற நூலை யியற்றியிருக்கிறார். என்னே ! அவருக்குத் தாய்மொழியிலும் நாட்டிலுமுள்ள பற்று. அப்பேர்ப் பட்ட கல்விச்செல்வர்களைப் படைத்த நாடன்றோ நாடாகும். மற்ற நாடுகளிருந்தும் பயனில. நாமும் இந்திய நாட்டிலுள்ள வங்காளி யரைப்போல் முன்னேற்றமடைய வேண்டுமானால், தமிழிலக்கியஞ் செழிப்புற வேண்டுமானால் தமிழ்மொழியிற் கண்ணுங் கருத்து மாயிருக்கவேண்டும். இல்லாவிடில் நமது தமிழன்னை யியற்கை யெழிலை யிழந்துவிடுவாளென்பது திண்ணம்.

இனிக் கற்றறிந்த புலவர்கள் பலரும் தமிழிலக்கியப் பகுதி களிற் காணும் பொருள் நயங்களையும், அக்கால வரலாறுகளையு மாராய்ந்து வெளியிடல் வேண்டும். இதற்காக வரசாங்கத்தார் தாங்கள் செய்யுஞ் சிறுவுதவியோடு நில்லாமல் இன்னும் பொருட் செலவிட்டுத் தமிழை வளர்க்க முன்வரல்வேண்டும். இவ்வாறு பணியாற்றத் தொடங்கினால் ;

"உள்ளத்தின் உண்மையொளி யுண்டாயின்
வாக்கினிலே ஒளியுண்டாகும் ;
வெள்ளத்தின் பெருக்கைப்போல் கலைப்பெருக்கும்
கவிப்பெருக்கும் மேவுமாயின்
பள்ளத்தின் வீழ்ந்திருக்கும் குருடரெலாம்
விழிபெற்றுப் பதவிகொள்வார் ;
தெள்ளுற்ற தமிழமுதின் சுவைகண்டார்
இங்கமரர் சிறப்புக்கண்டார்"

"செந்தமிழ் நாடெனும் போதினிலே—யின்பத்
தேன் வந்து பாயுது காதினிலே" என்றும்,

பாரதியார் பாடிய பாட்டின் கருத்து நமக்கு என்றும் தோன் றும். அவ்வாறு தோன்றவே மொழிப்பற்றும் நாட்டுப்பற்று

முடையவராகிச் செவிட்டுத் தன்மையுங் குருட்டுத் தன்மையும் ஊமைத்தன்மையும் நீங்கப்பட்டுத் தெருவெல்லாந் தமிழ் முழக்கம்செய்வோ மென்பதுண்மை.

A. கண்ணப்பன்,
தமிழ் மாணவன்.

ஓர் சிறு தொடை விடையாடல்

[காவிதி என்பவன் சிறந்த பண்புடையவன் அவனுக்குப் பல நண்பர்களுண்டு. அவர்களில் முக்கியமானவர்கள் 'பட்டி, எட்டி, ஏனுதி என்பவர்கள். எட்டி யுண்மை நண்பன். பட்டி கபட நாடகன். ஏனுதி இரண்டிலுஞ் சேராதவன்.]

இடம் :—காவிதியின் வீட்டில் ஓர் அறை. (பட்டி வருகிறான்.)

பட்டி :—என்ன காவிதி! உன்னைப் பார்ப்பதே யருமையாயிருக்கிறதே. நீ எப்படி நூலைப் படிப்பதும், சாப்பிடுவதுமாய்க் காலத்தைக் கழிக்கிறாய்? உனக்குலகமே தெரியாது போலிருக்கின்றது. எங்களைப் போல் வெளியே வரக்கூடாதா? போகட்டும். நீ நம்மூரிலுள்ள பெண்களைப்பற்றி யென்ன நினைக்கிறாய்?

காவிதி :—உம். போதுமப்பாவுன் பேச்சு. உனக்கெப்பொழுது பார்த்தாலும் சகோதரிகளின் பேச்சுத்தானா? நீ யவர்களைப்பற்றிப் பேசுவது என்னமோ? எனக்குக் கொஞ்சங்கூடப் பிடிக்கவில்லை.

பட்டி :—ஆமாம். தெரியுமடா உன் போன்ற பூனைகளை? பின் எதற்காக நம்மூர்க் கண்மணியிட மடிக்கடி பேசுகிறாய்? பாவம். உனக்குத்தான் அந்த வர்க்கமே பிடிக்காதே.

காவிதி :—(கோபத்துடன்) நீ யுன் பேச்சை நிறுத்துகிறாயா? இல்லையா? உனக்கு என்ன கூறியுந் தெரியவில்லையே. பெரியவன் என்றால் எதுவுஞ் சொல்லலாமோ? இனிமேல் பெண்களைப்பற்றி ஏதாவது கூறு, சொல்லுகிறேன்.

பட்டி :—கோபிக்காதேடா. இப்போது உன் கண்மணியைப்பற்றிக் கெடுதலாக என்ன கூறிவிட்டேன். நம்மூர்ப் பெண்களின் பெயரைப் பார். கண்மணி, மலர்மங்கை, பூரணி, சரஸ்வதி, லட்சுமி,—என்ன இவர்கள் தேவலோக மாதர்கள்தானுக்கும்? கண்மணியைப் பார். சகிக்கவில்லை. மாறுகண் போல் தோன்றுகிறது. மலர் மங்கையையோ கேட்கவேண்டாம். குளித்துப் பன்னாட்களானது போலிருக்கிறது. பக்

கத்திற் சென்றால் ஏழூர் நாற்றம் பிடுங்குகிறது. பூரணியைத்தான் தெரியுமே. தரித்திரத்தினிருப்பிடம். வயது மாத்திரங் கழுதைக்குப் போலாகிறது. வெட்கமில்லாமல் வெளியில் வந்து நிற்கிறது. இதற்குள் மணஞ்செய்து கொடுத்திருந்தால் குறைந்தது ஐந்தாவது........... இப்போதுதான் என்ன நினைத்துவிட்டாய். நம்மூர் பையன்கள் சும்மாவா........... ?

காவிதி :—போதும். நிறுத்தப்பா. இதற்குத்தானா ? இங்கு அவசரமாக வோடிவந்தாய் ?

பட்டி :—என்னடா இப்போதவசரம். ஒரு செய்தி ; கேள். அந்தப் பெண் மலர்மங்கையைத் தானுனக்குத் தெரியுமே. அவள் எப்போது பார்த்தாலும் என்னையே பார்க்கிறாள். இந்தக் காலத்துப் பெண்களுக்கென்ன துணிச்சல். நான் எப்படியாவது அவளை மணம் புரிந்துகொள்ளவேண்டுமாம். இல்லையேல் தற்கொலை செய்துகொள்ளப் போகிறாளாம். பெண்ணென்றால் இப்படியாவிருக்கிறது. பாவம். அதற்காக நானும் உடன்பட்டிருக்கிறேன். சீக்கிரம் மணம் முடிந்துவிடும். அதற்குமேல் பார்த்துக்கொள்கிறேன். (இப்போது எட்டி வருகிறான்).

காவிதி :—சரி. பிரசங்கம் முடிந்துவிட்டதா ? போய்வருகிறாயா?

பட்டி :—எட்டியோடு தனித்துப் பேசவேண்டுமாக்கும். நான் போகிறேன்.

காவிதி :—என்ன எட்டி ! பட்டி பேசியதைக் கேட்டாயோ. பெரிய களேபாரம் பண்ணுகிறான். அவன் நேரத்துக்கொரு சட்டை போட்டுக்கொண்டு திரிவதும் பாவம் பரிசுத்தமான மலர்மங்கையைப் பற்றி யிவ்வாறு அவதூறாகப் பேசுவதும் எனக்கென்னமோ பிடிக்கவில்லை. நீ யென்ன நினைக்கிறாய் ? அந்தப் பெண், இருந்திருந்து இந்தத் தடியனையா? மணஞ்செய்துகொள்ளப் போகிறாள். அவளுக்கென்ன இப்படிப் புத்திபோய்விட்டது. எல்லாந் தலைவிதி. அவன் விதித்ததை மாற்ற முடியுமா ?

எட்டி :—என்னப்பா. உனக்குத்தான் பைத்தியம் பிடித்திருக்கிறது. சொல்லுகிறவன் சொன்னால் கேட்டவனுக்கு மதி யெங்கே போய்விட்டது. என்னடா ! ஒன்றும் தெரியாதவன்போல் பேசுகிறாய்.

என்ன நடந்தது தெரியுமா? அவன் அந்தப் பெண்ணிடஞ் சென்று பல்லைக் காட்டிக் கெஞ்சினனும். அவள் தான் செல்ல இருந்த இடத்தின் விலாசத்தைக் கொடுக்க மறுத்துவிட்டாளாம். இந்தப் பயல் அவள் எந்த ஊருக்குப் போகிருள் என்று பார்த்திருந்து அந்த ஊருக்குச் சென்று உதைவாங்கித் திரும்பியிருக்கிறான். அவளினப்பா மிகவும் நல்லவராம். பெண் விரும்பியவனை மணஞ்செய்து கொள்ளலாம் என்று கூறிவிட்டாராம். உம். நீயும் போட்டி போடுகிறதுதானே.

காவிதி :—நீ உன் புராணத்தை யாரம்பித்துவிட்டயா? என்னைக் கேலிபண்ணுமல் ஒரு நிமிடங்கூட உன்னலிருக்க முடியாதே. உன்னை என் காதலைப்பற்றி மாத்திரம் பேசாதே என்று எத்தனை முறை கூறியுள்ளேன். புத்தியிருக்கிறதா? காதலென்றல் தூக்கென்ன விலையென்று கேட்கிறவன் நீ. அது சொல்லித் தெரிந்துகொள்வதல்ல. இறைவனருளோடு பொருந்திய மன நிகழ்ச்சியுடன் கூடியது.

எட்டி :—அடடா, உன் காதல் கடவாப்பெட்டியை யிங்கே திறக்காதே. காதல் தானே, காளமேகத்தில் போய்ப்பார். இளமை யழகு, வசீகரம் இவைகள் தானே கண்கண்ட தெய்வங்கள். பதினறு வயதுப் பையனுக்கும் பத்து வயதுப் பெண்ணிற்கும் என்னடா காதல் வேண்டியிருக்கிறது. என் எனுதி! திடீரென உன் முகமிப்படி மாறிவிட்டது. உன்னை என்ன சொல்லிவிட்டேன். மன்னிக்கவும்.

[அன்று முழுவதும் காவிதி ஒருவரிடமும் ஒழுங்காகப் பேசவில்லை. எட்டியிடம் முன்போல் அன்பாய் நடந்துகொள்ளவில்லை.]

காவிதி :—(தனித்து) நட்பு என்று கூறுவதெல்லாம் இவ்வளவு தான் போலும். இவ்வற்பனிடம் நட்பு வைத்துக்கொண்டது தவறுதலாய்விட்டது. இப்பொழுதுதானிவனை யறிந்தேன்.

எட்டி :—என்னடா காவிதி! ஆழ்ந்த ஆலோசனையிலிருக்கிருய்?

காவிதி :—என்னைத் தொடாதே. ஒன்றும் யோசனையில்லை.

எட்டி :—தொட்டால் ஒட்டிக்கொள்ளுமா என்ன, சரி. ஏன்? என்னிடம் முன்போல் பேச மறுக்கிருய்?

காவிதி :—சீ. என்னைத் தொந்தரவு செய்யாதே.

6

[இப்பொழுது காவிதிக்கு ஏனுதி யென்ருெரு புதிய நண்பருண் டாகிருர்]

ஏனுதி :—என்ன காவிதி! நான் கூறியதெப்படி? அஃதிருக்கட் டும். நாமன்று அம்பிகாபதியைப் பார்த்தோமல்லவா? அப்பப்பா என்ன அருமையாய்ப் பாடுகிருர் பாக்வதர். காதற்பாட்டின் மகத்துவமே மகத் துவம்.

காவிதி :—ஏன்? உனக்குத் தான் பாடவருமே? எங்கே யந்த "சந்திரசூரியர்" என்ற பாட்டைப் பாடு கேட்கலாம்.

ஏனுதி:—என்னவிருந்தாலும் பாகவதரைப் போல பாடமுடியுமா?

காவிதி :—ஊம். பரவாயில்லை.

ஏனுதி :—(பாடுகிருன்)

"சந்திர சூரியர் போங்கதிர் மாறினும்
வீழினும் நமக்கென்ன
இந்த யின்பமே சொந்தமதானுல்
வானுலகும் வேண்டாம் (சந்திர)

காவிதி :—ஆகா! என்ன காதல் ரசம்? காதலை யறியாதவர்கள் கயவர்கள்தான். காதலுக்கு வேலிபோடுவது கண்ணில்லாதவன் செய்கை. காதலைத் தடை செய்ய இவ்வுலகில் கருவியில்லை யென்றல் லவா கூறியிருக்கிறது. அப்படியானுல் என் காதலைக் கடவுள்தான் பூர்த்திசெய்யவேண்டும்.

ஏனுதி :—ஆம். எனக்கும் அப்படித்தான்.

காவிதி :—(வியப்புடன்) என்னடா உனக்கு.

ஏனுதி :—எனக்கா? ஒன்றுமில்லை.

காவிதி :—எதற்காக மறைக்கிருய்? சும்மா சொல்லு.

ஏனுதி :—அது ஒரு நவீன ராமாயணமப்பா.

காவிதி :—எதாயிருந்தாலென்ன? பரவாயில்லை. கூறு.

ஏனுதி :—பட்டணத்தில் ஓர் மாதரசியைக் காதலிக்கிறேன். அவளும் என்னைக் காதலிக்கிருள். ஆனுல் அது என் சுற்றத்தாருக்கு மாத்திரம் பிடிக்கவில்லை.

காவிதி :—ஏண்டா, நீ காதலிக்கிறவள் மாதரசி யென்று கூறிவிட்டாயே. அப்படியானுல் நான் காதலிக்கிறவள்......?

ஏனுதி :—மாதரசி யென்ருல் சிறந்தவள் என்றுதானப்பா பொருள். அதனுல் நீ காதலிக்கிறவள் குரங்கரசி என்று எண்ணிவிடாதே.

காவிதி :—நானும் ஓர் அரசியைக் காதலிக்கிறேன். அவள் இப்பொழுது படித்துக்கொண்டிருக்கிருள்.

ஏனுதி :—பெண்ணிற்குப் படிப்பென்ன வேண்டியிருக்கிறது. என் காதலி மிகுந்த அழகுடன் நற்குண நற்செய்கை வாய்ந்தவள். பாவம். அவள் வீட்டாருடன் என் தகப்பனுர் சண்டை போட்டுக்கொண்டதால் மணஞ் செய்துகொள்ளக்கூடாதாம். என்ன உலகம். இவர்களுக்கு இளைத்தவனு நான். பெண்ணுக்கும் வயதாகிவிட்டது. நீதிமன்றமிருக்கிறது. மணப்பதிவு செய்துகொள்ள யாருக்கஞ்சவேண்டும்? பாட்டனுர் சொத்து பதினுயிரம் ரூபாய்க்குக் குறையாமல் கிடைக்கும். எதற்காகத் தகப்பனுரை யெதிர்பார்க்கிறது. கிடக்கிருர்.

காவிதி :—என்ன அழகு வேண்டியிருக்கிறது. "லவ் நோஸ் நோ பியூட்டி." என் விஷயத்தில் பெண் காதலிக்கிருள். ஆனுல் தகப்பனுர் பணக்கார வீட்டுப் பெண்ணைப் பார்க்கிருர். பெண் வீட்டார் சுமாரான பேர்வழிதான். பெண்ணிற்கும் வயது பத்துதானுகிறது. என் தகப்பனுருக்கு விரோதமாக வொன்றும் செய்ய முடியாது. என்னவோ கடவுள் விட்டபடி நடக்கட்டும். மணம் புரிந்தாலவளை. அல்லது பிரம்மச்சாரிதான். வற்புறுத்தினுல் இறப்புத்தான்.

ஏனுதி :—நீ அதைப்பற்றிக் கவலைப்படாதே. தகப்பனுரால் என்ன செய்ய முடியும். பெண் காதலித்தால் போதாதா? எனக்கு எப்படியும் அந்தப் பத்தாயிரம் ரூபாய் இன்னும் ஒருவருடத்தில் கிடைத்து விடும். அதில் பாதியை உனக்குத் தந்துவிடுகிறேன். இருவரும் சென்னையில் ஓர் பெரிய வீடு வாங்கி வசிக்கலாம். என்ன? நமது கிராமத்ததிகாரிகள் எல்லோரும் ரெம்ப மோசம். தலைமையதிகாரியோ அவர்களைவிட மோசம். ஒருவன் பொல்லாத குடியன். ஒருவன் சம்போகப் பிரியன். ஒருவனுக்கு அழகுள்ள பையன்களில் நாட்டம். கற்புள்ள பெண்களைக் கண்டால் முகவாட்டத்தோடு எடுப்பான் ஓட்டம். நீயேன் அந்த எட்டிப் பயலோடு நட்பு வைத்துக்கொண்டிருக்கிருய்? அந்தப்

பயல் அதிகாரிகளின் வால் பிடிக்கிறவனுச்சே. பக்காக் காக்கா. உன்னைப்பற்றி யென்னென்னமோ ? அதிகாரிகளிடங் கூறுவானே ? ஒன்று கூறுகிறேன். அவனேடு நட்பு வைத்துக்கொள்ளாதே.

காவிதி :—நானவனிடம் ஒன்றும் சொல்லுவதில்லை. நானும் அதிகாரிகளை நல்லவர்கள்தான் என்று எண்ணியிருந்தேன். இப்போ தல்லவா புரிகிறது. இனிமேலவர்கள் வரிவாங்க வரட்டும். சொல்லுகிறேன்.

ஏனதி :—(அன்று பிற்பகலில்) டேய் பட்டி ! காவிதி வடிகட்டின மடையண்டா. அவனுக்குப் பையித்தியமோ ? என்னவோ ? தெரியவில்லை. பையன் வயதென்ன ? ஒரு பெண்ணைக் காதலிக்கிருனும். காதலியின் பெயர் அமிர்தம்மாளாம். நல்ல பெயர். நல்ல இனிப்புப் பண்டமாகப் பார்த்திருக்கிருன் பயல். தேனென்று ஒரு பெண்ணின் பெயரிருந்தால் அதையும் விரும்புவான்போலிருக்கிறது. அமிர்தத்தோடு தேனையும் கலந்துண்டால் அவைகளினும் பிறிதாயதோர் சுவை கிடைக்கும் என எண்ணிவிடுவான்போலிருக்கிறது. நானும் என்னென்னமோ கூறி ஒரு பெண்ணையுங் காதலிக்கிறேன் என்று கதையளந்தேன். அவனுள்ளதை யெல்லாம் கொட்டிவிட்டான். பைத்தியக்காரப் பயல். உலக ஞானமே கிடையாது. எனக்குப் பாட்டனர் சொத்துப் பதினயிரம் வரும். சென்னையில் ஒரு பங்களா வாங்கி வசிக்கலாம் என்று அளந்தேன். நம்பிவிட்டான். பதினயிரத்துக்குப் பங்களா வாங்கமுடியுமா என்பதை நினைத்தானு ? பெரிய பங்களாவென்ருல் பெரிய குடிசை யென்று நினைத்துவிட்டான்போலும். இப்போது தெரிகின்றதடா அவன் கண்மணியைக் காதலிக்கவில்லை நேசிக்கிருன் என்று. நமது சாமானைப் பிடுங்கித் தின்றுவிடுவானென்று உன்னைச் சந்தேகம் பிடுங்கித் தின்றதே. இப்போது உண்மையை உணர்ந்தாயோ ? இனி மன நிம்மதியாயிரு. பிராணனை விடாதே.

பட்டி :—எது ? ஒரு பெரிய காரியத்தைச் செய்துவிட்டவன் போல் வாய்வீச்சு வீசுகிருயே ? அதை யொரு பிரசங்கமாக முடித்து விட்டாயே. என்ன இருந்தாலும் அவன், கண்மணியை, என்னுயிரை, என் திலகத்தை, என்னின்பத்தைக் காதலிக்கவில்லையென்று கூறினையே அதற்கு வணக்கம். இனி எப்படியும் நான் கண்மணியை

யடைவதற்குரிய வழிகளை இதேமாதிரிச்செய்து முடித்துவிட்டாயானல் நீதான் உண்மை நண்பன்.

ஏனுதி :—என்ன நினைத்துவிட்டாய்? அதோடாபோயிற்று. பேச் சோட பேச்சா அந்தப்பயல் எட்டியிடம் எதற்காகடா நட்பு வைத்திருக் கிருய் என்றுகூட போட்டுவைத்திருக்கிறேன். இனிமேல் அடிக்கடி யவனிடஞ் சென்று ஏதாவது காதற் பாட்டுப்பாடி அழகாகப் பேசிக் கண்மணியின் முழு விபரமும் தெரிந்துகொள்ளவுஞ் செய்வேன். எட்டி யிடம், டேய் உன்னைப்பற்றிப் பலர், எதற்காக எட்டியிடம் நட்பு வைத் திருக்கிருயென்று காவிதியிடங் கேட்கிருர்கள். அவனுக்குன்னிடம் நட்போடிருக்க வெட்கமாயிருக்கிறது. உண்மை நண்பனுயிருந்தால் அவன் நன்மைக்காகவாவது நீ யவனுடன் முன்போல் பழகக்கூடாது, என்று சொன்னுல் அவர்கள் நட்பு அதோடு முற்றுப் புள்ளிதான்.

[சில நாட்கள் கழித்து ஏனுதி, எட்டியைச் சந்தித்து]

ஏனுதி :—என்ன? எட்டி! பார்த்தாயா? சில காலிப் பையன் களுக்கு நீ காவிதியிடம் நட்பாயிருக்கிறது பிடிக்கவில்லைபோலிருக் கிறது. நீ யதிகாரிகளிடமொழுங்காய் நடந்துகொள்வது அவர்களுக் குப் பிடிக்கவில்லை. நீயுமவர்களைப்போல மேலதிகாரிகளை வாயில் வந்த படி திட்டவேண்டுமென நினைக்கிருர்கள். அவர்கள் காவிதியிடம், அந் தப் பயல் எட்டியோடு எதற்காகச் சிநேகம் வைத்துக்கொண்டிருக் கிருய் என்று கேட்கிருர்கள். என்னெதிரிலேயே பலர் கேட்டிருக் கிருர்கள். இப்போது அவனும் உன்னிடம் நட்பு வைத்துக்கொண்டதற் குக்கூட வெட்கப்படுகிருன். நீயும் அவன் நன்மையைக் கருதும் உண்மை நண்பனுனல் முன்போலவனிடம் நெருங்கிப் பழகாதே. சரி. எனக்குத் தெரிந்ததைக் கூறினேன். உன்னிடம். போய்வருகிறேன்.

[அன்றையதினம் மாலை எட்டி, காவிதியைச் சந்தித்து]

எட்டி :—என்ன காவிதி! வரவர என்னிடமொரு விதமாய் நடந்து கொள்கிருய். ஆம். நான் தங்களறைக்கு வந்தால் வெட்கப்படுகிறீர் கள். தங்கள் மதிப்புக் குறைந்துவிடும்போலிருக்கிறது. தயவுசெய்து மன்னியுங்கள். இனி, தங்களறைக்கு வாராதிருந்தால் என் குற்ற மன்று என்றுமாத்திரம் கூறிக்கொள்கிறேன்.

காவிதி :—நான் ஒரு விதமாயும் நடந்துகொள்ளவில்லை. தாங்கள் தான் ஏதோ? புதுவிதமாய் விளுவுகிறீர்கள். நானறையில் அறட்டை யடிக்கவேண்டாமென்று கூறினேனே யொழியத் தங்களை வரவேண்டா மென்று கூறவில்லை.

எட்டி :—ஏது? "தாங்கள்" பட்டம் இச்சிறுவனுக்குத் தகாது.

காவிதி :—அதுபோல் மற்றவருக்குந் தகாது என்பதை நினைக்க வேண்டும்.

எட்டி :—அஃதிருக்கட்டும். தாங்கள் முன்பு என்னிடம் நட்பு வைத்துக்கொண்டதற்காக வெட்கப்படுகிறீர்கள். உண்மைதானே? உள்ளதைக் கூறுங்கள். தங்களிடமெத்தனையோ பெரியோர்கள் எட்டி யிடஞ் சிநேகம் வைத்துக்கொள்ளாதே யென்று கூறியிருக்கிருர்களல் லவா?

காவிதி :—ஆம். அதற்கென்ன?

எட்டி :—ஒன்றுமில்லை அப்பெரியார்கள் யாரென்று கூறமுடி யுமா?

காவிதி :—முடியாது. எதற்காகக் கூறவேண்டும்?

எட்டி :—ஆம். உண்மை நண்பனுகக் கருதினுல் பிறர் வந்து குறை கூறினுல், அவர்களையுங் கண்டித்து, நண்பனிடம் நடந்ததைக் கூறி யிருக்கலாம். அதற்கு நானென்ன செய்வது? மற்றவர்களைப்போன்று ஒத்தூத என் மனமிடங்கொடுக்கவில்லை. வருந்துகிறேன்.

காவிதி :—ஷட்டப். (Shut up) என்ன, நட்பைப்பற்றிப் பெரிய பிரசங்கம்பண்ணி விடுவாய்போலிருக்கிறதே. எனக்கு அதிகங் கூற முடியாது. என்னை யவமானப்படுத்த நினைத்தால் என் அறைக்கு வராம லிருக்கலாம். சரி. எனக்கு வேலையிருக்கிறது. போய்வருகிறேன்.

எட்டி :—அவசரவேலையில் குறுக்கிட்டுக் காலத்தை வீணுக்கியமை குறித்து வருந்துகிறேன். வணக்கம். போய்வாருங்கள்.

[முன்புபோல் காவிதி எட்டியிடம் அன்புகாட்டுவதில்லை. பன்னுட் கள் கழித்து ஏனுதி, எட்டியைச் சந்தித்து]

ஏனுதி :—என்ன எட்டி! இப்பொழுது நமது காவிதி முழுக்காதல் பைத்தியமாகிவிட்டான். நானிப்பொழுது பலநாட்களாக அவனறையில்

தங்கிவருகிறேன். ஆதலால்தான் அவனைப்பற்றிப் பல விடயங்களறிய முடிந்தது. கனவில்கூட ‘என் காதலி! அமிர்தம்! என்னை மறவாதே. கைவிடேன். அன்று கூறியது இன்று கூறியதுபோல் தோன்றுகிறது. உன் முல்லை முகிழ்த்த முறுவலை மறக்க முடியவில்லையே' என்று புலம்புகிறான். அப்படியே யிவன் காதலித்தாலும் அவள் காதலிக்கிறாள் என்பது என்ன நிச்சயம்? என்ன இந்தச் சிறுபயலுக்குக் காதல். பைத்தியம் பிடித்தவன்போலிருக்கிறான். தற்கொலை செய்துகொள்வானோ என்றுகூடப் பயமாகவிருக்கிறது. (பிரிகிறார்கள்)

[பட்டி, அதிகாரியிடம் காவிதியைப்பற்றி யில்லாதவைகளை யெடுத்துக் கூற அவர் அதனைத் தடுத்து மொழியாமல் அதற்கு வர்ணங் கொடுத்து மேலதிகாரிகளிடங் கூற, காவிதியைச் சிறையிலடைக்கிறார்கள். பின்பு பன்னாட்களுக்குப் பிறகு எட்டி, ஏனாதியைச் சந்தித்து]

எட்டி :—என்னடா ஏனாதி! நம் நண்பன் காவிதி நம்மைவிட்டுப் பிரிந்துவிட்டான். அவனை அநியாயமாய் அடைத்துவிட்டார்கள். இவ் ஆராராகிய நாமதற்காவன செய்யவேண்டாமா? வருத்தந் தெரிவிப்பதற்குக்கூட ஒரு கூட்டம் கூடவேண்டாமா?

ஏனாதி :—என்ன செய்யச் சொல்லுகிறாய்? அப்படிச் செய்தால் நாமும் அவனுடன் போகவேண்டியதுதான். எத்தனைபேர் துணிகிறார்கள்? தாய் தந்தையர்களை எத்தனை பேர் மறக்கத் தயாராயிருக்கிறார்கள்? உயிரைவிட எத்தனை பேர் முன்வருகிறார்கள்? ஒற்றுமையில்லை. ஒன்றுந் துணிந்து செய்வதற்கில்லை. மாடிவீட்டு மாரன் கொஞ்சந் துணிச்சலுள்ளவன். அவனை மேலதிகாரி கூப்பிட்டு, காவிதியை அடைத்ததற்கு ஏதேனுங் கிளர்ச்சி செய்தால் கடுமையான தண்டனைக்குள்ளாக வேண்டிவரும். நானிப்பொழுதுனக்கு ஐம்பது ரூபாயில் ஒரு உத்தியோகந்தர உத்தேசித்துள்ளேன். நீ ஒன்றிலுங் கலந்துகொள்ளாதேயென்று கூறினாராம். அவனிப்போதொற்றுமைக்கு முட்டுக்கட்டையாகவிருக்கிறான். அவனா இருக்கிறான்? உத்தியோகமல்லவாப்பா இருக்கிறது. அதல்லவா ஒற்றுமையைத் தொலைத்துவிடுகிறது. என்செய்யலாம். வருந்துகிறேன். இருந்தாலும் அதிகாரவர்க்கத்தை அவ்வளவு இலேசாய் எதிர்க்கமுடியாது என்பது இப்பொழுது விளங்குகிறது. அவன் தலைவிதி. தண்டனை முடிந்து வரட்டும் நாம் கண்டு உறவாட

லாம். அதற்குமுன்னுல் ஒன்றும் செய்வதற்கில்லை. போய்வா. (இருவரும் பிரிகிருர்கள்).

[காவிதியைச் சிறையிலடைத்துப் பன்னுட்களுக்குப் பிறகு "பட்டியின் நட்பு" என்ற தலைப்பின்கீழ் எட்டியால் காவிதிக்கொரு கடிதம் எழுதப்பட்டது. கடிதம் வரப்பெற்று காவிதி சிறையில் படிக்கிருர்]

மூவாச் சிறப்புடைய நண்ப! ஏவாது செய்யுங் காவிதி! இணக்கமுடன் பல வணக்கம்.

நலம். நலமறிய நனியவா

நின் பிரிவு என்னைப் பரிவெய்தச்செய்தது. நான் முன்பு கூறியதைக் கேட்டின்புற வேண்டியிருக்கத் துன்புற்றனை. நின்னை நல்லவனென்று கருதிச் சொல்லியதெல்லாம் விழலுக்கிறைத்த நீராகியது. இனியேனுந் தனியனுய் நின்று "வெளுத்ததை யெல்லாம் பாலல்ல" என்ற வுண்மையை நன்குணர்குறி. எனக்கும், பட்டிக்கும், ஏனுதிக்கும், மற்ற நண்பர்களுக்கும் எவ்வகையில் வருத்தம்? அவர்களுடன் எனக்குத் தனிப்பட்ட வருத்தங்கிடையாது. உன்நன்மை கருதியே நின்னன்பர்களை வெறுத்தேன், வெறுக்கிறேன். அண்மையிலறிந்த வுண்மையைக் கூறுமிடத்து, ஏனுதி, சிறு குற்றங்கள் செய்திருப்பினும் மற்றவை மிக்குச்செய்துள்ளான். ஆனுல் பட்டியினட்பினுலுமக்கு எட்டியதென்ன? சிறைவாசம் நமக்கு மறைவாசமாயிற்று. உனக்குத் தோன்றுவதை யூன்றிப்பார். கவலை யென்பதைத் திவலைகூட வைத்துக்கொள்ளாதே. ஆபத்துக்குதவாது பாபத்துக்கஞ்சாத பட்டியைப் பலபடியாகத் திட்டிவிட்டேன். அதோடல்லாமல் சதை நசுங்க உதைத்தும்விட்டேன். ஆதலால் நானும் உன் தண்டனையடைந்துள்ளேன். இருவருக்கும் தண்டனை முடிந்ததும் பண்டுபோல் பழகலாம். நின் காதலைக் குறித்து கழறியமைக்கு வருந்துகிறேன். மன்னிக்கவும்.

இங்ஙனம்,
வாழ்விலுந் தாழ்விலும் நினைப்பிரியா நண்பன்,
எட்டி.

M. துரைசாமி.
IV Vidwan, அ. நகர்.

இயற்கையன்னையினெழில்

எல்லா அண்டங்களையு முண்டாக்கியவ னுண்டவன். அவனே யவைகளை நிலைகுலையாது நிற்கப்பணித்தவன். அவனன்றி யணுவு மசையா. அவனிலக்கணமெடுப்பு மிணையுமற்றது. அவ னுண்மைக் குறைவிடம்; அறத்திற்குமழகிற்குமாதி. பொறிய வித்தார் போற்றும் புனிதன்; வீட்ளிக்கும் விமலன். அவன் தன்னெழிலைத் தானியற்றிய இயற்கையிற் றேற்றுவிக்கிறான். அவற்றை யுற்றுணர்ந் ததனோடொன்றியவரே; யுய்ந்தவர் மற் றையவர் மாய்ந்தவர்.

இறையியலை யவன்படைப்பிற் கண்டு களிப்பான் வேண் டியே மூவாசையு மறந்து தவத்துறையிற்படிந்து பேரின்பக்கட லில் மூழ்கியவர்களாகிய நம்முன்னோர் வண்டமிழ் நாட்டியியற்கை யன்னையி னில்லாயமைந்த பொதியச்சிலம்பையுந் தென்கை யிலை யென்னுந் திரிகூடத்தையும் நாடிச்சென்றனர். இல்லறவிடுக் கினின்று விடுக்கப்பட்டவவ் விழுமியோர் நல்லறம்புரிய நல்லிட மாய்க் கொண்டவற்றுள் குற்றாலமென்னுந் திரிகூடமே சிறந்த தாம். ஈண்டுக் கோயில்கொண்ட இறை குற்றாலநாதன். அவ னிடங்கொண்ட அம்மை குழல்வாய்மொழியாள். இவண் சித் தருமுத்தரும் போற்றுஞ் சித்திரமன்றஞ் சிறப்புற்றிலங்குகின் றது. தலைநின்ற சிவதலங்களிலிதுவுமொன்றாகும். ஆண் டமைந்த வியற்கையம்மையினெழிலே, ஞானியரையு மோனியரை யுந் தன்பாலீழுத்துத் தனிமுதற்பால் தவங்கிடக்கச் செய்தது. யோகிகளுக்கேயன்றிப் போகிகளுக்கு மிங்கின்ப மிருக்கின்றது. வழங்கு கொடைவள்ளலரன் வதியுமித்தலம் தன்னியற்கை நலத் தாலெங்ஙனம் நந்தமிழகத்தாரகத்தைக் கவர்ந்ததென்று கவனிப் போம்.

குற்றாலம் குறிஞ்சிநிலத்தைச் சார்ந்தது ; இது மேற்கெல்லை மலைத்தொடரில் பலவகை வளனுமொருங்கே வாய்ந்த வோரிடமாகும். நீர்மகளும் நிலமகளுங்கொண்ட நட்பையுறுதிப்படுத்தி வளர்த்துவருவது சித்திரநதியெனுஞ் செவிலி. இந்நதி பொன்னுடுதட்டும் மலைக்குடுமியினின்றும் பலவருவிகளாய் விழுந்து, பொருநையைக் கூடிக் குணக்கடல் கலக்கின்றது. இதன் மூலத்தை முனிவரும் முடிவுகட்டினாரிலர். இவ்வுண்மையைத் திரிகூட ராசப்பப்பாவலரும் தன் குறவஞ்சியில், "ஞானியருமறியார்கள் சித்திராநதிமூலம்" என்றறைகின்றனர். மலைமுகட்டில் மால்கொண்ட மனம்போல் மங்குல் மருண்டுதிரியும். தேன் பொதி தென்றல் நாயகனுடியதும் சூல்கொண்டு சோவென மழையாங்குழவியைப்பெற்று மாநதிச்சித்திராச் செவிலியிடமீயும். இம்மழை மதலை திரண்டு வளர்ந்து பெருவெள்ளமாய் வந்து பயிர்களின் பசிப்பிணியை வென்று வாகை சூடுங்காலை, பண்ணை வாய்த்தவழ் தவளைகள் முழவுகொட்டத் தாரைகள்முழங்கும் தண்டமிழ்ப்பண்களை மள்ளர் வாய்விள்ளும் பெற்றி யெத்துணை யின்பந்தருவதென்று பகர்வது? பொருப்புத்தலையினின்று மிந்நதி யிழிந்தியங்குவதால் கங்கையே பொன்னாட்டினின்று புறப்படுவதுபோற்றோன்றும். விண்ணையிடிக்குந் தருக்களாற்றங்கரைகளை யலங்கரிக்கும். நிரைநிரையாயமைந்த நீடுயர் தேக்குந் தெங்குங் கமுகோடிணைக்கப்பட்ட பந்தற்கால்களைக்கடுக்கும், அவற்றின் மிசைப்படர்ந்துபின்னிய பசுந்தளிர் செடிகொடிகள் செங்கதிரவனை மறைத்து நிற்கும் மாண்பு தழைவேய் தடம்பெறு பந்தரையொக்கும். மடல்விரிகமுகின் மணத்தொடு மன்றல் மலிந்த சந்தன நாற்றமுங் கலந்து மானிடருளத்தை மகிழ்விக்கும். தாழையும் வாழையுந் தழைத்து நிற்பது கிழவியுந்தோழியுங் கிளர்ந்து நிற்பதுபோற்றோன்றும். கடுவனு மந்தியுந்தங் காதலங் குழவியோடிளமரக்காக்களிலும், மாமரச் சோலைகளிலுங் களித்தாடுந்தன்மை திருக்கூத்தாடியை நங்கருத்திற்காட்டும். பறவைகள் பயிலிசை பலாத்தோப்பை நிரப்பும். இத்திறத்த

பல்வளமல்கிய சித்திரா நதி யேறத்தாழவொரு நூற்றிருபத்தா றடிகளுக்கு மேலிருந்து அருவியாய்ப் பூமியில் வீழ்கின்றது. இத னருகிலேயே குறும்பலா மரத்தடியிற் குற்றால நாதன் குடி கொண்டுளான். ஆலயமெங்கு மருவிநீர்த்துகளாலாய தூய மேகத் திரையான் மறைக்கப்பட்டிருக்கும். அம்மஞ்சுப்படைமிசை ஆதி யோன்றன் எழுதிறவண்ணத்தால் வகுத்த வானச்சிலையைக் குனிப்பான். இவ்வரிய காட்சி காண்பார்கருத்தைக் களிப்பாற் கரையறச் செய்யுந் தன்மைத்தேயாம். அழகுக்கழகு செய்வது போன்று மறமன்னர் மாளிகையுங் குறுநில மன்னர் கூடங்களும் பெருந்திருவாளர்தந் திருவுறை மனைகளுங் குறும் பலாவீசன் கோயில் மருங்கமைந்திருக்குஞ் செவ்வி யாரைத்தா னுருக்காது?

இந்நதி, கார்நிறை ககனத்தையளாவிய சீருடைச்சிலம்பின் சிகரத்தினின்றிறங்கும்போழ்து தேனருவியென்றழைக்கப்படும், இவ்வருவியைச் சுற்றித்தேன்சிலம்பிகள் தொங்கும். மாரிக் காலங்களிற்றேறலும் நீரொடு சேர்ந்தேவிழும். மாலைப்போழ்தில் காலநாழியாமோ ராழியந்தேரவன் மறையும் பான்மையை, மலை யடியினின்று நோக்கின், அவன்றன்றேரோடு தேனருவித் துறையி லிருந்து வழுக்கித் திரைகெழு குடகடலில் வீழ்ந்து மூழ்கிப் போனானென்றே யெண்ணவேண்டும். இந்நீர்வீழ்ச்சிக்கருகிற் கருத்தையுருக்குங் காகைக் கானமும், பறவைகளின் பண்மிகு பாடலும், கல்வீழருவியின் வல்லொலியும், பள்ளத்திரங்கும் வெள்ளத்திசையும், கிண்ணென வொலித்துக் கண்ணெனக் கலு ழுங் கிளையருவியோதையுங் கலந்தெழுமோசை மானிடவுள்ளத் தூடுருவி, இயற்கையன்னையின் அஞ்சல்மொழியென ஆன்மாவிற் கலந்துபயிலும். அவ்வமயம் ஆக்கையினோக்காடாம் ஆணவம், மாயை கன்மமாய மலங்கள் மாயும். இவ்வினிய விசைக்கேற்ப, மரமிசைமந்திகள் மணவாளர்பாலூடல் நிமித்தம் வைத்த சினத் தைத்தணிப்பனபோல நறவுபொங்கும் நற்கனிகளைப் பறித்துக் காதலர்மேற்கடுத்தெறியும். அதைப்பொருட்படுத்தாது வான ரம் புலவிக்குப்பின் அன்புமிகுந்தணையும். காளையன்ன மானிட

னும் கன்னல்மொழிதவழ் காரிகையுங் காதலெனும் நாணற்றளை யப்பட்டால் ஒருவருக்கொருவ ரெத்துணையின்பத்தை மரபுக்கட்டுப்பாடெனுங் காளிக்குப் பலியிடுகின்றனர்? தங்களின்பத்திற்குத் தடங்கலாய் நிற்குமெதையுமகியாரன்றே? அறிவுடை மனிதர் நாட்டகத்தே வாழ்ந்து இயற்கையன்னையினிங்கித நடனங்காணுத நாட்டத்தையுடையாற் கித்துணைக்காதல் பொங்குமாயின், இயற்கையன்னையினிருப்பிடமாய குற்றாலக் குரங்குகளா காதலுக் கிளைப்பன! இவ்வருவிக்காட்சியை இராசப்பக்கவிகளுந்தன் குறவஞ்சியில்,

"வானரங்கள் கனிகொடுத்து மந்தியோடு கொஞ்சும்
மந்திசிந்து கனிகளுக்கு வான்கவிகள் கெஞ்சுந்
தேனருவி திரையெழும்பி வானின்வழி யொழுகுஞ்
செங்கதிரோன் பரிக்காலுந் தேர்க்காலும் வழுகுங்
கானவர்கள் விழியெறிந்து வானவரை யழைப்பார்
கவனசிலர் வந்துசிந்து காயத்தி விளைப்பார்
கூனலிளம் பிறைமுடித்த வேணி யலங்காரர்
குற்றாலத் திரிகூட மலையெங்கள் மலையே"

என்று குறத்தி மலைவளங் கூறுமாற்றான் மொழிகின்றார். இவ்வாறு பொலிந்து மிளிர்கின்ற தேனருவித்துறையில் மரைநிரைகள் வந்து நீர்பருகிச் செல்லும் நிகழ்ச்சி நிகரற்றது. இத்தகைய கணக்கில்லாவெழிலை யெடுத்துரைக்க நாவாயிரங்கொண்ட சேடனுமாற்றல் பெற்றிலானென்றே சாற்றுவர் சான்றோர்.

தேறல்கலந்த தெள்ளிய தண்ணீரில் விரையும் வீசினுற்றுனே விழுமியதாகுமென்று மக்கள் நினைப்பரென்றுணர்ந்த வியற்கையன்னை செண்பகாதேவியென்னுமோரருவியைத் தந்திருக்கிறாள். இது அண்டங்களெல்லாமதிரும்படியான தென்றுள்ளும் படிக்குத் துள்ளுந்தன்மையது. இதைச் சுற்றித் தூயசெண்பக மலர் மணமும், பன்னீர்ப்பூவின் நறுநாற்றமும் மருவிக்கமழும். அருவிநீர் செண்பகமலர்கள் மல்கப்பெற்றேவிழும். இதனைற்றான்

குறவஞ்சியாரும், " தேனலர் செண்பகவாசம் வானுலகில் வெடிக்கும்," என்று வரையாதறைந்தார். இதனையடுத்தாற்போல் பல சிறு குகைகளுண்டு. ஆண்டுதான் பண்டை முனிபுங்கவர்கள் தங்கித் தவமியற்றினராம். இக்காலத்து மடியார்களாங்கு யோகப்பயிற்சி நிகழ்த்துவதைக் காணலாம். இந்த வீழ்ச்சிக்குச் சிறிது சேய்மையில் சாதிக்காய் மரங்களும், கருங்காலி மரங்களுஞ் செழிப்புற்று வளர்ந்திருக்கின்றன. தளையவிழ்தாழம்பூவின் நறுமணந்தாங்க நான்முகன் தந்த நுகர்ச்சிக்கருவிகள் போதாவெனத்தோன்றும். மலர்களிலிருந்திழியுந் தெள்ளியதேறலிற் கைத்தாயினருட் கண்ணீரைக் கடுக்கும் கயவரின் கன்மனனும் மூர்க்கரின்வன்மனனு மித்துறையிற் குளிப்பின் நெக்குவிட்டு மணற்கேணி நீரென நிமலன்பாலன்புபெருகுமெனின் மேலோர் செயலைச் சொல்வது மிகையாமன்றோ?

செண்பகதேவியைக் கடந்தால், சேர்ந்தார் பற்றையறுத்துப் பரவுணர்வளிக்கும் பண்புபடைத்த சிற்றருவி பாய்கிறது. இதன் நீர் புனிதமென்றேத்தும் தூய்மையும் பொலிவும் பெற்றது; கூனிளம் பிறையணிந்தாற்குக் குளிநீராயமைவது. குவலயமாள்வாற்குங் குடிநீராய்த்திகழ்வது. கானகத்திடை வளர் மூலிகைகளைத் தன்னோடடித்துக்கொண்டுவருவதாலிதன் புனலைப் பருகியவர்கட்கு ஆன்மநோயழிவதோடு யாக்கைப்பிணியுமகலும், மாந்தற்குப் புத்துயிர் கொடுக்குமாண்புவாய்ந்தது.

இறுதியாகவமையப்பெற்ற அருவியே சித்திராவருவியாகும். இந்த நீர்வீழ்ச்சியேனையவைகளைவிட மிகப் பெரியது. இதில் மலையினின்று சரியுங் கனைபுனல், மேகநிரைகளாயாகாயத்திலிருந்திறங்குவது போற்றோன்றுங் காட்சி கண்களைக் கவருந் தன்மைத்து. இதனடுவிற் பொங்குமாங்கடலெனப்படுமொரு சுனையுளது. அம்மடுவிலிருந்து அமுதமன்ன அம்புனல் பொங்குவது கறை மிடற்றண்ணலின் கனகவேணியினின்று கங்கை பொங்கிக் கவிழ்வது போன்றிருக்கும். இதைக் கண்ணுறுவார் கருத்துங்

கரையிலாவருட்கடலாங் கடவுள்பாலுறும் அன்பால் நிறைந்து ததும்பும். அருவிக்கரைகளிலுள்ள பருக்கைக் கற்கள் பொருவிற் குருமணிகளென்ன மின்னொளியுமிழும். மணற்பொடிகளோவெனின், வேனிலான்விடுத்த அடுகணை பாய்ந்த பாவையர் மேனியிற்பரவிய பொறிசுணங்கென மிளிரும். அருவித்துறையிலுள்ள அடுக்குப்பாறைகள் இடையறு நீரோட்டத்தால் நீர்ப்பாசிபடியப் பட்டு மாமணி மரகதக்குன்றெனக் குவிந்து நிற்கும். இப்பச்சை மணிமலைக்குழவிகளிடையே கழங்கென முழங்கியோடுந் தண்ணீர் வெள்ளியையுருக்கி வார்த்தாற்போலும், பகலவற்படிவம் போலும் வெள்ளொளி வீசியிரைந்து செல்லும். அங்ஙனங் குடைந்தாடுங் கொம்பன்னாரெழிலைக் காணின் கருப்புவில்லியுங் காதலுற்றுக்கரைவான். இம்மைச் செல்வ மூன்றுந் திரண்டுருண்ட பெண்மையியற்கையன்னை யோடமைந்து நின்றால் ஐம்பொறிகளுக்குமாரமுதமாய அப்பெண்மையைக்கொண்ட பிடியன்னாரிடத்தெப்படி மனனுமுயிரு மிழுக்கப்படாதுய்யும்? பெண்ணிடங்கொண்ட பெருமானும், திருவகங்கொண்ட திகிரியானும், நங்கையை நாவிலமர்த்திய நான்முகனுமே இதற்கேற்ற சான்றாகாரோ?

சித்திராவீழ்ச்சியிற் சிரங்கொடுத்துக் குளிப்பின் முக்கால அழுக்குமழிந்து புறந்தூய்மைபெறும். ஆண்டிருந்தலகிலா விளையாடல் புரியும் ஆண்டவன் தாடொழின் மும்மலங்களின் மூலமுஞ் சிதைந்தகத்தூய்மை பெற்றுய்யலாம். இதற்காகவே இல்லறம் புரியுமின்ப மாந்தரும் பேரறம் புகுந்த பெருந்தெருள் புனிதரும் இத்துகடீர் துறையிலாடுஞ் செவ்வி செப்புவதெளிதோ? அவர்கள் இன்றமிழ்ப் பண்ணொடு பரமனைப் பரவிப் பானிறநீரைக் கோதித் தலையில் வைக்குங் காட்சி கண்டாருளத்தை யுருக்காதிருக்குமோ? அவர்களுள்ளத்தெழுந்த விள்ளவியலாப் பேரின்ப வெள்ளத்திற் றோன்றிய களிப்பலைகளாகிய தேவாரப்பாசுரங்கள் தேவர் மூவரையு முருக்கி வரங்கொண்ட இராவணனின்னிசையொத்திருக்கும். அருவிக்கருகமை கூடங்களிலன்னைய ரன்ன

மட்டுக் கொண்டிருப்பர். அங்ஙன் அழகிய மடவார் சிறுமனை கோலி விளையாடுவர். அருவியில் நீர் ஒரேநிலையாக வராது, மிகுந்துங் குறைந்தும் வருமாகையால், மிகுங்காலை யவர்கள் சிற்றிலைச் சிதைத்தோடும். அருவிநீர் செய்த தழுக்காற்றாலென்றெண்ணிய அருமை மடவார்கள் முழுநீலக் கண்களில் முத்தந் தவழக் குழலிசையென்னக் குரலிட்டழுது தமதன்னையர்களிட மருவியின் பொறுப்பில் செயலைப்புகல்வதைப் பார்த்து மகிழ்வதே மண்மிசைப்பண்ணிய புண்ணியப் பயன்களைப்பருகியதாகும். அருவியின் வடபாலமைந்த பொருவிற் பொங்கரில் குயில்கள் கூவுவதும், மோனத்துறவியின் முத்தி விடுதியில் மயில் களகவுதலும், சித்திரகூடத்திற் சிட்டுக்கள் வீச்சிடுதலுங் கேளாக்காதுங் காணக்கண்ணும் பொறிகளோ? அன்றிப் புழைகளோ? கொம்பன்ன குழல்வாய்மொழியாளுங் குதலைவாய்க் குமரனும் நாடியுறைவதால் ஈண்டமைந்த வியற்கையாளின்பப் பண்பையாதென விசைப்பது? இத்தகைய வனப்பில் மயங்கா மானிடரிருப்பாரோ? கானக் குறத்தியொருபாலும், வானப் புரவலன் புதல்வியொருபாலும் மருவப்பெற்ற முருகன் முழுவுருவந் திகழ்வது திருக்குற்றாலத்திலேயேயாம். குற்றால நாதன் கோயிலுக்குக் குடக்கே செல்லின், ஆண்டுச் செழித்துக் கமழுஞ் செண்பகக்காடும், கண்ணைக்கவரும் கோங்கினீட்டமும், உளத்தை விழுங்கும் விளாமரச் சோலையும் மானிட ஆவியை யுணர்த்தி, ஐயன் படைப்பிற் றிகழ்வதை ஐயமறவெடுத்துக் காட்டும். இயற்கையுள் ஈசன் புரியுமற்புத நடனம் பொற்புறவிளங்கும். முப்பொருள் களைந்த மெய்த்திருவாளர் முதல்வனையங்ஙனங் கண்டு களிப்பெய்துவர். விழுப்பொருளளிக்கு முழுமுதற் கடவுளுமவர்களைக் கழுவிக் கரைசேர்ப்பான்.

செங்கதிர் ஞாயிறு செறியிருளகற்றுவதென்பது குற்றாலத்திற் கூடாதசெயல். ஆயினுமவன்றன் கதிர்களை மாத்தழைகளிடை வழிச் செலுத்துகின்றான். பசிய இலைகளூடு கதிர்களடவிக்குள் புகுவது மரகதப் பந்தரில் மின்சாரவிளக்கங்கள் நாலவிட்டது

போல் பொலிவுற்றுத் திகழும். இவண் மருண்ட பார்வையும், இருண்ட கண்ணுங்கொண்ட மானினம் கடுங்கட்கடுவாய்கட்கு வெருவி விரைந்தோடுங்காட்சி எத்தகைத்தென்றெவர் தானெடுத் துரைக்கு மாற்றலுடையார்? சிதற்கும்பரில் நற்பாம்பாடுவதும் வரைகளிலாடுகள் தாவுவதும், உடும்புகளுசாவுதலும், கூவைகள் கூக்குரலிடுவதும் பார்த்து மகிழத்தக்கன. மலைவாழ்நர் மலைபடு திரவியங்களைக் குவிப்பதும், வேடர் தினை விதைப்பதும், களிறுகள் பிளிறுவதும் அளவிலா வின்பந்தருவன. அவர்கள் தம்மை யடைந்தார்க்கு ஐவன அவலிற்றினைமாவைக் கலந்துகொழும் பலாக்கனியைக் கொத்திச் சேர்த்து நறவில் நனைத்துட்டுவதை யுள்ளுந்தோறு முள்ளுந்தோறும் வாயள்ளூறுமன்றே? நவநாக ரிகம் படைத்தோமென்று தலையெடுத்தாடும் நம்மிடமித் தாராள குண மெட்டுணையேனுமுண்டா? உண்மைத்தமிழர் வண்மை வரையாரிடமே தோன்றுகின்றது. குடத்தேனையும் முழுத்துண் டுக்குக் கொடுப்பாரெனின் ஆண்டு தேறலெத்துணையமையவேண் டும்.

பசுமையான ஏலக்காயு மிளங்கிராம்புங்கலந்தயிலை பிளவு மென்ற பவளவாய் முறுவல்பூத்து முன்றில்நிற்குங் குறிஞ்சிமட வார் முகத்தைக்கண்ட முனிவருங் களைவர் துறவு. இவர்கள் கங் கைச்சடையன் சங்கணிவீதியில் தேறல்விலை கழறி மெல்லடி பெயர்ப்பதைப் பேடையன்னமுங் காமுறும். இத்துணை வனப்பு இவ்வல்லியர்கள் இயற்கைத் தாயிடமிரந்தடைந்ததே!

தெப்பமுந்தேருமமைந்திருக்கும் பெற்றி போற்றத்தக்கது. இதனருகிற்றுன் ஐந்தருவிக்குப் போகும் வழியிருக்கிறது. மாலைக்குளிப்புக்கேயிவ்வருவி சிறந்தது. ஆதியோன் குடவாழி குளிக்கப்போகுங்காலையீண்டு நின்றால், நீண்டுகருண்ட கொண்டற் கொண்டையும், குழைமேவிய குனிவிற்புருவத்தோடமைந்த காமர்கருநாட்டமும், அறைகடலெழுந்தவமுத ஆக்கையோடுங் கூடிய அரம்பையர்போலிள மங்கையர், நீராடிநித்தில நகையாடி, ஆடையுலர்த்திநிற்பர். இயற்கையன்னையினெழிலும், இந்நங்கையர்

நலனு மொன்றித்திகழ்வதைக்காணின் உள்ளம் தெள்ளமுதுண்ட தேற்றம்பெறும். இவ்வருங்காட்சியையுங் கண்ணுறுது, காளை யொத்து வேளைவென்ற இளைஞர் யார்க்குமுன்போய் நீராட வேண்டுமென்று நெடுநடைபிடிப்பாராயின் ஐயருவியின் அழ கெவ்வளவு மாண்புடைத்து? ஆகவே மக்கள் எல்லா இன்பங் களிலும் குற்றலக்குளிப்பையே மேன்மையாய்க்கொண்டுளா ரென்பது வெள்ளிடைவிலங்கலாம். இங்ஙனம் திரிகூடக்கவி களும்,

1. முழங்கு திரைப்புன லருவி கழங்கென முத்தாடும்
முற்றமெங்கும் பரந்துபெண்கள் சிற்றிலைக்கோண்டோ
கிழங்குகில்லித் தேனெடுத்து வளம்பாடி நடிப்போம் [டும்
கிம்புரியின் கோம்பொடித்துக் கெம்புதினை யிடிப்போம்
செழுங்குரங்கு தேமாவின் பழங்களைப் பந்தடிக்கும்
தேனலர் சேண்பக வாசம் வானு லகில்வேடிக்கும்
வழங்கு கோடை மகராசர் குறும்பலவ னீசர்
வளம் பெருகுந் திரிகூட மலை யெங்கள் மலையே.

2. ஆடுமர வீனுமணி கோடிவெயி லெறிக்கு
மம்புலியைக் கவளமேன்று தும்பிவழி மறிக்கும்
வேடுவர்கள் தினைவிதைக்கச் சாடுபுனந்தோறும்
விந்தையகிற் குங்குமமுஞ் சந்தனமு நாறுங்
காடுதோறு மோடிவரை யாடுகுதி பாயுங்
காகமணுகா மலையில் மேகநிரை சாயும்
நீடுபுக ழீசர்கயி லாசகிரி வாசர்
நிலைதங்கு திரிகூட மலையேங்கள் மலையே.

எனச் சிறப்பித்தெடுத்துக் காட்டியிருக்கின்றனர்.

நறுநாற்ற நந்தவனங்களில் முல்லையும் பிச்சியும் பூத்துப் பொலிவுறுவதும் உம்பரும் விரும்பும் அம்பொற்சிலையுடைய சோன்மாடத்திற் செழித்துத்தழைத்திருக்கும் பூஞ்சோலை களும் காணக்கிடைத்த கண்களே கண்களாம். இற்புறச்செறிந்த

இருள்வாச்சியுங் கொடிரோஜாவும், குரோட்டன்ஸ் குளகுகளும் மிகவும் அழகான காட்சியளிக்கத்தக்கவை. மிளகுக்கொடியை வேலியாய்க்கொண்ட ஏலத்தோட்டங்களும், கிராம்புப்பழனங் களும் மனதிற்குவப்பளிக்கும். மலைச்சரிவிற் கனிப்பொறை தாங் காது கவிந்து குனிந்த மாமரங்களும் பலாமரங்களும், வேர்ப் பலாப்பழம் வெடித்து வீசுமின்மணமும் உளத்தைக் கொள்ளை கொள்ளும். ஈண்டெழுந்தருளியிருக்குந் தெய்வம் வடக்கு வாசலியாகிய காளியாவள். இங்குமள்ளர் முழக்கும் மங்கல முரசமும், மடந்தையர் பாதச்சிலம்பின் புலம்பலுமிடையரு நின் ஞெலிக்கும். இக்காளியை வழிபடுவார் பலசிற்றூர்களில் வாழ் கின்றனர். அவ்வூர்களில் முதன்மையானது குற்றாலத் தரு வைத் தன்பெயராய்க்கொண்ட குறும்பலாப்பேரியாகும். ஆண் டுள்ளார் இவ்வம்மைக்குத் தம்மூரிலுமாலயஞ்சமைத்து வணங்கு கின்றனர்.

தற்கால அறிவுநூல்களும் குற்றாலத்தின் பெருமையைப் பாராட்டுகின்றன. இதற்குக் காரணமீண்டுள்ள வுயிர்க்கால் நிறைந்தவாவியும், மலைபடுமருந்துச்சாரஞ்சேர்ந்த நீருமேயாம். வைகாசி, ஆனி, ஆடி, மாதங்களிலிங்கு வாழ்ந்தால் உடற்பிணியக லும்; புத்துயிர் பெறலாம். ஆகையாலித்திங்கள்களில் பல திசை களிலிருந்தும் மக்கள் வந்துறைவர். இயற்கையன்னையும் தன்பா லன்புவைத்த அம்மக்கட்கு நற்பயனுதவி வழியனுப்புவாள். இங்குத் தங்குவதற்கென்றே மடங்களும் சாவடிகளும் சமைக்கப் பட்டிருக்கின்றன. செல்வர்கள் பல்வகையழகுடன் வேனில் விடுதிகளமைத்திருக்கின்றனர். பருவகாலத்திலிங்குவந்துறைந்து உளத்தூய்மையும் புறத்தூய்மையும் பெற்றேகுவர். இங்கு மக் கள் இன்பந்தரத்தக்க நற்செயல் புரிந்து செம்மை சிதையாவண் ணம் வாழ்வார்கள். இதனை மேலாகரமென்றமிழ் வல்லனுங் கீழ் வருமாறு தன்னின்னிசைக் குறவஞ்சி நாடகத்தில் நாட்டுவாரா யினன்.

ஓடக்காண்பது பூம்புனல் வெள்ளம்
    ஒடுங்கக் காண்பது யோகியருள்ளம்
போடக் காண்பது பூமியில் வித்துப்
    புலம்பக் காண்பது கிண்கிணிக்கோத்து
வாடக்காண்பது மின்னார் மருங்குல்
    வருந்தக் காண்பது சூலுழைச்சங்கு
தேடக்காண்பது நல்லறங் கீர்த்தி
    தென்னாரிய நாடெங்கள் நாடே.

இங்ஙனம் திரிகூடத்தில் வாழ்நர் அல்லவையகற்றி நல்லவை நிகழ்த்தும் நற்குணசீலர்கள். ஏனையருமங்குச் செல்வதால் தன்மை பெறுகின்றனர்.

இயற்கைத் தாயினிவ்வரியவழகே காதலர் கருத்தையும் பாவலர் பண்பையும், அன்பரகத்தையும் கவர்ந்தின்புறச்செய்கின்றது. பாவலரியற்கைத்தாயினெழிலைத் தன்னுணர்ச்சிப் பாக்களில் யாக்கின்றனர். என்றுமழியா விழுப்பயன் பெறுகின்றனர். அறிவாளிகளரன்னையிவ்வன்னையினகத்திற் கண்டு தொழுகின்றனர். அவனொடொன்றுகின்றனர். ஓவியமும் விஞ்ஞானமுமியற்கையன்னையின் வனப்பையு மியல்பையுமாராய்கின்றன. ஆகவே பல்திறனாலும் பயனுமித்தாயேயாவாள். அவளமைப் பினுண்மையைக் கண்டானுலகம் புகழவாழ்கின்றான். அவளே எல்லாம். அறிவுளார்க்கஞ்சலிடமுங் கயவர்க்குத் துஞ்சலிடமுமாயவள். அவளை வாழ்த்துக.

M. L. பாண்டியன்,
3-வது ஆனர்ஸ், தமிழ் மாணவன்.

‘விதவை யானாலென்ன ?’

சங்கு சம்பு சாஸ்திரி என்றால் எங்கள் கிராமத்தில் தெரியாதவர்களே கிடையா. ஒரு சிறு குழந்தையிடம் கேட்டால்கூட, “அவரா, அந்த வைதீகப் பைத்தியம், உச்சிக்குடுமி சம்பு சாஸ்திரியா ?” வென்று உடனே பதிலளிக்கும். நாகரீகம் என்றால் எரிந்துவிழுவார். பெண் கல்வி என்றால் காதைப் பொத்திக்கொள்வார். யார் என்ன சொன்னாலும் கேட்கமாட்டார். சாரதாச் சட்டத்தைப்பற்றிப் பேசத் தொடங்கினால், அதைத் தாங்கிப் பேசுகிறவன் கதி அதோகதிதான். ஆனால் விதவைகள் மறு விவாகம் செய்யக்கூடாதென்று அவர் சொல்வதில்மட்டும் எனக்கு நம்பிக்கையுண்டு. நம் முன்னோராகிய தாய்மார்கள் தங்களுடைய பதியே தெய்வமெனக் கருதி அவர் இறக்கவும், அவருடைய உயிருடன் தம் உயிரையும் உடன்கட்டை ஏறித் தியாகம்செய்தவர். ஆனால் அவர்களுடைய மக்களாகிய தற்கால மேல்நாட்டு நாகரீகத்தில் மூழ்கியிருக்கும் பெண்மணிகள் மறுமணம் என்று கிளர்ச்சி செய்வதைப் பார்த்தால், அவர் சொல்வதில் எவ்வளவு உண்மை இருக்கிறதென்பது மிகவும் தெளிவாய்த் தெரிகிறது. நான் வீட்டில் விதவைகள் மறுமணம் செய்யக்கூடாதென்று பேச ஆரம்பித்தால் கல்லூரியில் படித்துவிட்டுவந்த என் சகோதரிகள் சரசும், லக்ஷ்மியும் சண்டைக்கு வந்துவிடுவார்கள். “ஆண்கள் மட்டும் கல்லுப்போல் ஒரு மனைவி இருக்கையில் மற்றொரு மணம் செய்துகொள்கையில், பதியை இழந்த பெண் மட்டும் மறு மணம் செய்துகொள்ளக்கூடாதாக்கும் ?” என்றெல்லாம் வாக்குவாதம் செய்ய ஆரம்பித்துவிடுவார்கள். என் கட்சியில் சேர தாத்தாவை இழந்த பாட்டி வந்துவிடுவாள். பின்பு என் பேசுகிறார்கள்’ ஏதாவது பேசினால், “இதெல்லாம் அந்தப் பாழாப்போன படிப்பினால்தான். உங்கள் வாயும், கையும், பவுடரும், செருப்பும்......போதுமே”? என்று வாழ்த்த ஆரம்பித்துவிடுவாள். கடைசியாக, “எல்லாம் அந்தப் பாழாப்போன படிப்பினால்தான் வந்த வினை. உங்களைச் சொல்வதற்கு என்ன குற்றமிருக்கிறது ?” என்று முடிப்பாள்.

எங்கள் கலாசாலைப் பொதுப் பேரவையில் என்னை ஓர் நாள் பேசச் சொன்னூர்கள். அன்று நான் விதவைகளின் மறுமணத்தைப் பற்றி மிகவும் கண்டனம் செய்து ஆழ்ந்த உணர்ச்சியோடு பேசினேன். " சகோதரிகளே ! நீங்கள் எல்லோரும் நம் பாரதத்தாயின் புத்திரிகளல்லவா ? '' என்று கூறியபோது பேரவையில் சில நவயுவர்கள் சிரித்தனர். வைதீகக் கொள்கையில் ஆர்வங்கொண்ட மாணவர்கள் நான் சொல்வதையெல்லாம் ஆமோதித்து, என்னை மிகவும் உற்சாகப்படுத்தினர். கடைசியில் நான் பேசியபடியே 'விதவைகள் மறுமணம் கூடாது' என்ற தீர்மானம் பேரவையில் நிறைவேறிற்று. மிகவும் மகிழ்ச்சியோடு வீடு திரும்பினேன்.

என் நண்பன் காந்திக்குப் பக்கத்து ஊரில் பெண் நிச்சயம் செய்திருந்தனர். காந்தி என்னைக் கலியாணத்திற்கு வரும்படி அழைந்தான். எனக்கு வெட்கமாயிருந்ததால் முதலில் நான் செல்ல மறுத்தேன். ஆனுல் அவன் வற்புறுத்தி அழைக்கவே, இணங்கினேன்.

நானும் மாப்பிள்ளையும் ஒரு மாட்டுவண்டியில் கலியாணத்திற்கு முன் நள்ளிரவு, பெண்வீட்டிற்குச் சென்றோம். வழியில் காந்தி என்னிடம், " நீ தாண்டா என் தோழனுக இருக்கவேண்டும். என்ன சொல்லுகிறுய்'' என்றுன். நான் ஒன்றும் கூருமல் விழித்தேன். " ஏண்டா, நான்தானே மாப்பிள்ளை, நீ என் வெட்கப்பட்டுத் தோழனுயிருக்கத் தயங்குகிறுய் ? '' என்று சொல்லவே நானும் தோழனுயிருக்கச் சம்மதித்தேன்.

காரிருள் ; காட்டுப்பாதை ; வண்டிக்காரக் கோவிந்தன் இடையிடையே விடும் குறட்டையும், வண்டியின் கடக்-கடக் என்னும் சப்தத்தையும் தவிர வேறு ஒலி ஒன்றும் கேட்கவில்லை. வாடைக் காற்று விர்-ர்-ர்-ரென்று வீசிற்று. நானும், மாப்பிள்ளையும் நன்ருய்ப் போர்த்திக் கொண்டோம். நடுச்சாமம் இருக்கும். நான் என்னை அறியாமலே தூங்கி விட்டேன். தூங்காமலிருந்த காந்தி என்னைத் தட்டி எழுப்பவே நான் திடுக்கிட்டு விழித்தேன்.

" அடே : பெண்வீடு பக்கத்தில் வந்துவிட்டது. அதற்குள் என்னடா தூக்கம்?'' என்றுன்.

"நீ அசடு மாதிரிப் பேசாமல் இருந்தால், நான் என்னடா பண்ணுவது? தூங்குவதைத் தவிர வேறென்ன இருக்கிறது?" என்றேன்.

"சரி. அது கிடக்கட்டும். நீ விதவைகள் மறுமணஞ் செய்துகொள்ளக்கூடாதென்று, கண்டித்துப் பேசினாயாமே? அதை எந்த வைதீகத்தினிடமிருந்து கற்றுக்கொண்டாய்?" என்றான்.

"போடா. நீ ரொம்ப கர்நாடகத்தைக் கண்டிருக்கிறாய். உனக்கு மேல்நாட்டு நாகரீகமும், மறுமணமும் தான் தெரியும். நம் நாட்டுச் சரித்திரத்தில் எப்போதாவது விதவை மறுமணத்தைப்பற்றி எழுதப்பட்டிருக்கிறதா? நீயே சற்று யோசித்துப் பார்த்தால் உனக்கே விளங்கும். தன் உடல், பொருள், ஆவி மூன்றையும் ஒருவனுக்குத் தத்தம் செய்தபின், அவன் மாண்டதும் மற்றொருவனை மணப்பது எவ்வளவு விபரீதம்?" என்றேன்.

"நீ சொல்வது சரி. ஆனால் பால்ய விதவைகளின் கதி என்ன?" என்றான்.

"அதுதான் பால்யவிவாகம் கூடாதென்று கூறுவது. விதவை விவாகத்தைத் தடுத்தால் பால்யவிவாகம் தானாகவே குறையும் என்பது என் கருத்து" என்றேன்.

"அடே, இவ்வளவு பேசுகிறாயே, உனக்கு ஒரு பெண்ணைக் கலியாணம் செய்யவேண்டுமென்று ஆசை மனப்பூர்வமாக இருக்கிறது அப்போது அவள் விதவை என்று தெரிந்தால் என்ன செய்வாய்?" என்றான்.

"என் ஆசையை அடக்கிவிடுவேன். மணப்பதை மறந்துவிடுவேன்" என்றேன்.

"அடக்கிவிடுவாயா? மணப்பதை மறந்துவிடுவாயா? அடப்பிச்சவே, அவள் விதவை யானாலென்ன? உன் மனம் நாடிய ...." என்று என் நண்பன் முடிப்பதற்குள் நான், "அடே. பெண்வீடு வந்துவிட்டது. பேச்சை நிறுத்து" என்று முடித்தோம்.

மணம் நன்கு மேளதாளத்தோடும், சடங்குகளோடும் முடிந்தது. தோழிகளில் ஒருத்தி பெண்ணைவிட அழகாயிருந்தாள். அவள் மதி

முகத்தில் எப்பொழுதும் குறும்புச் சிரிப்புத் தவழ்வதுபோல் தோன்றிற்று. என்னை அறியாமலே அவளிடம் எனக்கு ஒரு பற்று ஏற்பட்டுவிட்டது. அவளைப்பற்றி மெதுவாய் என் நண்பனிடம் விசாரித்தேன். "அவள்தான் பெண்ணுடைய சித்தியின் ஒரே குழந்தை. அவள் பெயர் தீனதயாளு. இப்பொழுது கலாசாலையில் படிக்கிருள். சங்கீதத்தில் அவள் கலேஜில் அவள்தான் முதலாம்" என்று அடுக்க ஆரம்பித்துவிட்டான். நான் அவைகளை மிகவும் ஆர்வத்தோடு கேட்டு ஆமோதிக்கவும் செய்தேன். கலியாணவீட்டில் அவள் இல்லாத இடமில்லை. ஏதாவது விஷமம் செய்துகொண்டும் 'கல-கல' வென்று பேசிக்கொண்டும், சிரித்துக்கொண்டுமே சுற்றிக்கொண்டிருப்பாள். மாப்பிள்ளை வேஷ்டியைப் பெண்சேலையோடு கட்டிவிட்டு, "அத்தான்! உங்களை யாரோ கூப்பிடுகிருர்கள்" என்ருள். மாப்பிள்ளை எழுந்திருந்தவுடன் பெண் சேலையைப் பிடித்திழுக்கவே கொல்லென்று சிரித்தாள். சற்று நேரங்கழித்து நான் வெளியே வர எழும்பினபோது, நானும் என் நண்பனும் ஒரு வாழைநாரினல் பிணைக்கப்பட்டிருப்பதை அறிந்தேன்.

இதெல்லாம் முடிந்தவுடன் மாலையில் பாட்டுக்கச்சேரி ஆரம்பமாயிற்று. எனக்குச் சங்கீதம் என்ருல் போதும். ஆகியபடியால் யாராவது பெரிய வித்வான் வருவார். நன்ருகப் பாட்டுக்களைக் கேட்டு இன்புறவேண்டும் என்று நினைத்துக்கொண்டு முன்னிடம் தேடி உட்கார்ந்துகொண்டேன். ஆனல் என் எண்ணத்திற்கு நேர்மாருக அங்கும் சாட்சாத் தீனதயாளுதான் பாகவதர் ஆசனத்தில் காட்சியளித்தாள். நான் எப்படிப் பாடப்போகிருளோவென்று மிகவும் கவனமாகக் கவனித்துக்கொண்டிருந்தேன். அவள் சிறிதும் அச்சமின்றி ஆசனத்தில் புன்னகை ததும்ப, அமிர்தச் செவ்வாயைத் திறந்து கச்சேரி ஆரம்பித்தது பார்ப்பதற்கே ஒரு பரவசமாயிருந்தது. அவளுடைய சங்கீதந்தான் எவ்வளவு இனிமையாயிருந்தது தெரியுமா? மிகவும் அற்புதமாய்ப் பாடினுள். இனிமையான சாரீரம். பாகவதர்களெல்லாம் இவள் முன்னிலையில் ஆழுனையிற் சிறு கூழெனக் கருதப்படுவார்கள். பதினைந்து வயதுப் பாவையாயிருந்த போதிலும் சிறிதேனும் தாளம் முறியாமல் பாடினுள். கூட்டத்தில் ஒரே தலையாட்டமும், தாளமுந்தான். வாழ்த்துதல்கள் பல திசைகளிலிருந்தும் பறந்து வந்தன. கச்சேரியும் இனிது முடிந்தது. இராச் சாப்பாட்டிற்கு எல்லோரும் அமர்ந்தோம்.

கலியாண வீட்டுவிருந்தை எல்லோரும் மிகவும் ஆவலோடு சாப்பிட ஆரம்பித்துவிட்டனர். ஆனால் என் மனதோ அந்த விருந்தை நாட வில்லை. எதோ கற்பனை உலகத்தில் திரிந்துகொண்டிருந்தது. பக்கத் திலிருந்த மாப்பிள்ளை, காந்தி, என் முதுகில் தட்டிக்கொண்டு, "அடே! நீ தாண்டா பாக்கியசாலி" என்றான். "ஏண்டா?" என்றேன் நான். "எங்கள் கலியாணம் முடிந்துவிட்டது. இனி தோழனுக்கும் தோழிக் கும்........" என்று தொடங்கினான். "என்னடா பிதற்றுகிறாய்?" என்றேன். "இல்லை. கவலைப்படாதே, நானே எல்லாவித ஏற்பாடு களையும் செய்துவிடுகிறேன்" என்றான். எனக்கே ஒன்றும் புரியவில்லை. நான் திரும்பவும் என்னென்னவோ எல்லாம் நினைக்க ஆரம்பித்தேன்.

சாப்பாடெல்லாம் முடிந்தபின் இரவு தூங்குவதற்காகப் படுக்கச் சென்றோம். அன்றிரவு முழுவதும் எனக்குத் தூக்கமே வரவில்லை என் மனம் இன்பக் கனவுகளையே கண்டுகொண்டிருந்தன. என் மனம் பழையபடியே கற்பனை உலகத்தில் அலைய ஆரம்பித்தது. சிறிது நேரத் திற்கெல்லாம் "தயாளு" என்று அவள் பாட்டி அவளைக் கூப்பிடும் சப்தம் கேட்கவே, நான் எழுந்து உட்கார்ந்துகொண்டு கவனிக்கலா னேன். 'கல-கல' வென்று தீனதயாளுவின் சிரிப்பொலி பக்கத்து அறையில் கேட்டது. "ஏண்டி அசடே! மாப்பிள்ளை இறந்து இன் னும் ஆறுவருஷங்கூட ஆகவில்லையே, அதற்குள் இந்த அமளிதுமளி பண்ணிக்கொண்டு, ஏண்டீ! இப்படிக் கூத்தடிக்கிறே?" என்று பாட்டி சொன்னதைக் கேட்டவுடன் எனக்கு ஒன்றுமே புரியவில்லை. அப்படியே திகைத்துப்போனேன். அப்போதுதான் தீனா விதவை என்று எனக்குத் தெரியவந்தது. என் மனம் இருதலைக் கொள்ளி எறும்புபோல் தத்தளித்தது. என் கற்பனைகள் மிகவும் தாக்கப்பட்டன. இதற்கிடையில் என் நண்பன் காந்தியினுடைய, "பால்யவிதவைகளின் கதி என்ன?" என்ற வினா என் மனதில் தோன்றிற்று. அதே சமயத் தில் அவன் கடைசியில் சொன்ன, "விதவையானலென்ன?" என்ற வாக்கு மட்டும் என்னை, என்னால் அளவிட முடியாத ஓர் இன்ப சாகரத் தில் கொண்டுபோய் ஆழ்த்தியது.

P. PARAMAGURU,
II U. C.

P. LALL SINGH,

Pilot Officer, R. A. F., Ambala.

Lall Singh was a student of our Honours School of Economics last year. He was, all the time of his stay in the University, a Senior Rover Mate in the University Rover Crew. We feel justly proud of him and wish that more of our students had his pluck.

काकसन्देशः

प्रथमोच्छ्वासः

कारागारे त्रिशिरनगरे बन्धनं वर्षभोग्यं
कश्चिल्लब्ध्वा कनकवलयस्तेयतश्चोरवर्यः ।
वासश्चक्रे धरणिपभटैः खङ्गहस्तैस्सुगुप्ते
स्तेनैः क्रूरैरघशतकरैर्घातकैश्चापि पूर्णे ॥ १

तस्मिन् बन्धे कतिचिदबलाविप्रयुक्तःस चोरो
नीत्वा मासान्निगडितपदो भीषणो रक्तनेत्रः ।
याते मध्यं सवितरि दिवः काकमाश्लिष्टजालं
मूर्तं पापं सकलभुवनस्येव घोरं ददर्श ॥ २

तस्य श्रुत्वा रटितमनिशं वायसस्यातिरूक्षं
निर्निद्रोऽभूद्धरणिशयनः स्वप्नभोगं विहाय ।
एकाक्षं तं मषिमयतनुं स्तेनभूतं खगेषु
प्रोवाचैवं मधुरवचसा श्लाघयंस्तस्करोऽसौ ॥ ३

वंशे जातं भुवनविदिते शक्रसूनोरुदग्रे
जानामि त्वां विजितपवनं वेगतःपक्षिचोरम् ।
भक्त्या नित्यं निगमविधिना पिण्डकैर्विप्रवर्या
आहूयोच्चैस्तिलकणयुतैस्तन्वते यस्य पूजाम् ॥ ४

भार्याया मे सदयमधुना पक्वजम्बूफलाभो
दूतो भूयात् प्रियसख भवान्नागपट्टणस्थितायाः ।
कोऽन्यो मेऽत्र प्रियहितकरः पक्षिवर्य विना त्वां
कारागारे भटवरशतै रक्षिते राजकीयैः ॥ ५

प्रस्थायास्माद्विहग निलयान्मातृभूतस्य शम्भोः
पाथेयार्थं चतुर हर भो नारिकेलस्य खण्डम् ।
चञ्च्वा यत्र द्युमणिकिरणैः शोषणार्थं द्विजेन्द्र
प्रौढस्तेन प्रसृतमवनौ तैलिकानां गृहेषु ॥ ६

गत्वा तस्मान्नगरनिकटाद्योजने मन्दवाहिन्
निम्बं प्राप्तः परिणतफलैर्भूषितं तुङ्गशाखम् ।
रात्रिं तस्मिन्नय विगतभीराश्रितोदग्रशाखः
स्वैरं भुक्त्वा सरसमधुराण्यातुरस्तत्फलानि ॥ ७

क्रोशं गत्वा तिरुवरपुरं नाम तुङ्गद्रुमौघं
ग्रामं प्राप्तः पवनगमनो मर्कटीर्द्रक्ष्यसि त्वम् ।
स्कन्धात्स्कन्धं तरुषु शिशुभिः संपतन्तीर्विशङ्कं
श्लिष्टैस्साकं सुदृढमुरसि प्रोद्धता दीर्घपुच्छाः ॥ ८

ग्रामे तस्मिंस्त्वरय वनिता गेहकृत्याय कल्ये
काकाशब्दैर्मधुरमधुरैः स्निग्धगम्भीररावैः ।
का निद्राति क्षयमुपगते रात्रिकाले वधूः का
जाड्यं हित्वा भवनमधुना मार्जयेति ब्रुवंस्ताः ॥ ९

शोलंपट्टिं प्रथितयशसां तस्कराणां निवासं
शून्यं वृक्षैः पथि परिहरन् सत्वरं याहि पूर्वाम् ।
ग्रामे यस्मिन्श्वपचहतकाः काकमांसप्रलुब्धाः
कूटैर्यन्त्रैश्चटुलगतयो वायसान्वञ्चयन्ति ॥ १०

आलक्कुडिं करटवर भोः प्राप्नुहि प्रोन्नतस्त्वं
प्रीता यस्मिन् कृषकवनितास्त्वद्वपुस्तुल्यशोभाः ।
क्षेत्रेक्षेत्रे कटिधृतघटाः सस्यमाश्यानमूलं
सायंसायं विमलसलिलं सादरं पाययन्ते ॥ ११

तत्र क्षेत्रेष्वरुणनयनां पुत्रिकां घोररूपाम्
उद्दण्डोग्रां विकृतवदनां वायसत्रासनार्थम् ।
ग्राम्यैर्न्यस्तां पृथुलजठरां द्रक्ष्यसि ध्वांक्षवर्य
श्यामैः पक्षैःस्थगितशिरसं मृन्मयीं भीषणाभाम् ॥ १२

श्रोप्यस्यत्र प्रहतपटहादुद्गतं भीषणश्चेत्
क्षेत्रेषु त्वं तुमुलनिनदं रक्षिभिः सस्यकानाम् ।
माभूर्भीतो विहग सहसा धृष्टतां दर्शयित्वा
तूष्णीं तेभ्यः कपिलकचवद्धान्यगुच्छं मुषाण ॥ १३

किञ्चिद्दूरं वियति विचरन् प्राप्स्यसि ग्रामवर्यं
भूतल्लूरित्यवनिविदितं मण्डितं विप्रगेहैः ।
यत्र त्यक्त्वा सरसि महिषान्गोपकाः केलिचर्यां
किट्टिप्पुलित्यतिरसवतीं विश्रुतामाचरन्ति ॥ १४

तञ्जावूरित्यवनिपगृहैर्भूषितं गोपुरैश्च
प्रीत्या शीघ्रं रुचिरनगरं विश्रुतं गच्छ तस्मात् ।
यस्मिन् पौरा रजनिमनिशं नृत्यगीतादिरक्ता
नानावाद्यैः श्रवणमधुरैः प्रत्यहं यापयन्ति ॥ १५

अम्मापेट्टा इति नयनयोरुत्सवस्थानमारात्
गत्वा रूढे नभसि तपने नातिदूरे विपण्याः ।
श्यामैः पर्णैः पवनचपलैः व्याप्तशाखं फलैश्च
न्यग्रोधं त्वं करटनिवहैराश्रितं पश्य हृष्टः ॥ १६

वृक्षे तस्मिन् हरितशिबिरभ्रान्तिहेतौ दलौघै-
रातिथ्यं त्वं भज सविनयं वायसानां समाजे ।
कुक्षिं सम्यक् परिणतफलैः पूरयित्वा सखे मां
स्मृत्वा मित्रं व्रज पुनरपि प्राङ्मुखः क्षुन्निवृत्तौ ॥ १७

कोविल्वण्णीं धनिकसदनैः शोभमानां पुरस्तात्
गत्वा शीघ्रं भज हरिपदं निम्नगायाः समीपे ।
अह्नो मध्ये सरिति पुलिनेष्वास्तृतं द्रक्ष्यसि त्वं
पिप्पलृयोघं सदृशमधरैर्योषितां विद्रुमाभम् ॥ १८

नीडामङ्गले यदि भवति ते पक्षयोरध्वखेदः
स्वैरं धृष्णुर्दहनशकटस्योपरि ध्वाङ्क्ष गच्छ ।
किञ्चिद्दूरं विहर रहसि स्वस्थपक्षो विशङ्कः
चोरैश्चीटी कितवचरितैस्त्वादृशैः क्रीयते किम् ॥ १९

कृत्तानल्लूरिति कुनगरीं प्राप्य वेगेन पश्चा-
द्वीथीस्तस्याः प्रविश मुदितश्चौर्यशास्त्रप्रवीण ।
मीनान्द्रक्ष्यस्यवनिसिकतेष्वास्तृतानातपार्थं
गुप्तान्बालैर्मलिनवसनैः कामिनीनेत्रतुल्यान् ॥ २०

चञ्च्वा हृत्वा विधुतलगुडान् बालकान्वञ्चयित्वा
मीनं शीघ्रं विटपिशिखरं प्राप्नुहि ध्वांङ्क्षधुर्य ।
काकाशब्दैः कृतविहसनस्तत्र तिष्ठन्मुहूर्तं
भुक्त्वा मत्स्यं पत पुनरपि प्राक्समुद्रं प्रयातुम् ॥ २१

ग्रामात्तस्माद्द्विजयपुरमित्यासमुद्रं प्रसिद्धं
क्षेत्रं गच्छ त्रिभुवनगुरोस्त्यागराजस्य यस्मिन् ।
रम्योत्तुङ्गैर्गगनतलगैराश्रितैः कौशिकौघै-
रट्टैरास्ते रुचिरविपुलं मन्दिरं मन्मथारेः ॥ २२

तस्यवाग्रे हरितसलिलं शोभते पुण्यतीर्थं
पद्मावासं पृथुतमसरो विश्रुतं चोलदेशे ।
स्नात्वा तत्र द्विजयुवतयःपूरयित्वा च कुम्भान्
सोपानानि स्तनभरवशान्मन्दमन्दं तरन्ति ॥ २३

तस्मिन्स्नात्वा सरसि रुचिरे कूलतो नातिदूरे
भूयोभूयो विमलवपुषा राजमानो मषीवत् ।
देवं स्थाणुं गणपतिगुरुं सेवितुं साम्बमूर्तिं
गच्छान्तस्त्वं मुदितहृदयो मन्दिरस्यादरेण ॥ २४

दृष्ट्वा देवं पृथुलसुरथे नीयमानं जनौघै-
र्नत्वा भक्त्या स्तुतिपरगिरा वेदविद्भिप्रवक्त्वम् ।
काकाशब्दैः चमकसदृशैः प्रीणयित्वा त्रिनेत्रं
माषापूपं हर शिशुकरात्प्रातराशाय चञ्च्वा ॥ २५

सङ्क्रान्तेषु द्युमणितुरगेष्वादरादुत्तराशां
गच्छ ग्रामं विहगवर भोः कीवलूरं परेद्युः ।
नद्यां यत्र द्विजयुवतयो भूषिताःकौशरत्नैः
काकान्भक्त्या रुचिरशबलैः पूजयन्त्यन्नगोलैः ॥ २६

पात्रे पार्णे हरितसुभगे सस्मितं सुन्दरीभिः
क्लृप्तां पूजां द्विजगणगुरो स्वीकुरुष्व प्रसन्नः ।
काकाशब्दैर्वितर सुचिरं स्वाशिषस्तासु भूरीः
पश्चान्मित्रं मनसि कलयन् पूर्वदेशं प्रयाहि ॥ २७

शिक्कल्नाम्ना विदितविभवं कार्तिकेयेन पूतं
गत्वा ग्रामं पितुरपि गुरुं देवदेवं नमस्व ।
वृद्धा यस्मिन् रजनिसमये विप्रनार्यः स्वकीयान्
बालान् रम्यां परिणयकथां वलिदेव्या ब्रुवन्ति ॥ २८

प्रस्थायास्माद्धरसुतगृहात् क्रोशमात्रं गतस्त्वं
द्रक्ष्यस्याशु प्रथितनगरं नागपट्टणं मदीयम् ।
कूपा यस्मिंल्लवणसलिला मक्षिकाश्चालिपीना
यन्मन्यन्ते नरकमितरन्निर्मितं सिन्धुकूले ॥ २९

इति काकसंदेशे महाकाव्ये मार्गवर्णनं नाम प्रथमोच्छ्वासः
समाप्तः ॥

M. R. RAJAGOPALAN.

श्रीः

॥ नारदः ॥

आसीत् पुरा कस्मिश्चित् ग्रामे कश्चन विप्रः अधीतनिखिलश्रुतीतिहासपुराणो धार्मिकः सदाचारसंपन्नः परमभागवतः परोपकारी च। अथैकदा केचन भागवतास्तस्मिन् ग्रामे विजयं चक्रुः। ते च तद्ग्राम देवालये भगवत्सेवां कुर्वन्तः कञ्चित्कालं तत्र वस्तुमैच्छन्। तद्ग्रामस्थो भागवतः तत्र समागतानां तेषां मनोभावं विज्ञाय तदनुगुणं सकलं स्वगृह एव कृतवान्। अपि च तद्भागवतकैङ्कर्ये स्वदास्याः पुत्रं नियोजयामास।

समागतास्तु भागवताः सुशीलाः भक्तिमन्तः सर्वदा भगवद्ध्यानपराः तन्नामानि कीर्तयन्तः तदवतारलीलावैभवं सविस्तारं प्रकटयन्तः शान्तिप्रमुखसकलकल्याणगुणसंपूर्णाः असूयादि दुर्गुणरहिताः अत्यानन्द भरिताश्च बभूवुः। भागवतकैङ्कर्यधुरंधरः स दास्याः पुत्रः तेषां भागवतानां आचरणादि प्रतिदिनं संपश्यन् तन्मार्गावलंबनं कर्तुमिच्छन् तद्वत् स्वयमपि सुशीलः सदाचारवान् भक्तिमांश्च भवितुमारभत। तस्य एतादृशं सत्स्वभावं दृष्ट्वा सन्तुष्टास्ते भागवताः तस्मिन् स्वप्रीतिं प्रदर्शयन्तः ईश्वरोपासनविधिमपि समुपदिशन्। सोऽपि तथैव भक्तिमान् श्रद्धालुश्च ईश्वरमाराधयन्नासीत्।

कतिपुचिन्मासेषु गतेषु ते भागवताः अन्यद्दिव्यक्षेत्रं गन्तुं तस्मात् ग्रामात् प्रतस्थिरे। तदा स दास्याः पुत्रोऽपिताननुगन्तुमयतत। तदा भागवतास्तं एवं बोधयामासुः "त्वत् साहाय्यम् प्रतीक्षमाणां त्वज्जननीं परित्यज्य नानुगन्तव्यम्। अस्मदुपदिष्टविधिप्रकारेण ईश्वरं समाराधयन् अत्रैवसुखमास्स। प्रतिदिनं त्वत् कुशलं चिन्तयतो यजमानस्यास्य सेवां

कुरु । तस्मात् ते भक्तिः सत्सहवासः ईश्वरकृपा च दिने दिने वृद्धिमेष्यन्ति । अतस्ते मातरं यजमानं च परित्यज्य नानुगन्तव्यमधुना" इति । ततस्ते स्वोद्दिष्टं स्थानं जग्मुः।

बालकस्तु गुरूणां तेषां भागवतानां आज्ञामनुल्लङ्घयन् तदाज्ञाबद्धः तत्रैव स्वयजमानसेवां कुर्वन् स्वमातरं च पोषयन्नवर्तत । अथ कस्मिश्चिद्दिने रात्रौ स्वमात्रा सह यजमानस्य गृहात् प्रतिनिवृत्तः स्वोटजं प्रति जगाम । मध्येमार्गं कश्चन सर्पः तन्मातरमदशत् । तेन सद्यः सा मृता । ततः परं स क्रमेण स्वमातुश्चरमक्रियाः सर्वाः परिसमाप्य स्वयजमानान्तिकं गत्वा व्यजिज्ञपत् "स्वामिन्! इतःपरं एतादृक्सेवां परित्यज्य ईश्वर सेवया कालक्षेपं कर्तुं भवदाज्ञा प्रतीक्ष्यते ; अनुगृहाण" इति । शील सद्गुणैः उत्तमः स विप्रभागवतः अतिकृपया दास्याः पुत्रस्य प्रार्थनामङ्गीकृत्य सन्तुष्टस्तदनुगुणं साहाय्यं बहुशः कृत्वा तथेत्यनुज्ञां ददौ ।

ततस्सबालको हिमाचलं प्राप्य तत्रैकस्मिन् स्थले वसन् भगवन्तं ध्यायन् दिने दिने भुञ्जानः वन्यकन्दमूलादि पदार्थान्, कालं क्षेपयन्नासीत् । एवं स्थिते एकदा तद्भगवध्यानकाले अत्यन्तातिशयः प्रकाशः कश्चिददृश्यत । तद्दर्शनमात्रेणैव तन्मनस्युदितानन्दस्यावधिर्नासीत् । किन्तु तज्ज्योतिः सद्य एव अन्तरधात् । तेन दुःखितः स बालकः पुनस्तद्दर्शनोत्सुकः 'पुनः कदा मया दृश्येत' इति चिन्तायुक्तः तदेक ध्यानपरो बभूव । तदा गगनवाण्युदभूत् "भो बालक! भगवत्स्वरूप मीदृशमिति प्रदर्शयितुं तज्ज्योतिरुदभूत् । सर्वदा यथात्वमद्युना ईश्वरं भजमानोवर्तसे तथैवानुतिष्ठ । ततः कालक्रमेण सर्वदा भगवध्यानानन्द प्राप्तिहेतुं महद्भाग्यं प्राप्तुमर्हसि" इति ।

तच्छ्रुत्वा स बालकः मनः समाधाय बहुकालमीश्वरं भजमानः महाप्रलयकाये चतुर्मुखब्रह्मणः मनसि अन्तर्दधौ । पुनः सृष्टिकाले स

बालकाः तद्ब्रह्मणोमानसपुत्रो भूत्वा 'नारदः' इति नाम प्राप्य बहिर्प्रकाशत । स एव नारदः त्रिलोकसञ्चारी सर्वदा भगवन्नामोच्चारणं कुर्वन् सर्वेषां मनसि भगवत्भक्तिमभिवर्धयन्नास्ते । तेन अनेकातिशय कर्माणि कृतानि । तेष्वेकमत्रोदाहरामि ।

परिसमाप्तपुराणेतिहासः श्रीवेदव्यासः एकदा "मया सर्वलोकोपकारः कृतः" इति हृष्टो गङ्गातीरे ध्यानयोगं प्राप । तस्य मनस्तु ननिष्कल्कमभूत् । तस्य कारणमविज्ञाय भ्रान्तचित्ततयोपविशन्तं तमुपगम्याब्रवीन्नारदः "मुनिपुङ्गव! लोकोपकाराय भवद्भिः पुराणेतिहासादिग्रन्थाः रचिताः । ते धर्मान् तत्संबद्धविषयांश्च केवलमुपदिशन्ति । भगवतः निष्कलङ्कमहावैभवं नोपदिशन्ति सम्यक् । अनेन जनाः धर्मावसानमदृष्ट्वा उद्भ्रान्तचित्ता बभूवुः । धर्मस्यप्रभुरच्युतः इति किञ्चिदपि न जानन्ति । अतस्ते अज्ञातभगवद्विषयाः संसारचक्रवर्तिनः भिन्ननौका इव संसारसागरे मग्नाः अविद्याझंझावाताभिहताः स्वपदाच्च्युतवन्तः दुःखमनुभवन्ति । भक्तिरहितधर्मः रसरहितफलेनसमः । तस्मात् लोकोज्जीवनार्थं, भगवता स्वेच्छयाकृतं लीलावैभवं विशदीक्रियताम् । एतत्कालपर्यन्तं एतादृशकर्माणि न भवद्भिः कृतानि । तेनैव दोषेन मनःक्लेशः प्राप्तः । भक्त्या जनाः मुक्ताभवेयुः इति निरूपयितुं अत्र मे वृत्तान्तः उदाह्रियते । श्रूयताम्" इति स्ववृत्तान्तमकथत् तच्छ्रुत्वा स व्यासः तदनन्तरं श्री भागवतं प्रथमतः स्वपुत्रं शुकं उपादिशत् । ततस्तन्मूलेन लोकानुज्जीवयामास । तस्मात् भगवद्विषयज्ञानपूर्विका संसारदुःखनिवृत्तिः मुक्तिश्च सुप्रसिद्धा इति जानीमः वयम् ।

S. SESHADRI,
II Class.

श्रीः

॥ तेन विना तृणमपि न चलति ॥

(उत)

॥ देवानां दैवसन्दर्शनम् ॥

भोः! प्रियसहपाठिनः! संप्रति लोके प्रायेण जनाः अर्थज्ञानेन वा न वा 'तेन विना तृणमपि न चलति' इति कथयन्तः पदे पदे वेदान्त-विषयालापनं कुर्वन्ति । तद्विषयं प्रति केचित् जनाः आधुनिकाः कस्माद्वा परिहसन्ति । अतः प्रियवयस्याः! तत्सनातनवाक्यं सत्यमिति निरूपयितुं काञ्चन वैदिकीं कथां अत्र उदाहरामि । अनसूयया सावधानं परामृश्यतां इति सविनयं संप्रार्थये ।

पुरा किल देवा असुराः च परस्परं महत् युद्धं चक्रुः । तत्र भगव-तस्साहाय्येना जयन् देवाः । अथ गच्छता कालेन देवाः स्वजयप्राप्ति-हेतुमचिन्तयन्तः मदान्धाः अटन्तिस्म । तदा सर्वजीवदयापरः श्रीभगवान् तेषां अज्ञाननिवृत्तिपूर्वकं ज्ञानप्रदानं कर्तुं स्वपरमकृपया सर्वलोक-भयङ्करं घोरतम् महद्भूताकारं वहन् सुराणामग्रतः आविर्भूयातिष्ठत् ।

तद्रूपं दृष्ट्वा अमराः अतिभीताः बभूवुः । ततस्तेषां 'तत् किं?' इति जिज्ञासा बभूव । तस्मात् ते अग्निं आलोक्य, "त्वमेव ज्वलन् सर्वान् पदार्थान् तदन्तर्यामी प्रकाशयसि। अतस्त्वं तद्भूतान्तिकं गत्वा तद्वृत्तान्तं सम्यक् विज्ञाय पुनस्समायाहि" इत्यूचुः । तच्छ्रुत्वा सपद्येव गत्वा स पावकः तद्भूतं ददर्श। तदाऽगतं अनलं विलोक्य तद्भूतमपृच्छत्— 'कस्त्वं? किमर्थं अत्र आगतवान्? किं कर्तुं शक्यते त्वया?' इति ।

तदा स हुताशनः प्रत्यब्रवीत्— 'अहमेव ज्वलनः। जातवेदा इति च मे नामान्तरं। प्रपञ्चस्थान् सर्वान् पदार्थान् भस्मीकर्तुं शक्नोमि' इति। एतद्वचनं निशम्य तन्महद्भूतमवदत्—'तथाचेत् एतत् तृणं दह्यतां' इति, किंचित् तृणं ज्वलनस्याग्रतः संस्थापयतिस्म। सद्य एव स वैश्वानरः स्वपूर्णशक्तिं प्रकटयन् तृणं दग्धुमयतत। तत् दैवसङ्कल्पात् विसृष्टं तृणं तस्याः दैवशक्त्याः अत्यल्पीयस्या स्वशक्त्या न दग्धुमशकत्। तदा आत्मशक्त्या अदग्धम् तृणं वीक्ष्य खिन्नमनाः स कृपीटयोनिः पुनर्देवान्तिकं जगाम, अब्रवीच्च—"देवाः! मया दृष्टं तद्भूतं। मां दृष्ट्वा तन्महद्भूतं मद्वृत्तान्तमपृच्छत्। ततो ज्ञातवृत्तान्तं तत् मदग्रे किंचित् तृणं व्यसृजत्, मां अवदच्च;—'त्वं सर्वशक्तोऽसि चेत् तृणमेतत् त्वया दह्यतां' इति। येनकेन प्रकारेणाऽपि तत् कर्तुं नाशक्यत। ततः परं क्षणमपि तत्र स्थातुं अशक्तस्सन् भीत्या प्रतिनिवृत्तोऽहं। इतः परं युष्माभिः क्रियतां यत्किंचित्" इति।

ततः पुनर्देवाः वायुं वीक्ष्य भूतवृत्तान्तज्ञानोत्सुकाः अवदन्—'वायो! त्वमेव सर्वत्र गन्तुं शक्तः। त्वयैव सर्वं कर्तुं शक्यते। अतस्त्वमेव सर्वं ज्ञातुं शक्नोषि। इदानीं त्वमेव भूतवृत्तान्तं ज्ञात्वा पुनरायाहि' इति। तथेति सोऽपि वायुः तद्भूतान्तिकं गत्वा यत्किंचित् प्रष्टुमारभत। तत्पूर्वमेव वायुं दृष्ट्वा तन्महद्भूतं पप्रच्छ—'कस्त्वं? किमुद्दिश्य इहागतः? किं कर्तुं शक्यते?' इति। तदा तत्प्रत्यब्रवीद्वायुः—'अहमेव वायुर्नाम। प्रपञ्चस्थान् सर्वान् पदार्थान् मच्छक्त्यापहर्तुं शक्नोमि। मातरिश्वा इति च मे नामान्तरं कथ्यते' इति। पूर्ववत् तद्भूतं किंचित् तृणं वायोरग्रतः प्राक्षिपदवदच्च—'सर्वपदार्थापहरणे समर्थस्त्वं एतदप्याहुर' इति। तदैव स समीरणः स्वपरिपूर्णशक्तिं प्रदर्शयन्नपहर्तुमयतत तत् तृणम्। तथापि अल्पशक्तिमता अनेन वायुना

तत् तृणं किंचिदपि चलितुं नाशक्यत । तद्विज्ञाय तत् क्षणमेव स वायुः भीत्या त्वरितं देवान्तिकं जगाम ।

तदा समागतं लज्जावन्तं नीतिमन्तं वायुं दृष्ट्वा तं परित्यज्य ते सर्वे देवाः इन्द्रं प्रार्थयामासुः । तदङ्गीकृत्यामराधिपः भूतान्तिकमाशु जगाम । तं दृष्ट्वा तन्महद्भूतं अन्तरधात् । तदा तद्भूतमदृष्ट्वा भ्रान्तचित्तः यदा स्वदृष्टिं व्योम्नि प्रासारयत् तदा सर्वालङ्कारसंयुता ब्रह्मविद्यास्वरूपिणी उमा संदृष्टा । तां उमां देवाधिराजः स्तुत्वा व्यजिज्ञपत् 'अम्ब ! इतः पूर्वं अत्र किंचन भूतं संदृष्टम् । अचिरेणैव कालेन तदन्तरधात् । तत् किमिति जिज्ञासा वर्तते । तदावेदयितुं सविनयं संप्रार्थये' इति । तच्छ्रुत्वा सा भगवती तं प्रत्यब्रवीत् "देव देव ! भगवानेव तद्रूपं प्राप्य युष्मदग्रतः आविर्बभूव । किमिति, चेत् यस्य भगवतस्साहाय्येन देवासुर युद्धे युष्माभिः देवैः प्राप्तो विजयः ; तदविज्ञाय यूयं 'वयं शक्ताः, वयं शक्ताः' इति यदज्ञानेन प्रलपन्तः न कदापि दैवं चिन्तयन्तो वर्तध्वे । तन्निवारणाय स भगवान् एतन्महद्भूतरूपेण अवतीर्यातिष्ठत् , प्रादर्शयच्च स्वमाहात्म्यम् । इतः परं वा दैवं चिन्तयद्भिः सुज्ञानवद्भिः भूत्वा स्थीयतां" इति । तदुपदेशं प्राप्य तथैव तदारभ्य भगवद्ध्यानपराः भगवत्कृपया सुखेनावसन् ।

तदैवं यस्मात् सर्वेषु देवेषु अनलानिलदेवेन्द्रैः एव तद्भूतवृत्तान्तं ज्ञातुं यत्नः कृतः तस्मात् ते एव अग्रगण्याः बभूवुः । तेषु त्रिषुदेवेषु इन्द्रेणैव तद्भूतवृत्तान्तमुपदेशमार्गेण संज्ञातं तस्मात् इन्द्रे एव तेषां मुख्यतमो बभूव ।

भोः प्रियवयस्याः ! तस्मादेव कारणात् साधुभिः 'तेन विना तृणमपि न चलति,' इत्युक्तम् ॥

77354

THE EXCHANGE LIST

The Madras Christian College Magazine.

A Government College Miscellany, Mangalore.

The Kumbakonam College Magazine.

The Magazine, St. Thomas' College, Trichur.

St. Joseph's College Magazine, Trichinopoly.

The Madras Law College Magazine.

The National College Magazine, Trichinopoly.

Hindu College Magazine, Masulipatam.

Findlay College Magazine, Mannargudi.

The Hindu Theological High School Magazine, Madras.

Quarterly Journal of the Mythic Society, Bangalore.

K. R. High School Magazine, Muttra-Vasart.

The Zamorin's College Magazine, Calicut.

The Government Brennen College Magazine, Tellicherry.

The Hindustan Review.

The Jaffna College Miscellany.

" The Old College "

The Holkar College Magazine.

Journal of the Malta University Literary Society.

The Madura College Magazine.

'The Divine Life'—Rikshikesh, Dist. Dehra Dun, (North India).

The American College Magazine, Madura.

OUR ADVERTISEMENT TARIFF

				Rs.	A.	P.
1.	Back Cover	—outside—	full ...	8	0	0
2.	,, ,,	,,	half ...	5	0	0
3.	,, ,,	inside—	full ...	6	0	0
4.	,, ,,	,,	half ...	4	0	0
5.	Front ,,	,,	full ...	6	0	0
6.	,, ,,	,,	half ...	4	0	0
7.	Pages		full ...	5	0	0
8.	,,		half ...	3	0	0

1407735